2015, April 01 - 15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/125/News/2015



# தேசிய அரசு தீர்வா? பிரச்சினையா?

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அபிமான **சமகாலம்** இப்பொழுது உங்கள்
Tablet மற்றும் Android phone களில்




இப்பொழுதே Download செய்யுங்கள்!

Available on
play.google.com

Available on
www.magzter.com

Feedback and comments : samakalam@expressnewspapers.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்வியறிவு பெறாதவர்களின் அபிப்பிராயங்களை எமக்கு வழங்குவதன் மூலமாக பத்திரிகைத்துறை சமூகத்தின் அறியாமையுடன் எம்மைத் தொடர்பில் வைத்திருக்கிறது.

- ஒஸ்கார் வைல்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சமகாலம்

2015, ஏப்ரில் 01 - 15

பக்கங்கள் - 68








10 தேசிய அரசாங்கம் தீர்வா? பிரச்சினையா?

14 அழுவதா? சிரிப்பதா?

18 நெதான்யாகுவும் ராஜபக்ஷவும் இரு தலைவர்களின் ஒரு கதை

24 மகிந்த சிந்தனை கருத்தியலும் வரலாற்றைத் திரித்தலும்

31 தேசிய அரசாங்கம் எதற்காக?

34 புதிய 'தேசியத்தலைவர்'?

39 தேசிய கீதத்தை தமிழில் பாடுதல்

42 பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல் ஆபத்தான விளையாட்டும் பகிடியும்

46 லீ குவான் யூவின் பொருளாதார விந்தை

48 லீயும் இலங்கையும்

50 லீ குவான் யூ VS செய்தி

54 லீ குவான் யூ நாட்டை முன்னேற்றினார் ஆனால் அதை நம்பவில்லை

58 பாகிஸ்தான் கொள்கையில் தடுமாறும் மோடி


63 பட்ஜெட் வாசகமே விவாதமானது









*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[library stamp]

ஆசிரியரிடமிருந்து...

# பிரதமர் ரணிலும் முதலமைச்சர் விக்னேஸ்வரனும்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் வடபகுதிக்கு மேற்கொண்ட மூன்று நாள் விஜயத்தின் போது நடந்தேறிய காரியங்கள் புதிய அரசாங்கத்தின் 'நல்லாட்சி' குறித்து முக்கியமான கேள்வியை எழுப்புகின்றன. யாழ்ப்பாணக்குடாநாட்டில் வலிகாமம் பகுதியில் இராணுவத்தினால் விடுவிக்கப்பட்ட காணிகளை அவற்றின் உரிமையாளர்களுக்கு கையளிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட வைபவத்தில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனும் முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கவுடனும் சேர்ந்து வடபகுதிக்குச் சென்றிருந்த பிரதமர் விக்கிரமசிங்க பிறகு ஒருவாரம் கடந்து தனியாக அதிகாரிகள் சகிதம் அங்கு சென்று பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது. ஒரு நாள் அல்ல மூன்று நாட்கள் அங்கு தங்கியிருந்த அவர் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சந்திக்கவில்லை. பிரதமர் கலந்துகொண்ட நிகழ்வுகளில் விக்னேஸ்வரனையும் காணமுடியவில்லை. ஆனால், அதற்கு முதல் வாரம் நடந்த வைபவத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் ஏனைய தலைவர்களையும் அமைச்சர்களையும் முதலமைச்சர் முன்னின்று வரவேற்றதைக் கண்டோம்.

பிரதமர் பங்கேற்ற வைபவங்களில் முதலமைச்சரை மாத்திரமல்ல வடமாகாண சபையின் எந்தவொரு அமைச்சரையுமோ உறுப்பினரையுமோ கூட காண முடியவில்லை. ஆனால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். பிரதமரின் அலுவலகத்திலிருந்து தங்களுக்கு முறைப்படியான அழைப்புக் கிடைக்கவில்லை என்று முதலமைச்சர் தரப்பில் காரணம் கூறப்பட்டதாக தெரியவருகிறது. அத்துடன் அவ்வாறு தாங்கள் புறக்கணிக்கப்பட்டதால் முதலமைச்சர் அசௌகரியத்துக்குள்ளானதாகவும் தெரியவில்லை. அதேவேளை, தங்களது கட்சியின் நிருவாகத்தில் இருக்கும் மாகாண சபையை பிரதமர் அவமதிக்கிறார் என்பதைத் தெரிந்திருந்தும் அவரின் நிகழ்வுகளில் பங்கேற்பதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எந்தவிதமான அசௌகரியத்தையும் எதிர்நோக்கியதாகத் தெரியவில்லை. இது முதலமைச்சர் விக்னேஸ்வரன் அண்மைக்காலத்தில் எடுத்திருக்கக்கூடிய சில நிலைப்பாடுகளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருபிரிவினர் ஏற்றுக்கொள்ளவில்லையா என்ற கேள்வியைக் கிளப்புகிறது. அது பிறிதாக ஆராயப்பட வேண்டிய விவகாரம்.

பிரதமர் விக்கிரமசிங்கவுக்கும் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் இடையேயான கசப்புணர்வுக்கான அடிப்படைக்காரணம் என்ன? இது அதிகப் பெரும்பான்மையான தமிழ் மக்களுக்கு விளங்கியதாக தெரியவில்லை.

விக்னேஸ்வரனைப் பொறுத்தவரை தமிழ்ப்பகுதிகளில் மட்டுமீறிய இராணுவப் பிரசன்னம் மற்றும் தொடர்ச்சியான இராணுவமயமாக்கல் செயற்பாடுகள் குறித்து ஊசலாட்டத்துக்கு இடமில்லாத உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டவர். மாகாண சபைத் தேர்தல் பிரசாரங்களின் போதும் சரி பிறகு முதலமைச்சராக பதவியேற்றது முதல் இன்றுவரையிலும் சரி அதே நிலைப்பாட்டையே அவர் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். வடக்கில் அதீத இராணுவப் பிரசன்னம் தமிழ் மக்களின் இயல்பு வாழ்வுக்கு பெரும் இடையூறாக இருக்கிறது. அதனால், படைவாபஸ் அல்லது படைக்குறைப்பு இல்லாமல் வடக்கில் நிருவாகத்தை உருப்படியாகச் செய்ய முடியாது என்று அவர் ஆட்சியாளர்களுக்கு மாத்திரமல்ல, வெளிநாடுகளின் தலைவர்களுக்கும் இராஜதந்திரிகளுக்கும் இடையறாது கூறிவந்திருக்கிறார். வடமாகாண ஆளுநராக இராணுவப் பின்னணியுடைய ஒருவர் பதவிவகிப்பதற்கு எதிராக மாகாண சபையிலேயே தீர்மானத்தைக் கொண்டுவந்து முதலமைச்சர் நிறைவேற்றியிருந்தார் என்பது எல்லோருக்கும் தெரியும்.

பிரதமர் விக்கிரமசிங்க வடக்கில் இராணுவப் பிரசன்னம் குறித்து தெரிவித்திருந்த கருத்துக்கள் தொடர்பில் விக்னேஸ்வரன் தனது பிரதிபலிப்பை வெளிக்காட்டத் தயங்கவில்லை. அதுவே இருவருக்கும் இடையில் ஏற்பட்ட கசப்புணர்வுக்கு அடிப்படைக்காரணமாக இருக்கவேண்டும். விக்கிரமசிங்கவின் உறவுக்காரரான பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான்விஜேயவர்தன வடபகுதி இராணுவ முகாம்களுக்கு விஜயம் மேற்கொண்ட போது படைக்குறைப்பை ஒருபோதும் செய்ய முடியாது என்று தெரிவித்த கருத்தை முதலமைச்சர் கடுமையாகக் கண்டனம் செய்திருந்தார். இத்தகைய பின்புலத்திலேயே, இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு ஒரு சில நாட்கள் முன்னதாக தமிழ்நாட்டு தொலைக்காட்சி சேவையொன்றுக்கு நேர்காணல் ஒன்றை அளித்த பிரதமர் விக்கிரமசிங்க, முதலமைச்சர் விக்னேஸ்வரன் குறித்து தனது அரசியல் அனுபவத்துக்கும் அறிவுக்கும் பொருத்தமில்லாத வகையில் கருத்துக்களை தெரிவித்ததைக் காணக்கூடியதாக இருந்தது. முதலமைச்சர ர ஒரு பொய்க்காரன் என்றும் யாழ்ப்பாணம் குறித்து நான் விக்னேஸ்வரனுடன் பேசுவதில்லை. பாராளுமன்றத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடனேயே பேசுகிறேன் என்றும் அந்த நேர்காணலில் பிரதமர் கூறியிருந்தார். பிறிதொரு சந்தர்ப்பத்தில்

*(23ஆம் பக்கம் பார்க்க....)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதங்கள்













## மேற்குலகிற்கு எதிரான கருத்து

கடந்த இதழில் சர்வதேச அரசியல் பகுதியில் 'ரஷ்யாவை பூதமாகக் காட்டுவது போருக்கே வழி வகுக்கும்' என்ற கட்டுரையொன்று வெளியாகியிருந்தது. இடதுசாரி சிந்தனை கொண்ட பிரிட்டிஷ் பத்திரிகையாளரும் கார்டியன் பத்திரிகையின் இணை ஆசிரியருமான சியூமஸ் மில்னே எழுதிய கட்டுரையின் தமிழாக்கமே இது. ரஷ்யா என்பதை விடவும் அந் நாட்டின் ஜனாதிபதி புட்டினை இலக்காக வைத்தே மேற்குலக நாடுகளின் செயற்பாடுகள் அமைந்திருப்பதாக அவர் அதில் வாதிடுவதுடன், பொதுவாக மேற்குலக நாடுகளுக்கு எதிரான கருத்துக்களையே முன்வைத்துள்ளார். அமெரிக்கா மற்றும் பிரிட்டன் போன்ற மேற்குலக நாடுகளை இலக்காக வைத்து முஸ்லிம் தீவிரவாதிகள் நடத்தும் தாக்குதல்களுக்கு அந்நாடுகள் கூட்டாக இணைந்து மத்திய கிழக்கு உள்ளிட்ட இஸ்லாமிய நாடுகள் மீது பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை என்ற பெயரில் நடத்தும் தாக்குதல்களே ஏதுவாக அமைந்திருக்கின்றன என்று காரணம் கூறியவர் இந்த சியூமஸ் மில்னே. மத்திய கிழக்கில் அமெரிக்காவின் தலையீடுகள் பற்றிய நீண்டகால மனக்குமுறல்களின் பெறுபேறே அமெரிக்கா மீதான 9/11 தாக்குதல்கள் என்று அவர் வர்ணித்திருந்தார்.

சுதாகரன்,பரமசாமி, தெகிவளை.

## ஒரு வேண்டுகோள்

உள்நாட்டு அரசியல், பிராந்திய அரசியல்,சர்வதேச அரசியல் இராஜதந்திரம் என பல்துறைசார் கட்டுரைகள் சமகாலம் இதழில் வெளியாகின்றன. சமூகம் குறித்தோ அல்லது சமூகப்பிரச்சினைகளில் உள்ள அரசியல் குறித்தோ கட்டுரைகளை காணக்கூடியதாக இல்லை. மலையக சமூகம் குறித்தோ, ஏதிலியர் சமூகம் குறித்தோ அவர்களது அரசியல், நகர சேரிப்புறங்களில் வாழும் மக்களின் அரசியல், இலங்கையில் வாழும் தெலுங்கு பேசும் சமூகத்தின் அரசியல், நகர சுத்திகரிப்பாளர்களின் வாழ்வாதாரம், உரிமைகள் அரசியல் தொடர்பாக பேசுவதாக இல்லை. இதுதொடர்பாக சமகாலம் கவனம் செலுத்தவேண்டும்.

மேலும் தமிழகத்திலிருந்து வெளிவரும் உயிர்மை சஞ்சிகையில் அ.மார்க்ஸ் பெப்ரவரி 2015 இதழில் சென்னையில் வாழும் சேரிப்புர மக்கள் தொடர்பாக இரண்டு கட்டுரைகளை எழுதியுள்ளார். அதனை மீள் பிரசுரம் செய்ய முடியுமாக இருந்தால் நல்லது. மேலும் இந்தியை எதிர்ப்பவர்கள் தமிழர்கள் மட்டும்தானா என்ற கட்டுரையும் சிறப்பாக உள்ளது. சமகாலம் சஞ்சிகையும் தமிழ் நாட்டின் உயிர்மை சஞ்சிகையும் பரஸ்பர ஒத்துழைப்புடன் தமிழ் நாட்டில் சமகாலத்தை விநியோகிக்கவும் இலங்கையில்

## அமெரிக்காவின் கொடை

'இஸ்லாமிய அரசு; உலகிற்கு அமெரிக்காவின் கொடை' இது சமகாலத்தின் சர்வதேச அரசியல் பகுதியில் வெளியான ஒரு கட்டுரையின் தலைப்பு. இஸ்லாமிய அரசு என்ற ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் உருவாக்கத்திற்கு அமெரிக்கா எந்த வகையில் காரணமாக இருந்தது. அதே அமைப்பினால் அமெரிக்கா தற்போது அனுபவிக்க நேர்ந்திருக்கும் அவஸ்தைகள் பற்றியெல்லாம் அதில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், இதில் அந்த கட்டுரையின் தலைப்பு மட்டுமே கட்டுரையின் அனைத்து உள்ளடக்கத்தையும் ஒரே பொருளில் உணர்த்தி நிற்பது தான் அழகு.

விமலன் சண்முகராஜா, கரவெட்டி.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி: 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்மையை விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்ட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

அ.ஜெயபிரசாத், நோர்வூட்.

## கோதாபயவின் கருத்து


சமகாலத்தின் வாக்குமூலம் பகுதியில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷவின் கருத்தொன்று வெளியாகியிருந்தது. என்னதான் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியேற்பட்டாலும், நாம் ஒருபோதுமே நாட்டைவிட்டு ஓடிச்சென்றதில்லை என்று அவர் அதில் தெரிவித்திருக்கிறார். ஆனால், கோதாபய ராஜபக்ஷ ஏற்கனவே இராணுவத்தில் இருந்து விலகி நாட்டை விட்டுச் சென்று அமெரிக்கப் பிரஜையாகவும் மாறி அவரது சகோதரர் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி ஆகியதும் மீண்டும் நாடு திரும்பியவர் என்பது ஒருபுறம் இருக்க, தற்போது இவர்கள் நாட்டைவிட்டுச் சென்று அமெரிக்கா அல்லது ஐரோப்பா நாடுகளில் சொகுசு வாழ்க்கை வாழ முடியுமா என்பதும் பெரும் கேள்விக்குறி தான். ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் அமெரிக்கா சென்ற பசில் ராஜபக்ஷ தற்போது அங்கில்லாமல் வியட்நாம் சென்றுவிட்டதாக புதிய அரசாங்கத்தினர் கூறுவதே இதற்கு சிறந்தசான்று. சீனா அல்லது ரஷ்யா போன்ற நாடுகள் வேண்டுமென்றால் இவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தாலுமே அங்கு சொகுசு வாழ்க்கை என்பது கேள்விக்குறியாகவே இருக்கும்.

எம்.ரகுதிஸ், வட்டுக்கோட்டை.

## ரணிலின் வியூகமும் சுதந்திரக்கட்சியின் தடுமாற்றமும்

'100 நாள் தடுமாற்றம்' எனும் தலைப்பிலான கட்டுரையொன்றை சமகாலம் சஞ்சிகையில் வாசிக்கக் கிடைத்தது. 100 நாள் திட்டம் என்ற அரசியல் சதுரங்க ஆட்டத்துக்குள் ரணில் வகுக்கும் தேர்தல் தந்திரோபாயம் மற்றும் அதிலிருந்து தப்பிக்க சுதந்திரக் கட்சியினர் முன்வைக்கும் புதிய தேர்தல் முறை என்ற பொறி போன்ற விடயங்கள் பற்றி அதில் ஆராயப்பட்டிருந்தது. எல்லாமிருக்க ஒரு விடயம் மட்டும் தெளிவாகத் தெரிகிறது. நான் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் வரை எந்தப் பிரச்சினையும் வரவில்லை என்று ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பாராளுமன்றத்தில் ஒரு கூற்றை வெளியிட்டிருந்தார். அதை நிரூபிப்பது போன்றே இன்றைய எதிரணியினரின் நிலைமை இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவராக நீண்ட காலம் இருந்து சாதனை படைத்தவர் என்றெல்லாம் ரணிலை கடந்த ஆட்சியினர் கிண்டல்செய்த காலம் இருந்தது. ஆனால், உண்மையில் தமது கட்சிக்குள் எத்தனை கிளர்ச்சிகள் வந்தபோதிலும் அசராமல் அவற்றை சமாளித்தவர் ரணில். ஆனால், ஒரு ஜனாதிபதித் தேர்தலில் அடைந்த தோல்வியில் ஒரு சில மாதங்களிலேயே இன்று ரணிலின் வியூகத்தை எப்படிச் சமாளிப்பது என்று ஆட்டம் கண்டு நிற்கிறது சுதந்திரக்கட்சி என்பது மட்டும் தெளிவு.

விமல் சுரேந்திரன், மொறட்டுவ.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 03 இதழ் 19
2015, ஏப்ரில் 01 - 15

A Fortnigtly Tamil News Magazine

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@ex-pressnewspapers.lk


ஆசிரியர்
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

உதவி ஆசிரியர்
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

பக்க வடிவமைப்பு
எம்.ஸ்ரீதரகுமார்

ஒப்பு நோக்கல்
என்.லெப்ரின் ராஜ்

எனக்கு எவருமே
பயப்படவில்லை என்றால்
என்னில் அர்த்தமேதும் இல்லை
- லீ குவான் யூ



வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
சமகாலம்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்: 011 7778752, 011-7767704, 011-2327827,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்....



எனக்கு கீழ் சுகாதார அமைச்சில் பணியாற்றிய சில டாக்டர்கள் எனக்குத் தெரியாமல் அலரிமாளிகைக்கு அடிக்கடி ஓடிப்போய் உயர்மட்டத்தின் உத்தரவுகளைக் கேட்டு அதன்படி செயற்பட்டு வந்தனர். அவர்களுக்கு நான் நன்றி சொல்லக்கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் அவர்கள் அவ்வாறு செயற்பட்டதன் காரணத்தினால் தான் நான் அன்றைய அரசாங்கத்தில் இருந்து வெளியேறி இன்று நாட்டின் ஜனாதிபதியாக முடிந்தது. அவர்கள் அவ்வாறு செய்திருக்காவிட்டால், நான் இன்று உங்கள் முன் ஜனாதிபதியாக நிற்கமாட்டேன்.

*ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன*

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அதன் பிரதமர் வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவை நிறுத்துமாக இருந்தால் அவர் பிரதமராக வருவதற்கு நான் உதவுவேன். வேறு ஒரு கட்சியில் இருந்து ராஜபக்ஷ போட்டியிடுவாரேயானால்,அவரால் வெற்றிபெற முடியாமற் போகும். ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து அல்லாமல் வேறு கட்சியிலிருந்து தான் தேர்தலில் போட்டியிட்டால் தனக்கு குறைந்தது 500 வாக்குகள் கூட கிடைக்காது என்று முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச ஒரு தடவை சொன்னார். அதேபோன்றே ராஜபக்ஷவும் சுதந்திரக்கட்சியின் வேட்பாளராக போட்டியிடாவிட்டால் தனக்கும் 500 வாக்குகளும் கூட கிடைக்காது என்று ராஜபக்ஷவும் ஒரு தடவை கட்சியின் அமைப்பாளர்களுக்குச் சொன்னார்.

*சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன*






*முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ*

போர்க்காலத்தில் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது குறித்து நான் பேசியபோது என்னைப் பார்த்துக் கேலி செய்தார்கள். ஆனால், இப்போது ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் சேர்ந்து அமைத்திருக்கும் தேசிய அரசாங்கத்தை நான் விமர்சிக்கப்போவதில்லை. ஏனென்றால் நான் இப்போது அரசியல் ரீதியில் ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறேன். இந்த நாட்களில் கோவில்களைத் தவிர நான் போவதற்கு வேறு இடங்கள் இல்லை. தம்ம பாடசாலைகளிடமிருந்து வருகின்ற அழைப்புகளை ஏற்றுக்கொள்கிறேன்.

எனது தோல்விக்கு பசில் ராஜபக்ஷவே பொறுப்பேற்க வேண்டுமென்று விமல்வீரவன்ச கூறியிருந்தால் அது அவருடைய அபிப்பிராயம். ஒவ்வொருவரும் தங்களது அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்கான உரிமையைக் கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களினுடைய அபிப்பிராயங்களை மதித்து தவறுகளை நாம் திருத்திக் கொள்ளவேண்டும்.

போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் எந்த விசாரணைக்கும் எந்த நாட்டிலென்றாலும் முகங்கொடுக்க நான் தயாராயிருக்கிறேன்.

*பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனது மைத்துனர் ஸ்ரீலங்கா காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் புதிய முகாமைத்துவப் பணிப்பாளராக நியமிக்கப்படவில்லை. அவ்வாறு நியமிக்கப்பட்டதாக வெளியான தகவல் தவறானது. சரியான நடைமுறையின் பிரகாரம் நியமனம் நடைபெறுமானால், எந்தவொரு குடும்பத்தைச் சேர்ந்தவருக்கும் நியமனத்தைக் கொடுப்பதைத் தடுக்கக் கூடிய சட்டம் எதுவும் கிடையாது. ராஜபக்ஷ ஆட்சியில் குடும்பத்தினருக்கு சலுகை காட்டும் போக்கு உச்சக்கட்டத்தில் இருந்தபோது எவரும் கேள்வி கேட்பதில்லை. எனது மைத்துனர் நியமிக்கப்பட்டால் அதில் என்ன தவறு இருக்கப்போகிறது?

**நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க**



**தேசிய சுதந்திர முன்னணி தலைவர் விமல் வீரவன்ச**

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம்.பி.க்களில் சிலர் புதிய அரசாங்கத்தில் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டிருப்பது பெரும் வெட்கக்கேடாகும். படுமோசமான ஊழல் அரசியல்வாதியென்று எஸ்.பி.திசாநாயக்கவை கண்டனம் செய்தவர்கள் அவரை அமைச்சராக நியமித்திருக்கிறார்கள். உண்மையான சுதந்திரக்கட்சி எம்.பி.க்கள் மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் கொண்டு வருவதற்கான மக்கள் இயக்கத்தில் இணைந்திருக்கின்ற அதேவேளை, ஊழல்தனமானவர்கள் தனிப்பட்ட இலாபங்களுக்காக சிறிசேன அரசாங்கத்தில் இணைந்துகொண்டுள்ளார்கள்.

இப்போது நாட்டில் மூன்று ஜனாதிபதிகள் - மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

நாட்டின் தலைவர்களாக இருக்கத் தகுதியில்லாத ரணில், மகிந்த, சந்திரிகா என்ற மூன்று பேர்வழிகளிடமிருந்து மைத்திரிபால சிறிசேனவை நான் பாதுகாக்கிறேன்.



**பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க எம்.பி.**

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை துகிலுரிந்து வீதியில் கதறக்கதற இழுத்துச் செல்லப் போவதாக அச்சுறுத்திய எஸ்.பி. திசாநாயக்கவுக்கும் அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டுள்ளது. என்ன பகிடி இது.



**ஜே.வி.பி.தலைவர் அநுரகுமார திசாநாயக்க**

புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டம் நாட்டில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது என்று நாம் ஆரம்பத்தில் நினைத்தோம். ஆனால், அதன் 75 நாள் முடிவில் மக்களுக்குப் பயன்தரக்கூடிய எந்தவொரு உருப்படியான விளைவையும் நாம் காணவில்லை. ஐக்கியதேசியக்கட்சி அரசியல்வாதிகளின் தொடர்ச்சியான பேச்சுக்களைத் தவிர, உருப்படியாக எதையும் காணவில்லை.



**முன்னாள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன**

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் நீதிக்கு முகம் கொடுப்பார்கள். இது நல்லாட்சியுகம் நீதியே மேலோங்கும்.



**மாகாணசபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரன்**



கொலைக்குற்றச்சாட்டுக்களில் இருந்து என்னை விடுவித்துக்கொள்வதற்கு வாய்ப்பை வழங்கியமைக்காக நல்லாட்சி அரசாங்கத்துக்கு நான் நன்றி கூறுகிறேன்.

**துமிந்த சில்வா எம்.பி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர்
எஸ்.ஐ.கீதபொன்கலன்



உள்நாட்டு அரசியல்

# தேசிய அரசாங்கம் தீர்வா? பிரச்சினையா?

மூன்று மாத காலத்தினுள் இலங்கை அரசியலில் சாத்தியமற்றது என்று பலராலும் கருதப்பட்ட இரண்டு விடயங்களை மைத்திரிபால சிறிசேன சாதித்திருக்கிறார். ஒன்று மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதிப் பதவியில் இருந்து கவிழ்த்தமை. இரண்டாவது, இப்போது தேசிய அரசாங்கம் ஒன்றைத் தோற்றுவித்தமை.

தேசிய அரசாங்கம் என்ற சுலோகம் இலங்கை அரசியலில் புதிய ஒன்று அல்ல. விடுதலைப் புலிகளுடனான யுத்த காலத்தில், புலிகளையும் (அதனுடன் சேர்ந்து இனப்பிரச்சினையையும்) இல்லாமல் செய்துவிடும் நோக்கில் தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கை நீண்ட காலமாகவே இருந்து வந்தது. குறிப்பாக பாரிய இராணுவப் பின்னடைவுகள் ஏற்படுகின்ற போது இக்கோரிக்கை பலமடைவதைக் காணக்கூடியதாக இருந்துள்ளது. இருந்தும் அது நடைமுறையில் சாத்தியமாகி இருக்கவில்லை.

கோட்பாட்டு ரீதியாக, தேசிய அரசாங்கம் என்கின்ற போது அது நாட்டின் எல்லா (அல்லது பெரும்பான்மையான) அரசியற் கட்சிகளை உள்ளடக்கியிருக்க வேண்டும் என்று கருதப்பட்ட போதிலும், உண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியையும் சுதந்திரக்கட்சியையும் உள்ளடக்கிய ஒரு கூட்டையே குறித்து நின்றது. அந்த வகையில் நோக்குகையில், இது தொடர்பான கருத்து முரண்பாடுகளுக்கு அப்பால், இன்று ஏற்பட்டிருக்கின்ற அரசாங்கம் தேசிய அரசாங்கம் என்று கருதப்படலாம். ஏனெனில் இன்று அரசாங்கம், அதாவது ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை என்பவை இரு கட்சிகளையும் உள்ளடக்கியுள்ளமை ஆகும்.

ஒரு வகையில் நோக்குகையில், தேசிய அரசாங்கம்

**அரசாங்கத்திற்குள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கொண்டு வரப்பட்டிருப்பது ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் வழங்கப்பட்ட மக்கள் ஆணைக்கு எதிரான செயற்பாடு. இது அரசியலில் ஏற்கெனவே நிலவுகின்ற குழப்ப நிலையை மேலும் தீவிரப்படுத்தியிருக்கிறது. ஜனாதிபதியின் செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தி அதிகரிக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒன்றைச் சாத்தியமாக்கியமை ஜனாதிபதி சிறிசேனவின் ஒரு சாதனையாகக் கருதப்பட வேண்டும். ஏனெனில் அன்று 'தாய் நாட்டைக்' காப்பாற்றுவதற்காகக் கூட ஒன்றுபடாத இவ்விரு கட்சிகளும் இன்று சேர்ந்து செயற்படுவது, அல்லது ஆட்சி அமைப்பது ஒரு முக்கியமான திருப்புமுனையே ஆகும். அந்த வகையில் இது முக்கியமாக அவதானிக்கப்பட வேண்டியதாகும்.

## சிக்கல்

இன்றைய அரசாங்கம் ஒருபுறத்தில் கோட்பாட்டு ரீதியானதும் மறுபுறத்தில் நடைமுறை ரீதியானதுமான பிரச்சினைகள் சிலவற்றையும் தோற்றுவித்துள்ளமை சுட்டிக் காட்டப்படவேண்டும்.

அவ்வகையில் முதலாவது, இன்றைய அரசாங்கக் கூட்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுடன் அல்லது அதன்மூலம் விடுக்கப்பட்ட செய்தியுடன் இணங்கவில்லை என்பது முக்கியமானது. ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பான்மையான வாக்காளர்கள் சிறிசேனவுக்கு வாக்களித்தமைக்கும், ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பியமைக்குமான காரணம், இலங்கை அரசியலில் அடிப்படையான மாற்றம் ஒன்று தேவை என்று கருதப்பட்டமையேயாகும். இதற்கு பல காரணங்கள் காணப்பட்டிருந்தன. இருப்பினும் ஊழலும், அதிகாரத் துஷ்பிரயோகமும், நல்லாட்சி இன்மையும் முக்கியமாக இருந்தன.

இப்பிரச்சினைகள் ராஜபக்ஷ குடும்பத்துடன் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தன என்று கூறமுடியாது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான அரசாங்கத்துக்கும் அதில் ஒருபங்கு இருந்தது. வாக்காளருக்கு தேவையாக இருந்தது ராஜபக்ஷவை மாற்றுவது மட்டுமல்ல, அரசாங்கத்தை மாற்றுவதும் ஆகும். அதன் காரணமாகவே தேர்தலின் பின்னர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இல்லாதிருந்த ஐ.தே.கட்சி அரசாங்கம் அமைந்த போது, அதற்கு பாரிய மக்கள் எதிர்ப்பு எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை.

இப்போது அரசாங்கத்தினுள் சுதந்திரக்கட்சி கொண்டுவரப்பட்டுள்ளமை, ஜனவரி மாத தேர்தலில் வழங்கப்பட்ட மக்கள் ஆணைக்கு எதிரான செயற்பாடு என்று வர்ணிக்கப்படலாம். அவ்வகையில் இச்செயற்பாடு இப்போது பொதுவாக ஏற்பட்டுள்ள குழப்ப நிலையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தீவிரப்படுத்தியுள்ளது என்று கூறலாம். அதேசமயம் அது அரசாங்கம் தொடர்பிலான, அல்லது குறிப்பாக ஜனாதிபதியின் செயற்பாடுகள் தொடர்பான அதிருப்தியை அதிகரிக்கலாம்.

இப்போது தேசிய அரசாங்கம் அமைக்கப்படுவதற்கான தேவை என்ன என்பதும் முக்கியமானதொரு கேள்வி ஆகும். ஒரு மட்டத்தில் இது ராஜபக்ஷ என்ற காரணியுடன் தொடர்புடையது ஆகும்.

முன்னைய ஜனாதிபதிகள், ஏறத்தாழ எல்லாருமே சர்வாதிகாரிகள் போன்று செயற்பட்ட போதிலும், பதவிக்காலம் முடிவடைந்ததும் கௌரவமாக அரசியல் செயற்பாட்டிலிருந்து ஒதுங்கிக்கொண்டிருந்தனர். அந்த பெருந்தன்மையும் நாகரீகமும் ராஜபக்ஷவுக்கு இருக்கவில்லை. அதற்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது. அதாவது தேர்தல் முடிவு நியாயமானது என்று அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த அதிர்ச்சியில் இருந்து அவர் இன்றும் வெளியே வரவில்லை. பெரும்பான்மையான சிங்கள மக்களிடம் தனக்கு இன்னும் ஆதரவு இருப்பதாகவே அவர் கருதுகின்றார். அதில் ஒரு உண்மை இல்லாமல் இல்லை. இந்த ஆதரவுடன் அவர் ஒரு தேர்தலை வெல்ல முடியுமா என்பது வேறு விடயம். இருப்பினும் சிங்கள வாக்காளர் மட்டும் சேர்ந்து ஜனாதிபதியை தெரிவு செய்வது இல்லை என்கின்ற யதார்த்தத்தை பதிவு செய்ய அவரது புத்தி மறுக்கின்றது.

அதன் காரணமாகவே, மீண்டும் அரசியலுக்கு வரப்போகின்றேன் என்ற தோரணையிலான செயற்பாடுகளும் சமிக்ஞைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இது நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவாளர்களூடாகவும் முன்னெடுக்கப்படுவது யாவரும் அறிந்ததே. இச்செயற்பாடுகள் ஜனாதிபதியின் பதவிக்கு குறுகிய காலத்தில் எந்த அச்சுறுத்தலையும் ஏற்படுத்தப் போவதில்லை என்றபோதிலும், இரண்டாவது மட்டத்தில் அரசியல் அதிகாரத்தை பாதிக்கக்கூடிய ஆற்றலையும் சுதந்திரக் கட்சியை பிளவு படுத்திவிடக்கூடிய ஆற்றலையும் கொண்டிருந்தது என்பதில் சந்தேகம் இல்லை.

குறிப்பாக, சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற வகையில் அதனை பிளவுபடாமல் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஜனாதிபதி சிறிசேனவுக்கு இருந்தது. சுதந்திரக் கட்சிக்கு அதிகாரத்தில் பங்கு கொடுக்காத போது பிளவு யதார்த்தமாவதற்கான சாத்தியம் நிறையவே இருந்தன. எனவே, இன்றைய நிலையில் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டதற்கான காரணமாக ஜனாதிபதியின் சுதந்திரக் கட்சியிலுள்ள பிளவைத் தடுப்பதற்கான விருப்பம் சுட்டிக்காட்டப்படலாம்.

இருப்பினும் இது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட நம்பிக்கையே என்பதில் சந்தேகமில்லை. சுதந்திரக் கட்சியின் முதலாவது மட்டத்திலான தலைவர்கள் மட்டுமே அரசாங்கத்தினுள் இணைக்கப்பட்டுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தினுள் சுதந்திரக்கட்சிக்கு அதிகாரத்தைப் பரவலாக்குவது அவ்வளவு இலகுவானதல்ல. அதாவது சுதந்திரக்கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்களை இவ் ஏற்பாட்டின் மூலம் திருப்திப்படுத்திவிட முடியாது. இறுதியாக ராஜபக்ஷவை அரசியலுக்கு அழைக்கும் கூட்டம் இரத்தினபுரியில் இடம்பெற்றபோது 25 சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டதாகக் கூறப்படுகின்றது. எனவே, இவ் ஏற்பாட்டின் மூலம் அதாவது தேசிய அரசாங்கம் என்ற ஏற்பாட்டின் மூலம் சுதந்திரக் கட்சியின் எல்லா அதிகார மூலக்கூறுகளையும் திருப்திப்படுத்திவிட முடியாது. எனவே, தேசிய அரசாங்கம் என்பது சுதந்திரக் கட்சியிலான பிளவு என்ற பிரச்சினையை கையாள்வதற்கான ஒரு தற்காலிகமான வழிமுறையாகவே கருதப்படவேண்டும்.

இதன் மூலம் 'ராஜபக்ஷ பிரச்சினையை' சிறிசேன முழுமையாகத் தீர்த்து விட முடியாது. அதற்கு வேறு ஒரு வழிமுறையையும் தந்திரோபாயத்தையும் கையாள வேண்டிய அவசியம் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

## எதிர்க்கட்சி

தேசிய அரசாங்கம் என்ற ஏற்பாட்டினால் ஏற்பட்டுள்ள நடைமுறை ரீதியான சிக்கல், பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி எது, எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பது. இக்கேள்வி இப்போது ஏற்பட்டுள்ள தெளிவற்ற அரசியல் நிலையை மேலும் சிக்கலாக்கி உள்ளது. ஒரு சிறுபான்மை அரசாங்கம் எவ்வித பாரதூரமான சவால்களும் இன்றி பதவியில் இருக்கின்றமை போதுமான தெளிவின்மையை ஏற்படுத்தி இருந்தது. இப்போது சுதந்திரக்கட்சி ஆளும் கட்சியாகவும் எதிர்க்கட்சியாகவும் இருக்க முற்படுகின்றமை ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதல்ல.

பொதுவாக பகுத்தறிவுக்கு ஏற்புடையதாக இல்லாத கடும் தேசியவாதம் பேசுகின்ற விமல் வீரவன்சவின் வாதங்கள் கூட இவ்விடயத்தில் கருத்துடையவை போலத் தோன்றுகின்றன. நிமல் சிறிபால டி சில்வா எதிர்க்கட்சித் தலைவராக தொடர்வதை விமல்வீரவன்ச விரும்பவில்லை. சாதாரண பாராளுமன்ற நடைமுறைகளுக்கு ஏற்ப, அடுத்து பெரும்பான்மையுடைய கட்சி எதிர்க்கட்சியாகவும் அதன் பாராளுமன்றக் குழுவின் தலைவர் எதிர்க்கட்சித் தலைவராகவும் நியமிக்கப்படவேண்டும். எனவே, பாராளுமன்றத்தின் அடுத்த அமர்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட வேண்டும்.

இருப்பினும் இது தொடர்பில் பாராளுமன்றத்தில் உள்ள பெரும்பான்மைக் கட்சிகளிடையே ஒரு எதிர்ப்பு உள்ளது போல் தோன்றுகின்றது. இதன் காரணமாகவே சிறிபால டி சில்வா தொடர்ந்தும் எதிர்க்கட்சித் தலைவராக செயற்படுவார் என்று கூறப்படுகின்றது. இது ஏற்றுக் கொள்ளப்படக்கூடியது அல்ல. அரசாங்கம் பாராளுமன்ற ஜனநாயக விதிமுறைகளை துஷ்பிரயோகம் செய்ய முடியாது. அவ்விதமான செயற்பாடு நல்லாட்சிக்கு எதிரானது என்று புரிந்துகொள்ளப்பட வேண்டும். இப்போது பாராளுமன்றத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள உறுப்பினர்கள் கையெழுத்திட்ட கடிதம் ஒன்றின் மூலம் தினேஸ் குணவர்தன எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளதாகக் கூறப்படுகின்றது.



இதுவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை தவிர்த்து விடுகின்ற செயற்பாடே ஆகும். ஆயினும் வெறுமனே பெரும்பான்மை கையெழுத்துக்களுடன் தினேஷ் நியமிக்கப்பட முடியாது. அத்தகைய கோரிக்கைக்கான கையெழுத்து ஐ.தே.கட்சி மற்றும் சுதந்திரக் கட்சித் அல்லாத உறுப்பினர்களிடம் இருந்தும் பெறப்பட வேண்டும். இப்போது இவ்விரு கட்சிகளும் அரசாங்கத்திலும் இருந்து கொண்டு எதிர்க்கட்சி தலைவரையும் தீர்மானிக்க முடியாது.

**தேசிய அரசாங்கம் என்ற ஏற்பாட்டினால் தோன்றியுள்ள நடைமுறைச் சிக்கல் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி எது எதிர்க்கட்சித் தலைவர் யார் என்ற கேள்வியைக் கிளப்பியிருக்கிறது. சுதந்திரக்கட்சி ஆளும் கட்சியாகவும் எதிர்க்கட்சியாகவும் இருக்க முற்படுவது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதல்ல**

### அரசியல் யாப்பு திருத்தம்

எவ்வாறாயினும், அரசியலமைப்பு சீர்திருத்தம் என்ற கோணத்தில் இருந்து நோக்குகின்றபோது, தேசிய அரசாங்கம் என்ற ஏற்பாடு நியாயமானதாகவே தோன்றுகின்றது. அரசியல் யாப்பு திருத்தப்படுவதற்கு குறைந்தது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறப்பட வேண்டும். அரசியல் யாப்பு சீர்திருத்தத்தை முன்னெடுக்கின்ற ஐ.தே. கட்சியிடம் மூன்றில் இரண்டு பலம் கிடையாது. எனவே, சுதந்திரக்கட்சியின் ஆதரவு இல்லாமல் அரசியலமைப்பு மாற்றப்பட முடியாது. எனவே, அரசியலமைப்பை மாற்ற அல்லது சீர்திருத்த வேண்டிய தேவை இருப்பதனால் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டது என்று கூறப்படலாம்.

அதேசமயம் ஐ.தே.கட்சியும் சுதந்திரக் கட்சியும் இணைந்து அரசாங்கம் அமைத்துள்ளமையினால், பாராளுமன்றத்தில் தேவையான பெரும்பான்மை சாத்தியமாகி உள்ளமையினால் மட்டும் அரசியல் யாப்பு சீர்திருத்தம் ஏற்பட்டுவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் இன்றைய நிலையில் இப்போது வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்படுவது ஜனாதிபதி சிறிசேனவுக்கோ அல்லது ஐ.தே.கட்சிக்கோ சாதகமாக அமையப்போவதில்லை. அது ராஜபக்ஷவின் மீண்டும் ஆட்சி அமைக்கும் திட்டத்தை இலகுவாக்கிவிடும். இந்த யதார்த்தம் இவ்விரு தரப்பினருக்கும் புரிந்திராது என்று கூற முடியாது.



இவ்வாதத்தை அடிப்படையாகக் கொண்டு இரண்டு விடயங்கள் சுட்டிக்காட்டப்படலாம். ஒன்று, அரசியல் யாப்பு திருத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்க முடியாது. இரண்டாவது, முன்மொழியப்பட்டுள்ள 19 ஆவது திருத்தம் சட்டமாக்கப்படுவதற்கான சாத்தியம் மிகக்குறைவானதே.

தேசிய அரசாங்கம் அமைக்கப்படுவதற்கு முன்னரே, தேர்தல் முறைமை சீர்திருத்தம் இல்லாத அரசியலமைப்பு மாற்றத்துக்கு ஆதரவு அளிக்கப்போவதில்லை என்று சுதந்திரக் கட்சி கூறி வந்துள்ளது. இப்போது அதில் மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளது என்று தோன்றவில்லை. எனவே, 19 ஆவது திருத்தத்தை தாமதப்படுத்த அல்லது அதற்கு ஆதரவு அளிக்காமல் இருக்க சுதந்திரக் கட்சி இதனை ஒரு சாட்டாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடும். அவ்வகையில் அரசியலமைப்பு சீர்திருத்த முனையில் எதிர்கால நிகழ்வுப் போக்குகள் சுவாரஸ்யமானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.



அரசியல் யாப்பு சீர்திருத்தம் என்று வருகின்றபோது கூறப்பட வேண்டிய

*(53ஆம் பக்கம் பார்க்க.....)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உள்நாட்டு அரசியல்

# அழுவதா சிரிப்பதா?



**சிறிசேன – விக்கிரமசிங்க அரசாங்கம் தொடர்ந்து பதவியிலிருப்பதை உறுதி செய்வதற்கு சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் நிலையில் உண்மையான ஒரு அரசியல் அபாயம் தோன்றியிருக்கிறது. சீர்திருத்த அரசாங்கம் வழமையான அரசாங்கமாக மாறுகின்ற சாத்தியப்பாடே அது.**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது நல்லாட்சி (யஹபாலனய) அரசாங்கத்தில் பல்வேறு அமைச்சுப் பொறுப்புக்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் அமைச்சர்களுக்கு வழங்கி பதவிப்பிரமாணம் செய்து வைத்திருப்பதாக மார்ச் 22 மாலை வெளியான செய்தியைக் கேட்ட உடனே அழுவதா சிரிப்பதா என்று எனக்குத் தெரியவில்லை. இதற்காகவா மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்து அதிகாரத்துக்குக் கொண்டு வந்தோம் என்ற கேள்வி எனக்குள் கிளம்பியது. இந்தக் கேள்வியின் பின்னணியில் அவநம்பிக்கையும் அதிர்ச்சியும் ஏமாற்றமுமே இருந்தது. முன்னைய அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்த அதே அரசியல்வாதிகள் மீண்டும் பதவிப் பிரமாணம் செய்த நிகழ்வு புதிய அரசாங்கம் நல்லாட்சி பற்றிய அதன் சொந்த வாய்ப்பாட்டிலிருந்து விலகிச் செல்வதையே குறித்து நிற்கிறது என்று மக்களில் பலர் இப்போது நினைக்கத் தொடங்கிவிட்டார்கள். அரசாங்கத்துக்கு அவசியமாகத் தேவைப்படுகின்ற உறுதிப்பாட்டைப் பெறுவதற்காக ஜனாதிபதி சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் சேர்ந்து செய்த காரியமே இது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அதற்காக அவர்கள் மூவரும் எதை விலையாகக் கொடுத்திருக்கிறார்கள்? அரசியல் நெறிமுறைக் கோட்பாடுகளைப் போற்றுவதாகக் கூறுகின்ற புதிய அரசாங்கம் தன்னைத்தானே பாரதூரமாகச் சேதப்படுத்தியிருக்கிறது. இந்த அரசாங்கத்திலும் அரசியல் ஊழலின் சாயல் படியத் தொடங்கிவிட்டது. ஏனென்றால் பாராளுமன்றத்திற்குள் வாக்குகளைப் பெறுவதற்காக அரசியல் பதவிகளை அது பரிமாறிக்



ஜயதேவ உயன்கொட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் ஆதரவாளர்களினாலும் நலன் விரும்பிகளினாலும் வெளிப்படுத்தப்படுகின்ற அதிர்ச்சியும் அவநம்பிக்கையும் இன்னொரு பிரச்சினையில் இருந்து தோன்றுகிறது. மைத்திரிபால சிறிசேனவுக்கு மக்கள் வாக்களித்தபோது அவர்கள் முன்னைய அரசாங்கத்துக்கும் ஊழல் மோசடிகள், அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் அரசியல் நாணயமின்மை ஆகியவற்றுடன் தொடர்புடைய அதன் அரசியல்வாதிகள் பலருக்கும் எதிராகவும் வாக்களித்தார்கள். அந்த அரசியல்வாதிகளில் பலர் நாம் நம்பமுடியாத அளவுக்கு தகாத வார்த்தைகளைப் பேசுகின்ற வாய்களைக் கொண்டிருக்கிறார்கள். உதாரணத்துக்கு ஒரு விடயத்தைக் கூறுகிறேன். பல்கலைக்கழகங்களுக்குள் இருந்த உறுதியான ராஜபக்ஷ ஆதரவாளர்கள் பலரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன். இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அவர்கள் எல்லோரும் ராஜபக்ஷவு க்கு எதிராகவே வாக்களித்தார்கள். அதற்குக் காரணம் அன்றைய உயர்கல்வி அமைச்சர் மீதும் அவரது ஒழுக்கக் கேடான நடத்தை மற்றும் அருவருக்கத்தக்க பேச்சுக்கள் மீதும் அவர்களுக்கு இருந்த வரம்பில்லாத வெறுப்பேயாகும். அவர் இப்போது புதிய நல்லாட்சி அமைச்சரவையில் ஒரு உறுப்பினர்.

பொதுவாழ்வின் கண்ணியத்தினதும் நயநாகரீகத்தினதும் சகலவிதமான விதிமுறைகளையும் மீறி தங்களைப் படுகேவலமாக நிந்தனை செய்த சில அரசியல்வாதிகளை மீண்டும் அரவணைத்து அவர்களுடன் பணியாற்றுவதற்கு சிறிசேனவும் விக்கிரமசிங்கவும் திருமதி குமாரதுங்கவும் தீர்மானித்திருக்கிறார்கள் என்பது முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய அம்சமாகும். அரசியல் அனுகூலச் சூழ்நிலையில் பழையவற்றை மறப்பதற்கு ஆர்வம் காட்டுவதென்பது அரசியலைத் தொழிலாகக் கொண்டிருக்கிறவர்களையும் சாதாரண மக்களையும் வேறுபடுத்திக் காட்டுகின்ற 'மனித ஆற்றலுக்கு மேம்பட்டதான' ஒரு குணாதிசயமாகும். ஒழுக்கவியல் பிளவுக்கு (Ethical divide) இரு பக்கங்களிலும் இருக்கின்ற அரசியல்வாதிகளும் இந்த வழமைக்கு மாறான மனிதப் பண்பைக் கொண்டிருக்கிறார்கள் போலத் தெரிகிறது.


## அரசியல் தப்பிப் பிழைப்பா நெறிமுறையா?

இவையெல்லாவற்றையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது, ஒரு புறத்தில் அரசியல் தப்பிப் பிழைப்பும் ஆட்சியின் உறுதிப்பாடும் மறுபுறத்தில் நெறிமுறையான ஆட்சி மீதான கடப்பாடும் இந்த அரசாங்கத்தின் ஒன்றுடன் ஒன்று போட்டி போடுகின்ற இரு நிகழ்ச்சி நிரல்களாகிவிட்டன என்பது இப்போது தெளிவாகத் தெரிகிறது. தற்போது காணக்கூடியதாக இருக்கின்றதன் அடிப்படையில் நோக்கும்போது இந்த முரண்பாட்டை சமநிலைப்படுத்துவதென்பது சுலபமான காரியம் அல்ல. பாராளுமன்றத்தில் இருக்கின்ற அனுகூலமற்ற அதிகாரச் சமநிலையே இதற்குக் காரணம். கயிற்றில் நடந்து செல்வதைப் போன்ற வகையிலான இந்தச் செயற்பாட்டை நெறிமுறையுடன் கூடிய ஆட்சி பற்றிய இலட்சியத்தினால் உருவகப்படுத்தப்பட்ட அரசியல் எதிர்பார்ப்புகளைக் கொண்ட வாக்காளர்கள் முன்னிலையில் நியாயப்படுத்துவதென்பது சுலபமான பணியாக இருக்கப்போவதில்லை.

அரசியல் நெறிமுறை பற்றி அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் தொடர்பில் சாதாரணமக்கள் ஏற்கனவே ஐயுறவு மனப்பான்மையை வெளிக்காட்டத் தொடங்கிவிட்டார்கள். மூன்று மாதங்களுக்கு முன்னர் இந்நாட்டு மக்கள் மத்தியில் அரசியல் உத்வேக உணர்வைக் கிளப்பிய நல்லாட்சிச் சிந்தனை என்பது இப்போது கேலிக்குரிய விவகாரமாக மாத்திரமல்ல அசௌகரியத்தைத் தருகின்ற ஒரு விடயமாகவும் மாறியிருக்கின்றமை உண்மையில் பெரும் கவலை தருகிறது.

கடந்த தேர்தலில் ஜனாதிபதி சிறிசேனவை ஆதரித்த வாக்காளர்களின் அபிப்பிராயத்தின் அடிப்படையில் நோக்குகையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் அமைச்சர்கள் 26 பேர் புதிய அரசாங்கத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றமை தற்போதைய அரசியல் சீர்திருத்த இயக்கத்தின் பொருந்தாத் தன்மையை அல்லது புதிரான தன்மையை உணர்த்தி நிற்கிறது. அது குறைந்தபட்சம் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய மூன்று திரிசங்கு நிலைகளை உருவகப்படுத்துகிறது.

i. நெறிமுறையான அரசியலுக்குப் பாதகமாக அமையக்கூடிய வகையில் தற்போதைய அரசாங்கத்தின் அரசியல் தொடர்ச்சியும் உறுதிப்



ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை மாத்திரம் மக்கள் தோற்கடிக்கவில்லை. அவரின் தலைமையிலான அரசாங்கத்தையும் அதன் ஊழல் மோசடிகள், அதிகாரத் துஷ்பிரயோகத்திற்கு அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் மக்கள் வாக்களித்தார்கள். அந்த அரசியல்வாதிகளில் பலர் இப்போது 'நல்லாட்சி அரசாங்கத்தில்' அமைச்சர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடும் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டுமா? பழைய ஆட்சியாளர்கள் அதிகாரத்துக்கு திரும்பிவரக் கூடிய சூழ்நிலை தோன்றுதல் போன்ற மோசமான அரசியல் விளைவுகளைத் தடுப்பதற்காக நல்லாட்சி வாக்குறுதியிலிருந்து பிறழ்ந்து செல்லும் போக்கை வாக்காளர்கள் விளங்கிக்கொண்டு அலட்சியம் செய்ய வேண்டுமா?

ii. அரசாங்கத்தின் நடைமுறைச் சாத்தியமான தீர்மானங்கள் கண்டனத்துக்குரியவையாக இருந்தாலும் கூட, அவற்றை வாக்காளர்கள் பொறுத்துக் கொண்டு தற்போதைக்கு நெறிமுறையுடன் கூடிய அரசியலை அசட்டை செய்ய வேண்டுமா?

க்கு' முகங்கொடுக்க ஆரம்பித்தது. 100 நாள் வேலைத்திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் இருப்பதுவும் அரசியலமைப்புச் சீர்திருத்த யோசனைகளை முன்னெடுப்பதில் உள்ள இயலாமையுமே அந்தத் தோல்விகளாகும்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப்பலத்தைக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான எதிரணியின் தயவில் இருக்க வேண்டிய நிலைமை அரசாங்கத்துக்கு ஏற்பட்டமை நிலைவரத்தை மேலும் சிக்கலுக்குள்ளாக்கிவிட்டது. முற்றிலும் வழமையான அரசியல் காரணங்களுக்காக அந்த எதிரணி சிறிசேன-விக்கிரமசிங்க அரசாங்கத்தின்

எதிர்பார்ப்புகளை அலட்சியப்படுத்திக்கொண்டு அதேவேளை அவற்றை நியாயப்படுத்தி இறுதியில் மக்களுக்கு ஆரம்பத்தில் கொடுத்த வாக்குறுதிகளுக்கு எதிராகப் போவதே வழமையான அரசாங்கமாகும். பகைமையான அரசியல் சக்திகளுடன் பேரம் பேசுவதற்கான முயற்சியின் விளைவாக வழமையான அரசாங்கங்களாக மாறியமையே உலகம் பூராகவும் பல சீர்திருத்த அரசாங்கங்களுக்கு ஏற்பட்ட கதியாகும்.

ஆசியாவின் ஒரு சில உதாரணங்களை நோக்குவோம். 1986 பிலிப்பைன் ஸில் கொராசொன் அக்கியூனோ, 1993 பாகிஸ்தானில் பெனாசிர் பூட்டோ, 1994 இலங்கையில் பொது

**புதிய அரசாங்கம் அதன் சீர்திருத்த இலக்குகளையும் அரசியல் உயிர் வாழ்வையும் சமநிலைப்படுத்துவதில் மல்லுக்கட்டிக்கொண்டு இருக்கிறது. அரசாங்கம் அகப்பட்டிருக்கும் ஒரு அடிப்படையான முரண்பாட்டுக்குள்ளேயே இந்தச் சவாலை இனங்காணக்கூடியதாக இருக்கும். ஜனாதிபதித்தேர்தலில் மைத்திரிபால பெற்றுக்கொண்ட மக்கள் ஆணையை பிரதிபலிக்கக் கூடியதாக தற்போதைய பாராளுமன்றம் அமையவில்லை**

iii. முடிவுகள் வழிமுறைகளை நியாயப்படுத்த வேண்டுமா? அல்லது வழிமுறைகளும் முடிவுகளும் நல்லாட்சி கோட்பாட்டுக்கு இசைவான முறையில் நேர்மையானவையாக இருக்க வேண்டுமா?

அதேவேளை, முன்னைய அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்தவர்கள் புதிய அரசாங்கத்திலும் அமைச்சர்களாக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பில் சிரிப்பதா அல்லது அழுவதா என்று தெரியாமல் நிற்கும் திரிசங்கு நிலை, சீர்திருத்த அரசாங்கங்களுக்கும் அத்தகைய அரசாங்கங்களை அதிகாரத்துக்குக் கொண்டு வரும், சீர்திருத்த விரும்பிகளான வாக்காளர்களுக்கும் இருக்கக்கூடிய சிக்கலான தெரிவுகளை இரத்தினச் சுருக்கமாக விளக்கி நிற்கிறது.

அதிகாரத்துக்கு வந்த மூன்று மாதங்களுக்கும் குறைவான காலகட்டத்துக்குள்ளாகவே அரசாங்கம் இரு பிரதான 'வாக்குறுதித் தோல்விகளு

நிகழ்ச்சித் திட்டத்தை குறுக்கே மறிக்க முயற்சித்தது. இதனால் அரசாங்கம் தப்பிப் பிழைக்கக் கூடிய வாய்ப்புக்கும் உறுதிப்பாட்டுக்கும் பாரதூரமான பிரச்சினைகள் ஏற்பட்டன. இதுவே சுதந்திரக்கட்சியின் முன்னாள் அமைச்சர்கள் 26 பேருக்கு வெவ்வேறு தரங்களிலான அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டதற்கான உடனடி அரசியல் பின்புலமாகும்.

## 'வழமையான அரசாங்கம்'

சிறிசேன - விக்கிரமசிங்க அரசாங்கம் தொடர்ந்து பதவியில் இருப்பதை உறுதிசெய்வதற்கு சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் இப்போது உண்மையான ஒரு அரசியல் அபாயம் தோன்றியிருக்கிறது. 'சீர்திருத்த அரசாங்கம்' வழமையான அரசாங்கமாக மாறுகின்ற சாத்தியப்பாடே அதுவாகும். ஊழலில் ஈடுபட்டு, அதிகாரத்தையும் துஷ்பிரயோகம் செய்து மக்களின்

ஜன முன்னணி, 2009 நேபாள மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சி இவையெல்லாம் அந்தந்த நாடுகளில் குறிப்பிடத்தக்க அரசியல் திருப்புமுனைகளாக அதிகாரத்துக்கு வந்த சீர்திருத்த அரசாங்கங்களாகும். இவற்றுக்கு மக்கள் இயக்கங்களின் ஆதரவு இருந்தது. அத்துடன் ஜனநாயக மயமாக்கலுக்கான அரசியல்-சமூக சீர்திருத்தங்கள், சமூக நீதி மற்றும் மக்களின் பொருளாதார நல்வாழ்வுக்கான கோரிக்கைகளை முன்வைத்து சிவில் சமூக அமைப்புகள் முன்னெடுத்த அணிதிரட்டல் செயற்பாடுகள் இந்த அரசாங்கங்களின் தோற்றத்துக்கு பெரிதும் உதவின. ஆனால், வெகு விரைவாகவே இவை 'வழமையான அரசாங்கங்களாக' மாறியதைக் காணக்கூடியதாக இருந்தது. அதேபோன்றே, இலட்சியவாத மற்றும் சீர்திருத்தவாத அரசியல்வாதிகள் 'வழமையான அரசியல்வாதிகளாக மாறினார்கள்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எனவே, சீர்திருத்த அரசாங்கங்களும் அவற்றின் தலைவர்களும் வழமையானவர்களாக மாறுகின்ற ஆபத்து 'சீர்திருத்த இயக்கத்தின்' வலுவற்ற தன்மை என்று வர்ணிக்கப்படக்கூடிய தோற்றப்பாட்டுடன் தொடர்புபட்டதாகும். சீர்திருத்த அரசாங்கங்கள் வழமையாக நெருக்கடி மிகு சூழ்நிலைகளிலேயே அதிகாரத்துக்கு வருகின்றன. அதனால், அரசியல், அரசியல் யாப்பு, பொருளாதாரம், சமூக நீதி மற்றும் ஆட்சிமுறை என்று பலதரப்பட்ட துறைகளில் துரிதமானதும் பயனுறுதியுடையதும் தீர்க்கமானதுமான மாற்றங்கள் தொடர்பில் மக்களின் எதிர்பார்ப்புகளையும் வாக்குறுதிகளையும் அந்த அரசாங்கங்கள் தங்களுடன் கொண்டுவருகின்றன.

இந்த சீர்திருத்த அரசாங்கங்களுக்கு ஏற்பட்ட கதியையும் அவை கண்ட தோல்விகளையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது மிகவும் எளிதான கோட்பாட்டு ரீதியான விளக்கத்துக்கு எம்மால் வரமுடியும். அதாவது, எதிரணியில் இருக்கும் போதும் தேர்தல் பிரசாரங்களில் மக்களை அணிதிரட்டும் போதும் இந்த அரசாங்கங்களின் தலைவர்கள் துரித மாற்றத்துக்கான மக்களின் எதிர்பார்ப்புகளை நடைமுறைச் சாத்தியமற்ற மட்டங்களுக்கு ஏற்கனவே உயர்த்திவிட்டிருக்கிறார்கள். அனுபவவாயிலாக நோக்கும்போது, தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து அரசாங்கம் அமைக்கப்பட்ட பிறகு உடனடியாக மக்களின் எதிர்பார்ப்புக்களையும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகள் மீது கவனம் குறைந்து அவை பின்னுக்குத் தள்ளப்பட்டு விடுகின்றன. அரசியல் மாற்றத்தைக் கையாளுவதென்பது பிறகு அங்குமிங்குமாக ஒரு சில சரிப்படுத்தல்களுடன், ஊழல்தனமான அரசியல் ஒழுங்குமுறையொன்றைக் கையாளுகின்ற பணியாகவே மாறி விடுகின்றது. ஊழல்தனமான அரசியல் ஒழுங்குமுறையொன்றைக் கையாளுதல் சீர்திருத்த அரசியல்வாதிகளை 'வழமையான' அரசியல்வாதிகளாகவும் சீர்திருத்த அரசாங்கங்களை 'வழமையான' அரசாங்கங்களாக மாற்றிவிடுகிறது. 'வழமையானது' என்று ஆகிவிட்டதும் சீர்திருத்த உத்வேகத்துக்கு மீண்டும் திரும்புவதற்கான அத்தகைய அரசாங்கங்களின் வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டு விடுகின்றன.

இலங்கையின் புதிய சீர்திருத்த அரசாங்கம் இன்னமும் அதன் சீர்திருத்த உத்வேகத்தை இழக்கவில்லைபோலும். வேறுவார்த்தைகளில் கூறுவதானால், சீர்திருத்த இயக்கம் இன்னமும் தோல்வி கண்டுவிடவில்லை. புதிய அரசாங்கம் அதன் சீர்திருத்த இலக்குகளையும் அரசியல் உயிர்வாழ்வையும் சமநிலைப்படுத்துவதில் பெரும் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கிறது. சிறிசேன- விக்கிரமசிங்க அரசாங்கம் அகப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு அடிப்படையான முரண்பாட்டிற்குள்ளேயே இந்தச் சவாலை இனங்காணக்கூடியதாக இருக்கும். ஜனவரி 8 தேர்தலில் ஜனாதிபதி சிறிசேன பெற்றுக் கொண்ட மக்கள் ஆணையைப் பிரதிபலிக்கக்கூடியதாக தற்போதைய பாராளுமன்றம் அமையவில்லை. விரைவாக பொதுத்தேர்தலை நடத்தி பாராளுமன்றத்துக்கு மக்களிடமிருந்து புதிய ஆணையொன்றைப் பெறுவதே அரசாங்கத்தின் நம்பகத்தன்மையை மீட்பதற்கும் அதன் சீர்திருத்த வாக்குறுதிகளை புதுப்பிப்பதற்குமான ஒரு தெரிவாகும். ஆனால், பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்குப் போவது குறித்து அரசாங்கத்துக்குள் கடுமையான கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றது போலத் தெரிகிறது. அதனால், அரசியல் ஆபத்து குறைந்த மார்க்கத்தை அரசாங்கம் தெரிவு செய்தது போலத் தோன்றுகிறது. அதாவது, சுதந்திரக்கட்சி உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்குவதற்கு கதவுகளைத் திறந்துவிட்டதே அந்த மார்க்கமாகும்.

இந்த நகர்வை ஆளும் கூட்டணியை மீளக்கட்டியெழுப்பும் ஒரு நடவடிக்கையாக விளங்கிக்கொள்ள முடியுமா? ஆம். அவ்வாறு தான் முடியும். ஆனால், இது சீர்திருத்த கூட்டணியை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கை அல்ல, ஆளும் கூட்டணியைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையேயாகும். 'தேசிய அரசாங்கம்' என்ற தலைப்பு எந்தவகையிலும் பொருத்தமானதாக இல்லை. நம் முன்னால் இருப்பது ஒரு தேசிய அரசாங்கமல்ல. ஆளும் கூட்டணியின் விரிவாக்கமேயாகும். சுதந்திரக் கட்சியிலிருந்து புதிய சக்திகள் இதில் சேர்ந்துகொள்வதில் ஆர்வம் காட்டியிருக்கிறார்கள். இருமாதங்களுக்கு முன்னர் இந்த அரசாங்கம் தேசிய ஜனநாயக முன்னணி அரசாங்கம் என்று அழைக்கப்பட்டதை பலர்

ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்திலிருந்து வெளியேறக்கூடிய சாத்தியம் இருக்கிறது. தொடர்ந்தும் அரசாங்கத்தில் இருப்பதற்கு அக்கட்சி தீர்மானிப்பதாக இருந்தாலும் கூட நச்சரித்துக் கொண்டிருக்கின்ற அரைகுறை மனத்துடனான பங்காளியாகவே இருக்கும்.



(53ஆம் பக்கம் பார்க்க.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெதான்யாகுவும் ராஜபக்ஷவும் இரு தலைவர்களின் ஒரு கதை



ஒரு ஒப்பீடு



ராஜன் பிலிப்ஸ்

இஸ்ரேலில் மார்ச் 17 நடைபெற்ற பொதுத்தேர்தலில் பெஞ்சமின் நெதான்யாகுவின் தோல்வியை ஆடிப் பாடிக் கொண்டாடி எழுதுவதற்கு நான் காத்திருந்தேன். இருமாதங்களுக்கும் கூடுதலான காலத்துக்கு முன்னர் இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் எதிரணியின் பொது வேட்பாளர் வெற்றி பெற்றபோது நான் அடைந்த மகிழ்ச்சியையும் விட கூடுதலான மகிழ்ச்சியை நெதான்யாகுவின் தோல்வி எனக்கு கொடுக்கும் என்று நண்பர்களுடன் பேசும்போது நான் பகிடியாகக் கூறியதுமுண்டு. ஆனால், அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. பிபி (நெதான்யாகுவை அவ்வாறு தான் இஸ்ரேலில் அழைப்பார்கள்) இறுதி நேரத்தில் தோல்வியின் தாடையிலிருந்து வெற்றியை இழுத்தெடுத்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது. ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ இறுதி நேரத்தில் வெற்றியின் தாடையிலிருந்து இழுத்தெடுத்ததை விட இது வேறுபட்டதாக இருந்தது. இருவருமே உரியகாலத்துக்கு இரு வருடங்கள் முன்கூட்டியே தேர்தலுக்குப் போனார்கள். ஒருவர் சோதிடரின் ஆலோசனையைக் கேட்டு நடந்துகொண்டார். மற்றவர் இறுமாப்பில் அவ்வாறு நடந்து கொண்டார். இருவருமே தங்களுக்கு எதிராக வெளிநாட்டுச் சதி மேற்கொள்ளப்படுகிறது என்ற மருட்சியில் இருந்தார்கள். தங்களது பின்னடைவுகளுக்கு இருவருமே சிறுபான்மையினத்தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நெதான்யாகு மீண்டும் இஸ்ரேலில் அதிகாரத்திற்கு வருவதனால் ஏற்படக் கூடியதைப்போன்ற அல்லது அதையும் விட மோசமான குளறுபடிகள் ஏற்படுவதை தவிர்க்கக்கூடியதாக ராஜபக்ஷவை தோற்கடித்தமைக்காக இலங்கையர்கள் தங்களுக்குத் தாங்களே நன்றி தெரிவித்துக்கொள்ளலாம்.**



களே காரணமென்று குற்றஞ்சாட்டினார்கள். இஸ்ரேலில் பெரும்பாலான அரசியல் ஆய்வாளர்களும் அறிஞர்களும் நெதான்யாகு தோல்வி காண்பார் என்றே எதிர்பார்த்தார்கள். ஆனால் இலங்கையில் மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோல்வியடையக் கூடுமென்று எவருமே வெளிப்படையாகக் கூறவில்லை.

தேர்தலுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்புகளும் தேர்தல் தினத்தன்று வாக்களித்து விட்டு வாக்களிப்பு நிலையங்களிலிருந்து வெளியே வந்தவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்புகளும் நெதான்யாகு தோல்வியடைவார் என்றே தெரிவித்தன. ஆனால், உண்மையான வாக்குகள் எண்ணப்பட்டபோது அந்தக் கணிப்புகளையெல்லாம் பொய்யாக்கி, அதிர்ச்சியூட்டும் வெற்றியை அவர் பெற்றுக் கொண்டார். சகல வாக்குகளுமே எண்ணி முடிக்கப்படுவதற்குள்ளாகவே மகிந்த ராஜபக்ஷ தனது தோல்வியை ஒத்துக்கொண்டு அலரிமாளிகையை விட்டு வெளியேறினார். இலங்கையில் இத்தடவை ஜனாதிபதித் தேர்தலில் பொறி பறக்கும் பிரசாரங்களைக் காணக்கூடியதாக இருக்கவில்லை. உண்மையில் சொல்லப்போனால், 3ஆவது பதவிக்காலத்துக்கும் ஜனாதிபதியாக்குவதற்காக அவர் போட்டியிட்ட தேர்தல் பிரசாரங்களில் காணமுடியாமல் இருந்த சூட்டை அவரை மீண்டும் அதிகாரத்துக்கு கொண்டுவரவேண்டுமென்று சுலோகத்தை முன்னிறுத்த தற்போது செய்யப்பட்டு வருகின்ற பிரசாரங்களில் காணமுடிகிறது. மறுபுறத்தில், நெதான்யாகு பெரும் விலையைச் செலுத்தித்தான் இந்த வெற்றியைப் பெற்றிருக்கிறார். பிரசாரங்களின் போது தீவிர வலதுசாரி நிலைப்பாட்டை எடுத்த அவர் உள்நாட்டில் இஸ்ரேலை பிளவுபடுத்தியதுடன், சர்வதேச ரீதியில் அதைத் தனிமைப்படுத்திக் கொண்டார். நெதான்யாகு தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார் என்றாலும் தனது புதிய பதவிக்காலத்தை படுமோசமாகச் சேதப்படுத்தியிருக்கிறார் என்று தான் சொல்ல வேண்டும். உண்மையில் பரிதாபகரமான முறையில் பாதிக்கப்பட்டிருப்பது மத்திய கிழக்கில் சமாதானத்துக்கான வாய்ப்புகள் தான்.

### ஒரு ஒப்பீடு அல்ல

இது முற்றிலும் வேறுபட்ட இரு மனிதர்களைப் பற்றிய ஒரு ஒப்பீடு அல்ல. என்றாலும், ஜனாதிபதி ராஜபக்ஷ தனது இரண்டாவது பதவிக்காலத்தின் இறுதி வருடங்களில் நெதான்யாகுவை முன்மாதிரியாகக் கொண்டு செயற்படவிரும்பியிருந்தார். அதாவது படு அபத்தமான ஆலோசனையைப் பெற்று, அவர் தனது அரசாங்கத்துக்கு அமெரிக்க ஆதரவைப் பெறுவதிலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை மறுதலிப்பதிலும் நெதான்யாகு மாதிரி நடந்துகொண்டார். உண்மையில் ராஜபக்ஷவோ அல்லது வேறு எந்தவொரு நாட்டினதும் தலைவரோ நெதான்யாகுவின் அப்பட்டமான அகந்தைத்தனத்தைப் பின்பற்றியிருக்கக்கூடாது. அமெரிக்க ஜனாதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராக் ஒபாமாவை அலட்சியம் செய்துகொண்டு, அமெரிக்க காங்கிரஸின் கூட்டுக்கூட்டத்தில் உரையாற்றுவதற்கான அழைப்பை தனக்குக் கிடைக்கச் செய்து திமிர்த்தனமாக நெதான்யாகு நடந்து கொண்டார். ஈரானுடன் அணு உடன்படிக்கையொன்றை எட்டுவதற்கு மேற்கொள்ளப்படுகின்ற முயற்சியைப் பொறுத்தவரை ஒபாமா நிருவாகமும் ஐரோப்பிய ஒன்றியமும் பின்விளைவுகளைப் பற்றி யோசிக்காமல் நடந்துகொள்கின்றன என்ற தொனியில் அமெரிக்கர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் நெதான்யாகு பிரசங்கம் செய்தார். அணுகுண்டொன்றைத் தயாரிக்கும் நிலையை ஈரான் நெருங்கிவிட்டது என்ற ஆதாரமற்ற தனது நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்துவதற்காகவே அவர் வாஷிங்டனுக்குச் சென்றார். அவ்வாறு எதையுமே தயாரிக்கக்கூடிய நிலைக்கு அண்மையாகக் கூட ஈரான் இல்லை என்று தங்களது பிரதமரின் நிலைப்பாட்டுக்கு முரணாக இஸ்ரேலிய புலனாய்வுச் சேவை முடிவுக்கு வந்திருப்பது கவனிக்கத்தக்கது.

தேர்தலுக்கு ஒருவாரம் முன்னதாக நெதான்யாகு வாஷிங்டனுக்கு மேற்கொண்ட விஜயம் (இஸ்ரேலியர்கள் சகலருமே விடாப்பிடியான வலதுசாரி சன்னிப் பிதற்றல்காரர்கள் என்று உலகம் நினைப்பதை விரும்பாத) பெரும்பான்மையான இஸ்ரேலியர்களுக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்திவிட்டது. தனது அமெரிக்க உரையின் மூலமாக நெதான்யாகு இஸ்ரேலிய தீவிர வலதுசாரிச் சக்திகளை தன்பக்கம் இழுக்க விரும்பினார். ஆனால், அவரது அந்த உரை அவர்கள் மத்தியிலும் கூட பெரிதாக எடுபடவில்லை. தீவிர வலதுசாரி சக்திகள் அவரைக் கைவிட்டார்கள். அதனால் அவர் பிரச்சினைக்குள்ளானார். அதனால், தேர்தல் தினத்துக்கு முதல் நாள் அவர் பிரதமராக தான் பதவி வகிக்கும் காலத்தில் இஸ்ரேலில் பாலஸ்தீன அரசொன்று உருவாக்கப்படுவதை அனுமதிக்கப்போவதில்லை என்று கூறி அரசியல் அணுகுண்டொன்றைப் போட்டார். தேர்தல் தினத்தன்று இஸ்ரேலில் உள்ள அரபுப் பிரஜைகளையும் பாலஸ்தீனப் பிரஜைகளையும் பெரும் எண்ணிக்கையில் இடதுசாரிகள் வாக்களிப்பு நிலையங்களுக்கு பஸ்களில் ஏற்றிச் செல்கிறார்கள் என்று யூத தீவிரவாதிகளுக்கு கூறி, (இஸ்ரேலுக்குள்ளே புதியதொரு வாக்காளர் அச்சுறுத்தல் தோன்றுவதைத் தடுப்பதற்கு) தனது ஆதரவாளர்களை துரிதமாக வாக்களிக்கச் செய்யுமாறு நெதான்யாகு தூண்டினார். அவரது சொல்லுக்கு மதிப்பளித்து அவர்கள் மேலும் ஒரு பதவிக்காலத்துக்கு அவரை அதிகாரத்தில் வைத்திருப்பதற்கு வாக்களித்திருக்கிறார்கள்.

நெதான்யாகுவின் மீள்வருகை திகைப்பூட்டுவதாக இருந்தாலும் கூட, அவரின் வெற்றி இஸ்ரேலிய மக்களின் பரந்தளவிலான ஒரு அங்கீகாரமல்ல. இஸ்ரேலிய தேர்தலொன்றில் பாராளுமன்றத்தின் 120 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக முழு நாடுமே வாக்களிக்கிறது. அரசியல் கட்சிகள் பெறுகின்ற வாக்குகளின் விகிதாசாரத்துக்கு ஏற்பவே அவற்றுக்கிடையே ஆசனங்கள் பகிரப்படுகின்றன. சுமார் 10 கட்சிகள் போட்டியிடுகின்ற நிலையில், அரசாங்கமொன்றை அமைக்கக்கூடியதாக பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்ற எந்தவொரு தனிக்கட்சியினாலும் இயலாமல் இருக்கிறது. எனவே, பெரும்பாலும் கூட்டணியினூடாகவே அரசாங்கங்கள் அமைக்கப்படுகின்றன. ஆட்சி செய்வதற்கு குறைந்தபட்சம் 61 ஆசனங்களைக் கொண்டதாக அமைக்கப்படக்கூடிய கூட்டணிக்கு கூடுதல் ஆசனத்தைப் பெற்ற கட்சியே தலைமை தாங்குவதென்பது நிலைநாட்டப்பட்ட ஒரு சம்பிரதாயமாக இருந்துவருகிறது. கட்சித் தலைவர் ஒருவரை ஜனாதிபதி அழைக்க வேண்டியதில்லை. தனது அபிப்பிராயத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்ட கூட்டணியொன்றை அமைக்க முடியுமென்று கருதுகின்ற எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினருமே அதைச் செய்து கொள்ளலாம். ஒருசில தடவைகளில் 'தேசிய அரசாங்கங்களை' அமைப்பதற்கு வலதுசாரி லிகுட் கட்சியையும் இடதுசாரி தொழில் கட்சியையும் உள்ளடக்கிய கூட்டணிகள் உருவாக்கப்பட்டிருந்தன.

மார்ச் 17 தேர்தலில் நெதான்யாகுவின் லிகுட் கட்சியும் எதிர்க்கட்சியான சியோனிச யூனியனும் (தொழிற்கட்சியை பிரதான அங்கத்துவக் கட்சியாகக் கொண்டது) தலா 27 ஆசனங்களைக் கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், லிகுட் கட்சி 30 ஆசனங்களை அல்லது தேசிய வாக்குகளில் 25 சதவீதத்தைப் பெற்றிருக்கின்ற அதேவேளை, சியோனிச யூனியன் 24 ஆசனங்களைப் பெற்று இரண்டாமிடத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. அதிதீவிர வலதுசாரி மற்றும் மதவாதக் கட்சிகளின் வாக்குகளை தூரவிலகச் செய்ததன் மூலம் நெதான்யாகுவே நிலைவரத்தைக் குழப்பத்துக்குள்ளாக்கினார். அவர் இப்போது நான்காவது தடவையாக பிரதமராக புதிய கூட்டரசாங்கமொன்றை அமைக்கப்போகிறார். இத்தடவை தேர்தலில் 13 அரபு/பாலஸ்தீன உறுப்பினர்கள் பாராளுமன்றத்து க்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பது புதியதொரு முன்னேற்றமாகும். லிகுட் கட்சிக்கும் சியோனிச யூனியனுக்கும் அடுத்ததாக பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரிய அணியாக இந்த அரபு/ பாலஸ்தீன உறுப்பினர்கள் விளங்கப்போகிறார்கள். தேர்தல் வெட்டுப்புள்ளி 2 சதவீதத்திலிருந்து 3.5 சதவீதமாக அதிகரிக்கப்பட்டதால் தோன்றிய நிலைவரத்துக்கு முகங்கொடுப்பதற்காக (இஸ்லாமியவாதிகள் தொடக்கம் கம்யூனிஸ்டுகள் வரை) நான்கு வேறுபட்ட அரபு/ பாலஸ்தீன குழுக்கள் இணைந்து ஒரு பட்டியலில் போட்டியிட்டதன் விளைவே இது.

தொழிற்கட்சியினதும் சியோனிச யூனியனினதும் தலைவரான ஐசாக் ஹெர்சொக் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பதற்கான யோசனையை நிராகரித்துவிட்டார். பிரதமர் பதவியைப் பெறுவதற்கு அவர் இன்னுமொரு நான்கு வருடங்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது. ஹெர்சொக்கைப் பொறுத்தவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மதிக்கப் படத்தக்கதொரு அரசியல் குல மரபைக் கொண்டிருக்கிறார். அவரது பாட்டனார் இஸ்ரேலின் முதலாவது யூத சமூக மதத்தலைவராக இருந்தவர். அவரது தந்தையார் நாட்டின் 6 ஆவது ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர். இஸ்ரேலின் மிகவும் புகழ்பெற்ற வெளியுறவு அமைச்சராக இருந்த அபா எபான் அவரது மாமனார். ஆனால், ஹெர்சொக் இஸ்ரேலிய சம்பிரதாயவாதிகள் மத்தியில் பெரிதும் விரும்பப்படுகின்ற இரு தலைமைத்துவக் குணாதிசயங்களான போராட்ட ஆர்வமும் தன்முனைப்பும் இல்லாத ஒரு நிபுணராவார். ஹெர்சொக்கின் பொருளாதாரக் கருத்துக்களை நெதான்யாகு வழமையாக அலட்சியப்படுத்தி வந்திருக்கிறார். நெதான்யாகுவின் குடியேற்ற கொள்கைகளுக்கு ஹெர்சொக் காட்டுகின்ற எதிர்ப்புக்கும் இரு அரசுகள் என்ற அடிப்படையிலான தீர்வை முன்னிறுத்தி பாலஸ்தீனர்களுடன் சமாதானத்தைக் காண்பதில் அவரின் அணுகுமுறைக்கும் ஆதரவை வெளிக்காட்டும் இஸ்ரேலியர்களின் தொகை தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஹெர்சொக் தேர்தலில் வெற்றி பெற்றிருப்பாரேயானால், தனது ஆளும் கூட்டணியில் அவர் அரபு/ பாலஸ்தீன உறுப்பினர்களையும் உள்ளடக்கியிருப்பார். பாலஸ்தீனர்களுடன் கூட்டு சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதிலும் அமெரிக்க நிருவாகத்துடனான இஸ்ரேலின் உறவுகளைப் பலப்படுத்துவதிலும் இலகுவான வழிமுறைகளைக் கடைப்பிடிக்கக்கூடிய நிலையில் இருந்திருப்பார். ஆனால், அவருக்கான காலம் இன்னமும் வரவில்லை.

'பாலஸ்தீன தலைவர்கள் வாய்ப்பொன்றைத் தவறவிடுவதற்கு கிடைக்கக்கூடிய வாய்ப்பை ஒருபோதும் தவறவிடமாட்டார்கள்' என்ற அபா எபானின் கூற்று மிகவும் பிரபல்யமானது. எபானின் மருமகனை புதிய பிரதமராகத் தெரிவு செய்வதற்குக் கிடைத்த வாய்ப்பைத் தவறவிட்டு நெதான்யாகுவை திரும்பத்திரும்பத் தெரிவு செய்யும் இஸ்ரேலியர்களுக்கும் இக்கூற்றைப் பிரயோகிக்க முடியும். ஆரம்பத்தில் நான் கூறியதைப் போன்று, பெரிய விலைகொடுத்துத்தான் நெதான்யாகு இந்த வெற்றியைப் பெற்றிருக்கிறார். அது அவருக்குத் தெரியும். பாலஸ்தீன நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்கான 'இரு அரசுகள்' திட்டத்தை நிராகரிக்கும் போக்கிலிருந்து தேர்தலுக்கு மறுநாளே அவர் பின்வாங்கிக் கொண்டார். தேர்தல் தினத்தன்று அரபு இஸ்ரேலியர்களை அவமதித்த அவர் மறுநாள் அவர்களைச் சாந்தப்படுத்த முயற்சித்தார். ஆனால், ஒபாமா நிருவாகம் திருப்திப்பட்டுக் கொள்ளவில்லை.

நெதான்யாகு மீண்டும் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பில் தனக்கிருக்கும் வெறுப்பை ஒபாமா நிருவாகம் மறைக்கத் தயாராயில்லை. அவரின் புதிய நிலைப்பாடுகள் மற்றும் கருத்துக்களையும் கருத்தில் எடுத்து அமெரிக்கா அதன் தெரிவுகளை மறுமதிப்பீடு செய்யும் என்பதை தெரியப்படுத்தியிருக்கிறது. மேற்கு ஆற்றங்கரை மீண்டும் காசா பள்ளத்தாக்கை இஸ்ரேலிலிருந்து பிரிக்கும் 1967க்கு முன்னரான எல்லைகளின் அடிப்படையில் சுயாதிபத்தியம் கொண்ட பாலஸ்தீன அரசொன்றை அமைக்கக்கோரும் தீர்மானத்துக்கு எதிராக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் தனது வீட்டோவை நீக்கக்கூடும் என்பதையும் அமெரிக்கா உணர்த்தியிருக்கிறது. நெதான்யாகுவின் சேஷ்டைகளினால் பல அமெரிக்க யூதர்கள் விரக்தியடைய ஆரம்பித்திருக்கிறார்கள் என்றும் அவரின் செயற்பாடுகளின் விளைவாக உலகில் இஸ்ரேல் தனிமைப்படுத்தப்படுகின்ற போக்கு அதிகரித்துக் கொண்டு வருவது குறித்து அவர்கள் கவலை கொண்டிருக்கிறார்கள் என்றும் மார்ச் 20 நியூயோர்க் ரைம்ஸ் தெரிவித்திருந்தது.

நெதான்யாகு மீண்டும் அதிகாரத்தில் இருக்கப்போகும் நிலையில் புதிய சமாதான முன் முயற்சியொன்றுக்கான சகலவிதமான நம்பிக்கை



பராக் ஒபாமாவை அலட்சியம் செய்துகொண்டு அமெரிக்க காங்கிரஸின் கூட்டுக்கூட்டத்தில் உரையாற்றுவதற்கான அழைப்பை தனக்கு கிடைக்கச் செய்து நெதான்யாகு திமிர்த்தனமாக நடந்துகொண்டார். தேர்தலுக்கு ஒருவாரம் முன்னதாக அவர் வாஷிங்டனுக்கு மேற்கொண்ட விஜயம் பெரும்பான்மையான இஸ்ரேலியர்களுக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்திவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் பாலஸ்தீன அதிகாரசபையும் ஜனாதிபதி முஹமட் அப்பாஸும் கைவிட்டுவிட்டார்கள். பாலஸ்தீன அரசொன்று க்கு ஐ.நா.வின் முழுமை யான அங்கீகாரத்தைப் பெறுவதற் கான தங்களது ஒருதலைப்பட்சமான தந்திரோபாயத்தை முன்னெடுப்ப தற்கு அவர்கள் இப்போது உறுதியாக இருக்கிறார்கள். நெதான்யாகு அர சாங்கத்து க்கு எதிரான போர்க்குற்றங் கள் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்குமாறு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை வலியுறுத்தப்போவதா கவும் அவர்கள் அறிகுறி காட்டியிருக் கிறார்கள். பாலஸ்தீன அரசொன்றுக் கான ஐ.நா.வின் முழுமையான அங்கீகாரத்தை பாலஸ்தீனர்களினால் பெறக்கூடியதாக இருக்கக்கூடும். ஆனால், சர்வ தேச குற்றவியல் நீதிமன்றத்தில் போர்க்குற்றங்களை நிருபிப்பதென் பது பெரும் சிரமமான காரியமாகவே இருக்கும்.



மூன்றாவது தடவையாக ஜனாதிபதியாவதற்கு ராஜபக்ஷ போட்டியிட்ட தேர்தல் பிரசாரங்களில் காணமுடியாமலிருந்த உத்வேகத்தை அவரை மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டு வர வேண்டும் என்ற சுலோகத்தை முன்னிறுத்தி தற்போது செய்யப்பட்டு வருகின்ற பிரசாரங்களில் காணமுடிகிறது.

பாதுகாப்புச் சபையில் வீட்டோவை அமெரிக்கர்கள் அகற்றுவதும் ஐரோப் பியர்கள் இஸ்ரேலுக்கு எதிராகத் தடை களை விதிப்பதுமே நெதான்யாகு வைத் தண்டிப்பதற்கு கூடுதலானளவு க்கு சாத்தியமான வழிமுறைகளாக இருக்கும். விரைவில் கூடவிருக்கும் அரபு லீக் 1967க்கு முன்னரான எல் லைகளுக்கு இஸ்ரேல் பின்வாங்கி, பாலஸ்தீன அகதிகளுக்கான தீர் வொன்று குறித்து பேச்சுவார்த்தை யையும் நடத்துவதற்கு முன்வரும்பட் சத்தில் அதற்குப் பிரதியுபகாரமாக அரபுலகம் இஸ்ரேலை அங்கீகரிக்க வகை செய்யும் அரபு சமாதானத்திட் டத்தை வலியுறுத்துமென்று எதிர்பார்க் கப்படுகிறது. ஆனால், நெதான்யாகு விடமிருந்து எந்த விதமான அனுகூலமான பிரதிபலிப்பையும் அர புலீக் எதிர்பார்க்கப்போவதில்லை, எனினும் 'இஸ்ரேல் மீது பெருமள வுக்கு நெருக்குதல்கள் பிரயோகிக்கப் படும். அது ஒரு தீண்டத்தகாத நாடு போலாகிவிடும்' என்று தேர்தலுக்குப் பிறகு அரபுலீக் செயலாளர் நபில் எலாரபி கருத்து வெளியிட்டிருந்தார்.

நெதான்யாகு மீண்டும் இஸ்ரேலில் அதிகாரத்துக்கு வருவதனால் ஏற்ப டக்கூடியதைப் போன்ற அல்லது அதையும் விட மோசமான குளறுபடி கள் ஏற்படுவதை தவிர்க்கக்கூடியதாக ராஜபக்ஷ அரசாங்கத்தை தோற்கடித்த மைக்காக இலங்கையர்கள் தங்களுக் குத் தாங்களே நன்றி தெரிவித்துக் கொள்ளலாம். பின்பற்றக்கூடிய உதாரணங்களுக்காக அல்ல. தவிர்க்க வேண்டிய நடைமுறைகளுக்காகவே இலங்கையர்கள் இஸ்ரேலையும் பாலஸ்தீனர்களையும் நோக்க வேண் டும்.

இலங்கைக்கும் யூத அரசுக்கும் இடையே எந்தவிதமான சரித்திர ரீதி யான அல்லது சமூக அரசியல் உறவு கள் இல்லையென்ற போதிலும், அரசி யல் அக்கறை கொண்ட இலங்கை யர்கள் பல்வேறு வழிகளில் இஸ்ரேலி னால் கவரப்பட்டே வந்துள்ளார்கள். ஆரம்பகால தமிழ்ப்பிரிவினைவாதி கள் மத்தியில் காணப்பட்ட இஸ்ரேல் மீதான ஈர்ப்பு தொடக்கம் இஸ்ரேல் மீது முஸ்லிம்களுக்கு இருக்கும். விளங்கிக்கொள்ளக்கூடிய எதிர்ப்பு ணர்வு, 1977க்கு முன்னரான காலகட் டத்தில் இஸ்ரேலுக்கு எதிரான அரபு லக சார்பு- அணிசேரா வெளியுறவுக் கொள்கை, 1977க்குப் பிறகு இஸ்ரே லுடனான புலனாய்வு மற்றும் பாது காப்பு ஒத்துழைப்பு, 2009 க்குப் பின்னரான காலகட்டத்தில் தமிழர்க ளையும் முஸ்லிம்களையும் கையாளு கின்ற விடயத்தில் குடியேற்றத்திட்டங் கள் உட்பட இஸ்ரேலின் நடை முறைகளைப் பின்பற்றுவதற்கு மேற் கொள்ளப்பட்ட முயற்சிகள்வரை இந்த இஸ்ரேல் பற்றிய மருட்சியை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. ஆரம்பத்தில் இஸ்ரேல் மீது நாட்டம் இருந்த போதிலும் கூட, பல தமிழ்த் தீவிரவாதிகள் அராபிய மற்றும் பாலஸ்தீன இயக்கத்திடம் இராணுவப் பயிற்சியைப் பெற்றார்கள். அடுத்து வந்த நாட்களில் இலங்கை அரசாங் கங்கள் அணிசேரா மற்றும் அரபுலக சார்பு கொள்கையிலிருந்து விலகி இஸ்ரேலுடன் உறவுகளை ஏற்படுத் திக்கொண்டன.

இலங்கை நிலைவரத்துக்கும் இஸ் ரேலிய- பாலஸ்தீன நெருக்கடி நிலை வரத்துக்கும் இடையே மேலோட்ட மான ஒற்றுமைகள் இருக்கின்ற அதேவேளை, இரு நிலைவரங்க ளுக்கும் இடையே (மூதாதை மரபு வர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாறு, புவிசார் அரசியல் பின்புலம் மற்றும் எதிர்காலச் சாத்தியப்பாடுகள் தொடர்பில்) அடிப்படையான வேறுபாடுகள் இருக்கின்றன என்ற உண்மை விளங்கிக் கொள்ளப்படவேண்டும். இஸ்ரேல்- பாலஸ்தீன அனுபவங்களில் இருந்து பின்பற்றக்கூடியவற்றையும் விட தவிர்க்க வேண்டியவை குறித்து நோக்க வேண்டியதே இலங்கையர்களைப் பொறுத்தவரை, மிகவும் விவேகமானதாக இருக்கும், உதாரணமாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையையும் அதன் தீர்மானங்களையும் கையாளுகின்ற விடயத்தில் இஸ்ரேலின் உதாரணத்தை பின்பற்றுவதற்கு இலங்கை முயற்சிகூட செய்து பார்த்திருக்கக்கூடாது. அது ராஜபக்ஷ அரசாங்கத்தின் தவறாகும். தற்போதைய அரசாங்கம் புத்திசாலித்தனமாக அந்த அணுகுமுறையைக் கைவிட்டுவிட்டது. வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் குடியேற்றத்திட்டங்களை முன்னெடுப்பது மற்றும் இராணுவமயமாக்கலைத் தீவிரப்படுத்துவது போன்ற விடயங்களில் இஸ்ரேலை உதாரணமாக இலங்கை பின்பற்றுவதென்பதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும்.

பின்பற்றக்கூடிய உதாரணங்களுக்காக அல்ல தவிர்க்க வேண்டிய நடைமுறைகளுக்காகவே இலங்கையர்கள் இஸ்ரேலையும் பாலஸ்தீனர்களையும் நோக்க வேண்டும். சகல சமூகங்களையும் அரவணைக்கும் போக்கை கடைப்பிடிப்பதற்கு இலங்கையர்கள் அரசியலமைப்பு மாற்றம் வரும் வரை காத்திருக்க வேண்டியதில்லை. தற்போது நடைமுறையில் இருக்கின்ற நிறுவனங்களை பயன்படுத்தியே இந்தப் போக்கை ஆரம்பிக்க முடியும்.

பாலஸ்தீன அரசை புறக்கணிப்பதற்கு நெதான்யாகு தன்னைத்தானே நிர்ப்பந்தித்துக் கொண்டபோதிலும் கூட, இரு அரசுகள் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலான தீர்வைத் தவிர, மத்திய கிழக்கு நெருக்கடிக்கு நிரந்தரமான வேறு எந்தத் தீர்வுமே இருக்க முடியாது. பாலஸ்தீன அரசை அங்கீகரித்து அதனுடன் இஸ்ரேல் சகவாழ்வு வாழ முன்வர வேண்டும். அதற்குக் கைமாறாக அரபுலகம் அதன் மத்தியில் இஸ்ரேலிய அரசை ஏற்றுக்கொண்டு படைபலப் பிரயோகத்தில் நாட்டம் காட்டுவதைத் தவிர்த்து இஸ்ரேலின் இருப்பை உறுதிப்படுத்த வேண்டும். இதுதான் உண்மையில் தீர்வாக அமையும்.

இதனுடன் ஒப்பிடும்போது இலங்கையின் நிலைவரம் முற்றிலும் வேறுபட்டதாகும். போருக்குப் பின்னரான இலங்கை நல்லிணக்கத்தைக் கண்டு முன்னோக்கிச் செல்லமுடியும். இதற்கு இந்தத் தீவில் வாழுகின்ற சகல சமூகங்களையும் இலங்கை அரசு அரவணைத்துச் செல்லும் அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். சகல சமூகங்களையும் அரவணைக்கும் போக்கைக் கடைப்பிடிப்பதற்கு அரசியலமைப்பு மாற்றம் வரும் வரை காத்திருக்க வேண்டியதில்லை. தற்போது நடைமுறையில் இருக்கின்ற நிறுவனங்களைப் பயன்படுத்தியே அந்தப் போக்கை ஆரம்பிக்க முடியும். இவையெல்லாம் அல்லது அவற்றில் சிலவாவது தற்போதைய அரசாங்கத்தின் நல்லாட்சி வாக்குறுதிகளின் கீழ் நடந்தேறும் என்பது இப்போது பெருமளவுக்கு சந்தேகத்துக்குரியதாகிவருகிறது. ■

---

*(5ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

யாழ்ப்பாணத்துக்குப் போகும் போது முதலமைச்சருடன் நான் பேசப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டுதான் பிரதமருக்கும் முதலமைச்சருக்கும் இடையிலான கசப்பு நிலையை நோக்க வேண்டும்.

அரசியல் ரீதியில் கருத்து வேறுபாடுகளும் முரண்பாடான நிலைப்பாடுகளும் இருந்தாலும், வடமாகாணத்தில் விவகாரங்களைக் கையாளும் போது பிரதமர் என்றவகையில், அதுவும் நல்லாட்சி பற்றி பரப்புரை செய்கின்ற ஒரு அரசாங்கத்தை நடத்துகின்றவர் என்ற முறையில் விக்கிரமசிங்க மாகாண முதலமைச்சரையோ அவரது நிருவாகத்தையோ அலட்சியம் செய்வதென்பது முற்றிலும் தவறான ஒரு அணுகுமுறையாகும். வடமாகாண சபையை அதற்கு இருக்கின்ற அதிகாரங்களின் போதாமைகளுடன் என்றாலும் இயங்கவிடாமல் செய்த ராஜபக்ஷ ஆட்சியின் அடாவடித்தனமான அணுகுமுறையையே புதிய அரசாங்கமும் கையாளுவதென்றால் ஜனவரி 8 க்கு பிறகு ஏற்பட்டிருக்கக்கூடிய மாறுதல் தான் என்ன?

மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு வடக்கிலிருந்து நேரடியாக அலரிமாளிகைக்கு வந்து அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் முதலமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து கொண்டவர் விக்னேஸ்வரன். தமிழர் தரப்பில் பலத்த ஆட்சேபனைகளுக்கு மத்தியிலும் அவற்றைப் பொருட்படுத்தாமல், தென்னிலங்கை அரசியல் சமுதாயத்துடன் நல்லிணக்கப் போக்கை வெளிக்காட்டுவதற்கான முனைப்பில் தான் அவர் அவ்வாறு செய்து கொண்டார். அத்தகைய நயநாகரீகம் கொண்ட ஒரு முதலமைச்சருடன் நல்லிணக்கத்துடன் செயற்படுவதில் பிரதமருக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், தொடர்ந்தும் விக்னேஸ்வரனைப் புறந்தள்ளும் வகையிலான கருத்துக்களையே பிரதமர் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார். ராஜபக்ஷ ஆட்சியின் ஒருதலைப்பட்சமானதும் எதேச்சாதிகாரத்தனமானதுமான போக்கிலிருந்து முற்றிலும் விலகியதாக நல்லாட்சியை கொண்டுவரப்போவதாக நாட்டுமக்களுக்கு வாக்குறுதியளித்த விக்கிரமசிங்க வடமாகாண விவகாரங்களைக் கையாளுவதற்கு பிரதமர் அலுவலகத்தில் விசேட அதிகாரியொருவரை நியமிக்கப்போவதாக தனது விஜயத்தின் இறுதியில் வடக்கில் வைத்தே அறிவித்திருந்தார். அப்படியானால், வடக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபையும் முதலமைச்சரும் அமைச்சர்களும் எதற்கு? பிரதமர் சிந்திக்கக் கடமைப்பட்டவர்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

திஸ்ஸரணி குணசேகர

# மகிந்த சிந்தனை கருத்தியலும் வரலாற்றைத் திரித்தலும்



*'ஒருவர் நாம் பார்த்ததை உள்ளது உள்ளது படி சொல்ல வேண்டும். யாவற்றிலும் முக்கியமானது எதை ஒருவர் பார்க்கிறாரோ அதனைத் தவறாது பார்க்க வேண்டும்'.*

*Charles Pequy*

'பித்தர்கள் நாம் உருவாக்கிய கற்பனை உலகத்தில் வாழ்பவர்கள். அவர்களை நிஜ உலகின் யதார்த்த உண்மைகள் எவையும் சங்கடப்படுத்துவதோ கட்டுப்படுத்துவதோ கிடையாது'.

ஐக்கிய அமெரிக்கா நாட்டின் அரசியல்வாதி ரொபர்ட் எச்வெல்க் என்பவர் அரசியலுக்கு வருமுன் தொழில் அதிபராக இருந்தவர். அந்த அரசியல்வாதி முன்னாள் ஜனாதிபதிகளான யோன். போர்ஸ்டர் டல்லஸும், ஐசனோவரும் கம்யூனிஸ்டுகளின் முகவர்களாக அர்ப்பணிப்போடு செயற்பட்டவர்கள் என்ற பைத்தியக்காரத்தனமான குற்றச்சாட்டைக் கூறினார். இன்று அவரது வாரிசுகள் இதேபோன்ற பித்தர்கள் போன்று பிதற்றுகிறார்கள். உதாரணமாக ஜனாதிபதி ஒபாமா முஸ்லிம்களின் ஆள் என்றும், அவருடைய சுகாதாரத்திட்டம் முதியோர்களை மனிதாபிமானக் கொலை என்ற முறையில் பெரும் எண்ணிக்கையில் கொன்று குவிப்பதற்கான திட்டம் என்றும் கூறுகிறார்கள்.

இலங்கையில் மகிந்த ராஜபக்ஷவின் தீவிர ஆதரவாளர்களாக உள்ளவர்கள் 1815ஆம் ஆண்டில் என்ன நடந்ததோ அதே நிகழ்வுகள் 2015 இல் நடப்பதாகக் கூறுகிறார்கள். இதைப் பைத்தியக்காரத்தனம் என்று சொல்லாமல் வேறு எப்படி அழைப்பது? இந்தப் பித்தர்களின் கண்களில் இவ்வாண்டு ஜனவரி 8 ஆம் திகதி நடைபெற்ற மாற்றம் ஜனநாயக மாற்றமாகத் தெரியவில்லை. இது அந்நியர்கள் திட்டம் போட்டுச் செய்த நிகழ்ச்சியாகப்படுகிறது. அந்நியர்களின் சூழ்ச்சியை உள்ளூர்ச்சதிகாரர்கள் நிறைவேற்றி விட்டார்களாம். 1815 இல் இலங்கை பிரித்தானியரின் பிடியில் சிக்கித் தனது சுதந்திரத்தை இழந்தது. பின்னர் சுதந்திரம் பெற்ற ஆண்டு 1948 அன்று அல்லது 1972 இல் கூடச் சுதந்திரம் கிடைக்கவில்லை. 2009 இல் தான் விடுதலைப் புலிகளை அழித்ததோடு இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்ததாம். அப்படிச் சுதந்திரம் கிடைத்து ஐந்து ஆண்டுகள் கழிவதற்குள் இன்னொரு தேசப்பற்றில்லாத நாசகாரக்குழு ஒன்று, துரோகிகளான தமது முன்னையை பரம்பரை 1815இல் எதைச் செய்ததோ அவ்வாறான தேசத்துரோகச் செயலைச் செய்து இலங்கையை மீண்டும் ஒரு காலனி நாடாகவே மாற்றி விட்டார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜபக்ஷவின் ஆட்சியில் அவருக்கு அடுத்த நிலையில் இரண்டாம் மூன்றாம் இடத்தில் இருந்தவர்களான இரு சகோதரர்களும் அமெரிக்காவின் பிரஜைகளாக இருந்தனர். இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்துவதற்கும், செத்து ஒழிந்துபோன ஒரு பேரரசின் அந்த அடையாளச் சின்னத்தை நினைவு கூர்வதற்கும் மகிந்த எவ்வளவு பாடுபட்டார்.

சீனாவின் அடிமைக்காலனியாக நாம் மாறியிருக்க வேண்டியவர்கள். அதிஷ்டவசமாகத் தப்பிப் பிழைத்தோம் (இலங்கையின் சுதந்திர தினத்தன்று இலங்கையின் தேசியக் கொடியை துறைமுகப்பகுதியில் ஏற்றுவதைச் சீன அதிகாரிகள் தடுத்தார்கள் என்று ஒரு செய்தி கூறுகிறது). இவை எல்லாவற்றையும் மறந்து விடுங்கள்.

மகிந்தவைத் திரும்ப அரசியலுக்குள் கொண்டு வருவோம் என்று அறைகூவல் விடுக்கும் பேரணிகள் நடத்தப்படுகின்றன. 'எமக்கு வேண்டியவர் ஒரு அரசனே ஆவர்; ஒரு கைப் பொம்மை அன்று' என்ற கோஷத்தைத் தாங்கிய சுலோக அட்டைகள் இக்கூட்டங்களில் தூக்கிப் பிடிக்கப்படுவதுண்டு. இக்கூட்டங்களில் பங்குபற்றும் மகிந்த ஆதரவாளர்கள் '2015 ஆம் ஆண்டின் சதிபற்றிக்கூச்சலிடுகிறார்கள்; தேசிய விரோதிகள் மீதான ஆத்திரத்தால் குமுறுகிறார்கள்; தங்களது அரசனை மீண்டும் அரியாசனத்தில் அமர்த்த வேண்டும் என்று ஆவலோடு இருக்கிறார்கள். அவர்கள் இதற்கென வாடகைக்கு அமர்த்தப்பட்ட பஸ்களில் கூட்டங்களுக்கு வருகிறார்கள். இருந்தாலும் பணத்திற்காக அல்லாமல் உண்மையான ஈடுபாடு காரணமாக இக் கூட்டங்களில் பங்கு பெறுகிறார்கள். இவர்களிடம் காணப்படும் ஆர்வமும் ஈடுபாடும் எதிராளிகளிடம் இல்லையென்றே கூறவேண்டும்.

கடந்தவாரம் மகிந்த ஆதரவாளர் குழுவொன்று தலதாமாளிகைக்குள் சென்று அங்கிருந்த தேசியக் கொடியை அகற்றிவிட்டு 'சிங்களக் கொடி'யை அங்கே ஏற்றினர். மகிந்த ஆதரவாளர் குழு இதுபோன்ற பல நிகழ்ச்சிகளையும் திட்டங்களையும் 1815 இன் 200 வருட நினைவு தினத்தை முன்னிட்டு நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். தலதாமாளிகைச் சம்பவம் இவற்றின் தொடக்கமாகும். அடுத்து இவர்கள் கதிர்காமத்தில் சமய உணர்வு வெளிப்பாடுடைய (பௌத்தம்) விழாவொன்றை நிகழ்த்த திட்டமிட்டுள்ளார்கள். அவ்விழாவில் மகிந்த ராஜபக்ஷவும் பங்கு கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிகழ்வுகளின் நோக்கம் 1815 ஆம் ஆண்டின் கண்டிய ஒப்பந்தத்தையும் 2015 தேர்தலையும் ஒப்பீடு செய்து பிரசாரம் செய்வது தான். இதன் மூலம் சிங்கள மக்கள் மனதில் சிறுபான்மையினர் பற்றிய உளவியல் ரீதியான பயப்பீதியை உண்டாக்குவதும் அதன் மூலம் சிங்கள பௌத்த மேலாதிக்க இனவெறியைத் தூண்டி ஆட்சி அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றுவதாகும்.

**மகிந்தவை திரும்ப அரசியலுக்குள் கொண்டு வருவோம் என்று அறைகூவல் விடுக்கும் பேரணிகள் நடத்தப்படுகின்றன. 'எமக்கு வேண்டியவர் ஒரு அரசனே ஆவார். ஒரு கைப்பொம்மை அன்று' என்ற சுலோக அட்டைகளை இந்தப் பேரணிகளில் தூக்கிப் பிடிக்கிறார்கள். இவர்களிடம் காணப்படும் ஆர்வமும் ஈடுபாடும் எதிராளிகளிடம் இல்லை**



## நாட்டுப்பற்றா இனவெறியா?

கடந்த காலத்தைப் பற்றி மறந்து விடுவதை விட மிக ஆபத்தான விடயம் கடந்த காலத்தின் சில நிகழ்வுகளை மட்டும் தெரிந்தெடுத்து ஞாபகப்படுத்துவதாகும். சில தெரிந்தெடுக்கப்பட்ட வரலாற்று ஞாபகங்கள் 'மகிந்தவை மீண்டும் கொண்டுவருவோம்' என்ற திட்டத்தின் அடிப்படையாக அமைந்துள்ளன. காலனித்துவத்துக்கு முற்பட்ட இலங்கையில் தேசிய அரசு (Nation State) இருந்ததாக கற்பிதம் செய்யும் மகிந்த ஆதரவாளர் அந்த சிங்கள பௌத்த தேசிய அரசை உயிர்ப்பிக்கப் போவதாகக் கூறுகிறார்கள். ஆனால் காலனித்துவ காலத்திற்கு முந்திய இலங்கையில் தேசிய அரசு என ஒன்று இருக்கவேயில்லை. தேசிய அரசு என்ற கருத்துரு ஐரோப்பாவில் இருந்து இறக்குமதியானது; இவர்களின் வழிபாட்டுக்குரிய புனிதப் பொருள் உண்மையில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தால் கொண்டுவரப்பட்டது. தமது வெறுப்புக்குரிய தென்று பிதற்றும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் விக்டோரியா இராணியார் காலத்து அற ஒழுக்க விழுமியங்களைத் தான் மகிந்த ஆதரவாளர்கள் போற்றிப் பூசிக்கின்றனர் என்பதுதான் வேடிக்கையானது.

இவர்கள் 'சிங்களக் கொடியை' மீண்டும், பிரபல்யப் படுத்த வேண்டுமென்கிறார்கள். அந்தச் 'சிங்களக் கொடி' பிளவுபட்ட இலங்கையின் அன்றைய கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரின் அரசனின் கொடி என்பதும் இவர்களுக்குத் தெரியாது. அதைத்தான் இவர்கள் ஐக்கியப்பட்ட இலங்கையின் கொடி என்று நினைக்கிறார்கள்.

ஐரோப்பியர்கள் இலங்கைக்கு முதலில் வந்தபோது இந்நாடு பல சிறு சிறு அரசுகளைக் கொண்டதாக இருந்தது. இலங்கையினை இறுதியாக ஆண்டவர்கள் சிங்களவர்கள் அல்லர். தென்னிந்தியாவில் இருந்து வந்த தமிழ் பேசும் நாயக்க வம்ச மன்னர்களேயாவர். கண்டியில் ஆண்டவர்களில் புகழ்பெற்றவனான கீர்த்தி சிறி ராஜசிங்கன் நாயக்க வம்சத்தின் இரண்டாவதாக அரியணை ஏறிய மன்னன் ஆவான். இவனே பௌத்த துறவிகளுக்கு துறவு மார்க்கத்தை ஏற்கும் புனிதச் சடங்கு முறையை (உபசம் பாத) இலங்கையில் தொடக்கிவைத்தவன்.

தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வரலாற்று உறவுகளும் இவ்வாறே திரித்துக் கூறப்படுகிறது. தென்னிந்தியா எப்போதுமே இலங்கையின் பகை நாடாகத் தான் இருந்தது என்று திரித்துக் கூறப்படுகிறது. ஆனால் இது உண்மையன்று. தென்னிந்திய இலங்கை உறவுகள் பகைமையும் போட்டியும், நட்பும் கூட்டுறவும் என்று இருவகையான அம்சங்களும் கலந்தவொரு சிக்கலான உறவாக அமைந்திருந்தது. தென்னிந்தியப் படைகள் இங்கு வந்து தாக்கிச் சூறையாடியதும் உண்மையே. ஆனால் இங்கு ஆட்சி செய்த மன்னர்களே கூலிப்படைகளை இங்கு கொண்டு வந்து ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போரிட்டனர். ஒரு நகரின் அரசன், இன்னொரு நகரில் இருந்த அரசனைக் கூலிப்படைகளின் உதவியோடு தாக்கினான். தென்னிந்தியாவில் பலநூற்றாண்டுகளாக பௌத்தம் செழித்தோங்கியது. இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையில் நட்புறவை வளர்ப்பதில் பௌத்தம் முக்கிய பங்கு வகித்தது. கடவுள் கொள்கை சாராத தென்னிந்திய பௌத்தம் இந்நாட்டில் செல்வாக்குப் பெற்றதோடு, தென்னிந்திய இந்துக் கடவுளரும் எம் நாட்டினரால் வழிபடப்படும் தெய்வங்களாயினர். இலங்கை மன்னர்கள் தென்னிந்தியாவின் அரச குடும்பங்களோடு திருமண உறவுகளையும் பேணிவந்தனர்.

கண்டியின் கடைசி மன்னன் வாரிசு இல்லாமல் இருந்தபோது மன்னனின் மனைவியின் சகோதரனான மைத்துனன் அரசனாக முடிசூட்டிக் கொள்ளும்படி வேண்டப்பட்டான். இவன் நாயக்க அரச வம்சத்தினைச் சேர்ந்தவன். இறந்த மன்னனிற்கு இரு புதல்வர்கள் இருந்தனர். ஆனால், இவர்கள் 'தரம் தாழ்ந்த இராணிகளின்' புத்திரர்களாயிருந்தனர். இவர்கள் சிங்களவர்களாக இருந்தனரேனும் முடிசூடும் தகைமை உடைய ராஜவம்சத்தினராகக் கருதப்படவில்லை. முதலாவது நாயக்க மன்னனான ஸ்ரீவிஜய ராஜசிங்க இந்து சமயத்தினனாக இருந்தான். ஆயினும் பௌத்த குருமாரும், பிரபுக்களும் மக்களும் இவனை விரும்பி ஏற்று முடிசூட்டுவித்தனர். தேசிய அரசு (அல்லது நேஷன் ஸ்டேற்) என்ற கருத்து அறியப்படாத காலம் அது. ஒரு

ஐரோப்பியர்கள் இலங்கைக்கு முதலில் வந்தபோது இந்நாடு பல சிறுசிறு அரசுகளைக் கொண்டிருந்தது. இறுதியாக இலங்கையை ஆண்டவர்கள் சிங்களவர்கள் அல்ல. தென்னிந்தியாவிலிருந்து வந்த தமிழ் பேசும் நாயக்க வம்ச மன்னர்களேயாவர். கண்டியில் ஆட்சி செய்தவர்களில் புகழ் பெற்றவனான கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கனே பௌத்த துறவிகளுக்கு துறவு மார்க்கத்தை ஏற்கும் புனிதச் சடங்கு முறையை இலங்கையில் தொடக்கி வைத்தவன்

வன் எந்த இனத்தைச் சேர்ந்தவன், எந்த மதத்தைச் சேர்ந்தவன் என்பன அக்காலத்தில் அரச பதவியை ஏற்பதற்குரிய தகுதிகளாகக் கருதப்படவில்லை. அரச பதவி ஏற்பவன் இராஜவம்சத்தினனா, அவனின் உடலில் இராஜ வம்சத்து இரத்தம் ஓடுகிறதா என்பதே தகுதியாகக் கொள்ளப்பட்டது.

தென்னிந்திய - இலங்கை உறவுகள் பன்முகத் தன்மை கொண்டவை. இவற்றை ஒற்றைப்படையாக வருணித்ததோடு, தென்னிந்தியாவும் இலங்கையும் இடையறாத பகைமை கொண்டிருந்தன என்று அநகாரிக தர்மபாலவும் அவரது வழியைப் பின்பற்றியவர்களுமான சமயத்தேசியவாதி களும் சித்தரித்தனர். இருபதாம் நூற்றாண்டில் அமெரிக்கரான சாமுவேல் ஹண்டிங்டன் நாகரிகங்களின் மோதல் (Clash of civilizations) என்ற கோட்பாட்டைக் கூறினார். இதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே சிங்கள - பௌத்த தேசியவாதிகள் இப்படியொரு கோட்பாட்டை கூறிவிட்டார்கள். இவர்கள் இலங்கை தூய பௌத்த மதத்தின் உறைவிடம் என்றனர். அம்மதத்தின் காவலர்களாகத் தேர்ந்து எடுக்கப்பட்டவர்களான சிங்கள பௌத்தர்களின் தேசம் இதுவென்று கூறினர். இத்தேசத்தை அழித்தொழிப்போம் எனக் கிறிஸ்தவ, கத்தோலிக்க, இஸ்லாம் இந்து மதத்தினர்களும் அவர்களது உள்ளூர் ஏவலர்களும் முனைந்து நிற்பதாகவும் கூறுகின்றனர். இவர்களுடைய கண்ணோட்டத்தின் படி உண்மையான போராட்டம் பிரித்தானியர்களுக்கு எதிரானதல்ல. அது இலங்கையின் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிரானதேயாகும். பிரித்தானியர் மீதான அவர்களது கண்டனமும் விமர்சனமும் அரசியல் உள்ளடக்கம் கொண்டவையல்ல. அவை சமய- கலாசார அடிப்படையிலானவை. பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதில் அவர்களுக்கு அதிகளவு ஆர்வம் கிடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாது. பிரித்தானியா சிறுபான்மையினருக்குச் சார்பானது என்று கூறியே அதனை எதிர்த்துக் கூச்சல் போடுகிறார்கள்.

சிங்கள பௌத்தர்களே இந்த நாட்டின் உரித்தாளிகள் என்ற கருத்தின் அடிப்படையில் தோன்றிய நாட்டுப்பற்று உணர்வு, சிறுபான்மையினத்தவர்கள் யாவரும் இங்கு வந்தேறு குடிகள். தமது தயவில் தங்கியிருக்கும் விருந்தாளிகள், அவர்களுக்கு தமது என்று கோரக் கூடிய உரிமைகள் எவையும் கிடையாது என்ற சிந்தனையை இவர்களிடம் வளர்த்துள்ளது. சிறுபான்மையினர் அந்நியர்கள், அவர்களின் பிறந்தநாடு இலங்கையன்று என்று கூறும் இந்த நாட்டுப் பற்று வாதம் சிறுபான்மையினருக்கு நாட்டுப்பற்றுக் கிடையாது என்று கூறுகிறது. அவர்கள் இங்கு வாழ்கிறார்கள்; செழிப்புடன் இருக்கிறார்கள். ஆனால், அவர்களின் இதயம் தமிழ் நாட்டிலோ மத்திய கிழக்கில் அல்லது ஐரோப்பாவிலோ தான் உள்ளது என்று இந்த நாட்டுப் பற்றாளர்கள் கூறுகிறார்கள். இவர்களின் நாட்டுப்பற்று தவறானதும் திரிபுபடுத்தப்பட்டதுமான வரலாற்றின் மீது கட்டமைக்கப்பட்டது. கடந்துபோன காலம் ஒன்றை இவர்கள் இக்கற்பனை செய்கிறார்கள். இக்கற்பனை நவீன காலத்தில் இலங்கையின் மக்களின் வாழ்வில் அமைதியை குலைந்துவிட்டது. சிறுபான்மையினர் அந்நியர்கள்; அவர்களுக்கு இந்த நாட்டில் பற்று இல்லை என்பன உண்மையென்றால் அவர்களை நம்பி எதனையும் செய்ய முடியாது என்பது முடிவு. இவர்கள் கையில் அரசியல் அதிகாரத்தையோ, நிலத்தையோ கொடுக்க முடியாது. ஏன் வாக்குரிமையைக் கூட கொடுக்க முடியாது. சிறுபான்மையினருக்கு எந்தவகையிலான சலுகைகளைக் கொடுத்தாலும் அது தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகிவிடும். சிறுபான்மையினரை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது. அரசியல் இராணுவ அதிகாரத்தின் மூலம் தான் அவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம். மகிந்த ராஜபக்ஷ போன்ற சிங்கள - பௌத்த தலைவர் ஒருவரின் ஆட்சியதிகாரத்தின் கீழ் ஆயுதம் தாங்கி நிற்கும் சிங்களப் படைவீரனின் துப்பாக்கியின் சூழலில் இருந்துதான் அமைதி தோன்ற முடியும் என்றே இந்தச் சிந்தனையாளர்கள் கருதுகின்றனர்.

விடுதலைப்புலிகள் இயக்கம் தோன்றுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே சிங்கள இனவாதம் தோற்றம் பெற்றது. வேலுப்பிள்ளை பிரபாகரன் என்ற சிறுவன் பாடசாலைக்கு,போகாமல் கள்ளம் செய்து, தனது கவன் கொண்டு பறவைகளை அடித்து வீழ்த்திக்கொண்டு திரிந்த அந்த நாட்களிலேயே சிங்கள - பௌத்தர்களின் இனவாதம் தலையெடுத்து மொழிப் பிரச்சினையை தீர்க்கும் ஒவ்வொரு முயற்சியையும் எதிர்த்துத் தோல்வியுறச் செய்தது. நேற்றும், இன்றும், எதிர்காலத்திலும் அதிகாரப் பரவலாக்கத்திற்குத் தடைக்கல்லாக இருந்ததும் தொடர்ந்து இருக்கப்போவதும் இந்த இனவாதச் சிந்தனை தான். இன்று மைத்திரிபால சிறிசேனவின்

**20ஆம் நூற்றாண்டில் அமெரிக்கரான சாமுவேல் ஹண்டிங்டன் நாகரிகங்களின் மோதல் என்ற கோட்பாட்டைக் கூறினார். இதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே சிங்கள பௌத்த தேசியவாதிகள் இப்படி ஒரு கோட்பாட்டை கூறி விட்டார்கள். இலங்கை தூய பௌத்த மதத்தின் உறைவிடம் என்று கூறிய இவர்கள் அம்மதத்தின் காவலர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களான சிங்கள பௌத்தர்களின் தேசம் இதுவென்று உரிமை கொண்டாடினார்கள்.**



தேர்தல் வெற்றியைப் பழித்துரைத்துக் கேலி செய்வதற்குத் துணைபுரிவதும் இந்த இனவாதச் சிந்தனையே என்பதை நாம் மறக்கக்கூடாது. இலங்கையின் உண்மையான ஜனாதிபதியாக இருக்க வேண்டுமானால் ஒருவருக்கு இலங்கை மக்களின் பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றிருத்தல் முக்கியமல்ல. அந்த வெற்றி சிங்கள மக்களின் பெரும்பான்மை வாக்குகளால் கிடைத்த வெற்றியா என்பதே முக்கியமான அளவுகோல். இனத்துவத்தைத் தகுதியாகக் கொள்ளும் இச்சர்வ சனவாக்குரிமைச் சிந்தனைப்படி ஒரு சிங்கள வாக்கு தமிழர் அல்லது முஸ்லிம் வாக்கைவிடப் பெறுமதி கூடியது.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச ஒரு தடவை இவ்வாறு கூறினார். 'எல்லா இனங்களைச் சேர்ந்தவர்களும் எல்லா மதங்களைச் சேர்ந்தவர்களும் சமத்துவமான பங்காளிகளாகும் இலங்கைச் சமூகத்தைக் கட்டியெழுப்பவே நாம் விரும்புகிறோம். தப்பெண்ணங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகங்களும் நிறைந்த கடந்த காலத்தில் இருந்து மீண்டு புதியதோர் வாழ்க்கையை நோக்கிச் செல்வதற்கு நாம் உறுதிபூண்டுள்ளோம். இதற்கு வேண்டிய விட்டுக் கொடுப்புக்களையும் இணக்கப்பாட்டையும் செய்வதற்கு நாம் தயாராக உள்ளோம். ஐக்கியப்பட்ட நாடாக இலங்கை இருக்கவேண்டுமானால் இதனை விட வேறு வழிகள் எதுவும் இல்லை. வடக்குக் கிழக்கிற்கு அந்நியப் படைகள் வந்தமைக்குரிய காரணம் எம்மிடையே ஐக்கியம் இல்லாமல் போனதேயாகும்'. பிரேமதாச காட்டிய இந்த வழியிலேயே யுத்தத்திற்குப் பிந்திய காலத்தில் நாம் பயணித்திருக்க வேண்டும். ஆனால், நாம் அவ்வாறு செய்யவில்லை. ராஜபக்ஷவை நல்லதொரு தருணத்தில் தோற்கடித்தோம். இல்லாவிடில் இந்நாட்டில் வாழும் ஒவ்வொரு சிறுபான்மை இனக்குழுமமும், ஒவ்வொரு சிறுபான்மை மதக்குழுமமும் இலங்கையர் என்ற பொதுவாழ்வில் ஒன்றுபட முடியாமல் அந்நியப்பட்டுப் போகும் நிலை தோன்றியிருக்கும்.

## மகிந்த சிந்தனை பேரழிவைக் கொண்டுவரும்

ராஜபக்ஷவின் தேசத்தை கட்டியெழுப்புதல் சிந்தனையின் உட்பொருள் யாது?

இச்சிந்தனைப்படி மேலாதிக்கமுடைய ஒரு குழு உள்ளது. அதற்குக் கீழ்ப்பட்டனவாகவே இலங்கையின் பிற குழுக்கள் யாவும் உள்ளன. இவ்வாறு இனக்குழுமம்/சமயம்/ சாதி/பால்நிலை என்ற அடிப்படைகளில் உயர்வு தாழ்வு காட்டும் படிமுறை அமைப்பு வழிப்பட்ட சிந்தனையில் மனிதரிடையிலான சமத்துவத்திற்கு இடமில்லை. மேல்நிலையில் வைக்கப்பட்ட இனக்குழுமம் கீழ் நிலையில் உள்ள குழுக்களின் நம்பிக்கையையோ நல்லெண்ணத்தையோ பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை கிடையாது. கீழ்நிலையில் உள்ள குழுக்களின் கடமையும் கடப்பாடும் மேல் நிலையில் உள்ள குழுவின் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் இரந்து கேட்டு நிற்பதுவே. சதாகால மும் தம்மை அடிமை நிலைக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டிய கடப்பாடு கீழ்நிலைக் குழுக்களுக்கு உள்ளது. மகிந்த சிந்தனையின் உட்பொருளும் சாராம்சமும் இவையே.

இக்காரணத்தினால் யுத்தத்தில் மடிந்தவர்களான தம் உறவுகளை அரசியல் கலப்பில்லாத முறையில் நினைவு கூர்தல் கூட ராஜபக்ஷ ஆட்சியில் தேசவிரோதச் செயலாகிவிட்டது. யுத்தத்தில் மடிந்த தமிழ்க் குடிமக்களுக்கு நீதிகேட்பதும் தேசத்துரோகம் ஆகிவிட்டது. பிறர் மீது அனுதாபம் காட்டுதல், அன்புடைமை, இரக்கம் முதலிய உலகப் பொதுவான மனிதப் பண்புகளும் மனிதருக்கு இயல்பாகவே அமைந்த சுதந்திர நாட்டம், நீதி, நற்பண்பு போன்றவற்றின் மீதான பற்றுதல் என்பனவும் வெளிக்காட்டப்படுதல் தண்டனைக்குரிய குற்றச் செயல்களாகிவிட்டன. போர் வெற்றிவா

**சிங்கள-பௌத்தர்களே இந்த நாட்டின் உரித்தாளிகள் என்ற கருத்தின் அடிப்படையில் தோன்றிய நாட்டுப்பற்று உணர்வு, சிறுபான்மையினர்கள் யாவரும் இங்கு வந்தேறு குடிகள், தமது தயவில் தங்கியிருக்கும் விருந்தாளிகள், அவர்களுக்கு தமது என்று கூறக்கூடிய உரிமைகள் என்று எவையும் கிடையாது என்ற மனநிலை இவர்களிடம் வளர்ந்துள்ளது.**

தம் மேலெழும்பியதால் மனிதரிடத்து இரக்கம் காட்டுதல், நீதி, நல்லியல்புகள் என்பன யாவும் மறைந்து போயிற்று.

மனிதர் மனிதப்பண்புகளை இழந்து மிருக நிலைக்கு தாழ்ந்து போதல் இங்கே நிகழ்ந்தது. ராஜபக்ஷ போரில் வெற்றி கொள்ளப்பட்டவர்களை மனிதர்களாகக் கருதாமல் மிருகங்களாக நடத்தினார். அதன்மூலம் அவரும் அவரைச் சார்ந்தோரும் கூட்டாக மிருக நிலைக்குத் தாழ்ந்து விட்டனர். இக்காரணத்தினால் தான் இந்நாட்டில் நல்லிணக்கம் என்பது சாத்தியமில்லாமல் போய் புதிய மோதல்கள் கிளம்பிய வண்ணம் உள்ளன.

தமிழர்களுக்கு எதிரான இந்த நடவடிக்கைகள் மற்றக் குழுக்களை நோக்கியும் திரும்பியது. விடுதலைப்புலிகளை வெற்றிகொண்டு மூன்று ஆண்டுகள் கழிவதற்குள் முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்கப்படட்டது. இக்காலத்தில் கிறிஸ்தவத்தின் எல்லாப் பிரிவினர் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. மகிந்தவின் அரசாங்கத்திற்கு எதிரான சிங்களவர்களும் தாக்குதலுக்கும் துன்புறுத்தலுக்கும் உட்பட்டனர். போரின் வெற்றிக்குக் காரணமாக இருந்த இராணுவத் தளபதியும் அவரது குடும்பமும் தொல்லைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அவர் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். இராணுவத்தளபதியின் மருமகனின் வயது முதிர்ந்த பாட்டியும் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டமை மிகச் சிறந்த உதாரணமாகும்.

ஜனவரி 08ஆம் திகதிக்குப் பிற்பட்ட காலத்தில் கடந்த காலத்தின் சில தவறுகளை திருத்தும் வாய்ப்புக் கிடைத்தது. தேசத்தை மீண்டும் கட்டி எழுப்பும் முயற்சி உணர்வுபூர்வமாக விருப்பத்தோடு செயற்படுத்தப்படுகிறது. இனக்குழுமம்- சமயம் என்ற அடிப்படையில் பிளவுபட்டிருந்த மக்கள் பிரிவினர் யாவர் மத்தியிலும் உள்ள மிதவாதிகள் முதல் தடவையாக ஒன்றுபட்டு நிற்கிறார்கள். விடுதலைப் புலிகள் இயக்கம் இப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. தென்னிலங்கையின் தீவிரவாதிகள் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் அரசியல் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இப்போது நிதானமாகச் சிந்திக்கும் சூழ்நிலை இருப்பதனால் தான் மைத்திரிபால சிறிசேனவும், ரணில் விக்கிரமசிங்கவும் வடக்கு மாகாண சபையின் இன அழிப்புத் தீர்மானத்தைப் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. இந்த விடயம் பற்றி தென் இலங்கையின் மக்களும் பெரிதாகக் கவலைப்படவில்லை. இதன் அர்த்தம் அம்மக்கள் தீவிரவாதத்தால் தூண்டப்படக்கூடியவர்கள் அல்ல என்பதாக ஆயிற்று. அரசியல் தலைவர்களும் கட்சிகளும் தீவிரவாதத்தை அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குரிய கருவியாகக் கொள்ளும் போதுதான் தீவிரவாதம் எரிமலையாக வெடிக்கும். இன்றைய அரசாங்கம் இன அழிப்புத் தீர்மானம் குறித்து கடந்த காலத்தைப் போன்று நடந்து கொண்டிருந்தால் ஒரு அரசியல் நெருக்கடியை உருவாக்கியிருக்கலாம். தேவையற்ற ஒரு அரசியல் நெருக்கடி சர்வ தேச ரீதியாக பல பின்விளைவுகளையும் கொண்டுவந்திருக்கும். இத்தீர்மானம் விடுதலைப்புலி ஆதரவாளர்களுக்கும், ராஜபக்ஷ ஆதரவாளர்களுக்கும் மிக உவப்பானது. ஆனால் அரசாங்கத்தின் நிதானமான எதிர்வினை இத்தீர்மானத்தை கவனிப்பாரற்றதாக்கி விட்டது.

ஜனாதிபதி சிறிசேன வடக்குக் கிழக்கிற்குச் சென்ற போது அவருக்கு உற்சாகமான வரவேற்புக் கிடைத்தது. அவர் பிரித்தானியாவிற்குச் சென்றபோது புலம்பெயர் தமிழர்களின் தீவிரவாதப் பிரிவினர் ஒழுங்கு செய்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் சிறுதொகையினரே கலந்து கொண்டனர். இவை நம்பிக்கை தரும் நிகழ்வுகளாகும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சிறிசேனவின் பிரித்தானிய வருகையையிட்டுத் திட்டமிடப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைக் கைவிடுமாறு கோரி ஒரு செய்தியைக் காணொளிப் பதிவாக வெளியிட்டார். அவரின் துணிவான இச்செயல் பாராட்டிற் குரியது. அவரது கோரிக்கையால் பயனும் விளைந்தது. ஆர்ப்பாட்டக் காரர்களைக் கண்டு ஒழித்து விலகிச் செல்லாமலும் முகத்தில் சினத்தையோ வெறுப்பையோ வெளிக்காட்டாமலும் சிறிசேன சிரித்த முகத்துடன் ஆர்ப்பாட்டக் காரர்களை நோக்கிக் கையசைத்தார். அவர் காட்டிய நயத்தகு நாகரிகமும் பொறுமையும் பாராட்டிற்குரியவை.

தீவிரவாதம் மேலும் மேலும் தீவிரவாதத்தை தூண்டிவிடும். தனது தவறான நடவடிக்கைகளால் ஹிட்லர் சியோனிசத்தை வளர்த்துவிட்டார். யேர்மனியில் யூதர்கள் ஆயிரக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டனர். யூதர்கள் தமக்கென ஒரு நாட்டை உருவாக்கியிருந் தாலும் இப்படுகொலைகள் நடந்திருக்காவிட்டால் இன்றைய உருவத்தில் ஒரு இஸ்ரேல் நிச்சயம் உருவாகியிருக்கமாட்டாது. அமெரிக்கா ஈராக்கை ஆக்கிரமித்திருக்காவிட்டால் இஸ்லாமிய அரசு (ISIS) என்ற பயங்கரவாத இயக்கம் தோற்றம் பெற்றிருக்காது. பெரும்பான்மைச் சமூகம் ஒன்று தீவிரதேசியவாத அடக்குமுறை வழிமுறைகளை வெளிப்படுத்தினால் சிறுபான்மை இனம் அதனை விட தீவிர தேசியவாத எதிர்க்கிளர்ச்சியை வெளிப்படுத்தும். இவ்வுண்மையையே மேற்குறித்த உதாரணங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இலங்கையிலும் சிங்களத் தீவிரவாதம், தமிழ்த்தீவிரவாதம் என்ற இரண்டும் ஒன்றில் இருந்து

**மகிந்த ராஜபக்ஷ போன்ற சிங்கள-பௌத்த தலைவர் ஒருவரின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் ஆயுதம் தாங்கி நிற்கும் சிங்களப்படை வீரரின் துப்பாக்கியின் குழலில் இருந்துதான் அமைதி தோன்ற முடியும்; அரசியல் இராணுவ அதிகாரத்தின் மூலம் தான் சிறுபான்மையினரை கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம் என்றே சிங்கள-பௌத்த சித்தனையாளர்கள் கருதுகின்றனர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றது பலமும் உரமும் பெற்று வளர்ந்திருப்பதைக் காணலாம்.

இவ்விடயத்தில் ஒரு நச்சுவட்டம் செயற்படுகிறது. இந்த நச்சு வட்டத்தை உடைத்து பயன்தருவட்டமாக மாற்ற முடியும். எல்லாச் சமூகங்களிலும் உள்ள மித வாதிகள் ஒன்றிணைந்து பரஸ்பரம் சமாதான வழிக ளைப் பலப்படுத்தியும், ஒருவருக்கு ஒருவர் உதவியும் ஒருதரப்பினரில் இருந்து மற்றத்தரப்பினர் பலமும் உர மும் பெறுவதனாலேயே பயன்தருவட்டமாக இதனை மாற்ற முடியும். இனத்துவப் பிரச்சினைக்கான அரசி யல் தீர்வு இவ்வழியிலேயே எட்டப்பட முடியும். இணக்கமுறையிலான அமைதிக்கான ஒரே ஒரு வழி இதுவே. இவ்வழி மூலமே இலங்கையர் என்ற தேசிய அடையாளத்தை நாம் பெற்றுக்கொள்ள முடியும். இவ் வழி மூலம் செயற்படாமல் அல்லாமல் இலங்கையைச் சீரழிக்கும் திட்டங்களுடன் முனைந்து நிற்கும் ராஜபக் ஷவையும் அவரது ஆதரவாளர்களையும் அவர்களின் அழிவுப்பாதையில் செல்லாமல் தடுப்பதற்குரிய ஒரே ஒரு வழியுமாகும்.

பிரஞ்சுப் புரட்சி முடியாட்சியை தூக்கி எறிந்தது. ஆனால் அதன் பின் நிகழ்ந்தது என்ன? மூன்றாம் நெப் போலியன் 'பொனப்பாட்டிச' சர்வாதிகார ஆட்சியைக் கொண்டு வந்தான். இதேபோல் தான் உலகு எங்கும் தூக்கிவீசப்பட்ட சர்வாதிகாரம் மீண்டும் ஏதோ வடி வில் 'முடி சூட்டி'க் கொண்டு திரும்ப முனைவதைக் காணலாம். மகிந்த ஆதரவாளர்கள் எவ்வளவுதான் பற் றுறுதி கொண்டவர்களாய் இருந்தாலும் அவர்கள் சிறு எண்ணிக்கையினர் தாம், அவர்களால் தேர்தல் வெற்றி யைப் பெற முடியாது. ஆனால் இனவாதத் தீயை மூண்டெரியச் செய்தால் பெருநாசத்தை ஏற்படுத்த லாம். பிரதான கட்சிகள் யாவும் ஒன்றிணைந்தால் இத னையும் கூட கட்டுப்படுத்திவிடலாம்.

உண்மையான ஆபத்து வேறொரு திசையில் இருந்தே வரலாம் என்று நான் கருதுகிறேன். மகிந்த விற்குப் பிந்திய சிறிலங்கா சுதந்திரக்கட்சி தன் சொல்லி லும் செயலிலும் மகிந்த சிந்தனையை ஏற்றுத் தழுவிக் கொள்வதில் தான் இந்த ஆபத்து உள்ளது. நல்லாட்சி யின் எதிர்முனையில் மகிந்த சிந்தனையை நிறுத்திப் பார்ப்பதை விட்டு அதனை வேறுவிதமாக நாம் புரிந்து கொள்ள வேண்டும். புத்தியான முறையில் நாட்டை ஆளுதல் என்பதை நாணயத்தின் ஒரு பக்கமாகக் கொண்டால் அதேநாணயத்தின் மறுபக்கம் மகிந்த சிந்தனையாகும். இந்த உருவகத்தை நான் இன்னும் விபரிந்துக் கூறலாம். புத்தியான ஆட்சி, அறிவுபூர்வ மான ஆட்சி, நாகரீகமான ஆட்சி என்பன நாணயத் தின் ஒருபக்கமாக உள்ளன. மறுபக்கம் கொள்ளையி டும் கள்ளர் ஆட்சி, பழிபாவத்திற்கு அஞ்சாத ஆட்சி, குடும்ப அரசியல், குடும்பப் பொருளியல், இனவா தம், சகிப்புத்தன்மை இல்லாமை, அடக்குமுறை, அகங் காரம், அறியாமை என்பன யாவும் நாணயத்தின் மறுபக்கமாக மகிந்த சிந்தனை என்ற வடிவத்தில் உள் ளன. அர்ஜுனா மகேந்திரன் பற்றிய சர்ச்சையை அர சாங்கம் கையாண்ட விதத்தைப் பார்க்கும் போது மகிந்த சிந்தனையின் பாதையில் புதிய அரசும் பயணிக் கிறதா என்று எண்ண வேண்டியுள்ளது. அரசாங்கத்தின் வரவு-செலவுத்திட்ட யோசனைகளுக்குச் செயல்வ டிவம் கொடுத்து மக்களுக்கு நிவாரணமளிக்க முடியாத இயலாமையில் அரசாங்கம் உள்ளது. இந்நிலையில் மகிந்த சிந்தனை என்ற கொடிய வைரஸின் தாக்கத்தால் தன்னை அழித்துக் கொள்ளும் ஆபத்தில் அரசு உள் ளது.

**மகிந்த ராஜபக்ஷ, போரில் வெற்றி கொள்ளப்பட்டவர்களை மனிதர்களாகக் கருதாமல் மிருகங்களாக நடத்தினார். அதன் மூலம் அவரும் அவரைச் சார்ந்தோரும் கூட்டாக மிருக நிலைக்கு தாழ்ந்து விட்டனர். இந்தக் காரணத்தினால் தான் இலங்கையில் நல்லிணக்கம் என்பது சாத்தியமில்லாமல் போய் புதிய மோதல்கள் கிளம்பிக்கொண்டு இருக்கின்றன.**




புதிய அரசாங்கத்திற்கும் மகிந்த சிந்தனைக்கும் இடையிலான இடைவெளியை இயன்றளவு குறைத் துக்கொள்ள முயற்சிக்க வேண்டும். ஒரு அங்குலம் இடைவெளியைத் தானும் ஏற்படுத்தியே ஆகவேண் டும்.

இந்த நாடு எதிர்நோக்கும் பேராபத்து மகிந்த ராஜ பக்ஷ என்ற நபர் அல்லர்; அவரது ஆதரவாளர்களுமல் லர்; மகிந்த சிந்தனையே பேராபத்து. இதனை நாம் தெளிவாகப்புரிந்து கொள்ள வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# தேசிய அரசாங்கம் எதற்காக?



பேராசிரியர்
சுமணசிறி லியனகே

**போர்க்காலத்தில் இலங்கை தேசிய அரசாங்கம் ஒன்றைகொண்டிருக்கவில்லை. சுனாமியினால் நாடு பாதிக்கப்பட்ட வேளையிலும் தேசிய அரசாங்கம் அமைக்கப்படவில்லை. இப்போது எதற்காக தேசிய அரசாங்கம் என்ற கேள்வியில் நியாயம் இருக்கவே செய்கின்றது.**

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை அதிகாரத்திலிருந்து தூக்கியெறிவதற்காக ஜனவரி 8 ஆம் திகதி வாக்களித்தவர்கள் தங்களது வெற்றியைக் கொண்டாடியிருக்கக்கூடும். ஆனால், மாயாஜால 100 நாட்கள் கடந்து விடுவதற்கு முன்னதாகவே அவர்களில் பலர் மாற்றம் வெறுமனே ஒரு பொருந்தாக் கற்பனையே என்று நினைக்கத் தொடங்கியிருக்கக் கூடும். புதிய அமைச்சர்கள் பதவியேற்றுக் கொண்டதையடுத்து அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 44 ஆகிவிட்டது. இராஜாங்க அமைச்சர்களினதும் பிரதியமைச்சர்களினதும் எண்ணிக்கையையும் சேர்த்துப் பார்த்தால், இது ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த அமைச்சர்களின் எண்ணிக்கைக்கு நெருக்கமாக வந்திருப்பதைக் காணலாம். ஜனாதிபதி செயலகத்தில் மார்ச் 22 ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முன்னிலையில் 26 ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எம்.பி.க்கள் பதவிப் பிரமாணம் செய்து கொண்டபிறகு அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், மற்றும் பிரதியமைச்சர்களின் தொகை 77 ஆகிவிட்டது. இந்த அடிப்படையிலும் வேறு பல விடயங்களைக் கருத்திலெடுத்தும் பார்க்கும் போது மைத்திரிபால- ரணில் அரசாங்கம் மகிந்த ராஜபக்ஷ ஆட்சியிலிருந்து பெருமளவுக்கு வேறுபட்டதாக இல்லை என்ற முடிவுக்கே வர வேண்டியிருக்கிறது. அதனால் முன்னையதை முதலாவது மகிந்த ராஜபக்ஷ ஆட்சி என்றும் தற்போதையதை இரண்டாவது மகிந்த ராஜபக்ஷ ஆட்சியென்றும் அழைக்கவிரும்புகிறேன். போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலகட்டத்தில் கூட இலங்கை தேசிய அரசாங்கமொன்றைக் கொண்டிருக்கவில்லை. சுனாமி அனர்த்தத்தினால் நாடு பாதிப்புக்குள்ளான வேளையிலும் தேசிய அரசாங்கம் அமைக்கப்படவில்லை. அதனால், இப்போது தேசிய அரசாங்கம் ஏன், எதற்காக என்று கேள்வியெழுப்புவதில் நியாயம் இருக்கவே செய்கிறது. இந்தக் கேள்விக்குப் பதிலளிப்பதற்கு முன்னதாக இரு முக்கிய பிரச்சினைகளைக் கிளப்ப வேண்டியது அவசியமாகும்.

முதலாவது, ஜனவரி 8 மைத்திரிபால சிறிசேனவை முழுமனதுடன் ஆதரித்தவர்கள் வெளிப்படுத்திய அபிப்பிராயங்கள் சிலவற்றை நாம் சிந்தித்துப் பார்ப்போமேயானால், ஒரு விடயம் தெளிவாகும். அவர்கள் எல்லோருமே அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் ஏற்கனவே விரக்தியடைந்துவிட்டார்கள். இரண்டாவது மகிந்த ராஜபக்ஷ ஆட்சி அதன் அரசியல் வீரியமின்மையையும் பொருளாதார மலட்டுத்தனத்தையும் நிருவாக ஆற்றலின்மையையும் ஏற்கனவே வெளிக்காட்டிவிட்டது. அதனால், தேர்தல் பிரசாரங்களின் போது மைத்திரிபால சிறிசேனவினால் நாட்டு மக்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதென்பது பெரும்பாலும் சாத்தியமற்றதாகவே தெரிகிறது. இரண்டாவது மகிந்த ராஜபக்ஷ ஆட்சி முதலாவது மகிந்த ராஜபக்ஷ ஆட்சியைவிடவும் அடிப்படையில் வேறுபட்டதாகவே இருக்குமென்று சில முன்னணிப் பிரஜைகளின் தலைமையிலான சிவில் சமூக அமைப்புகளைச் சார்ந்தவர்கள் எதிர்பார்த்த போதிலும் கூட, இரண்டுக்கும் இடையே இருக்கக்கூடிய வேறுபாடுகளையும் விட ஒற்றுமைகளே அதிகம் என்பதை இதுவரையில் நடந்தேறிய காரியங்களை நோக்கும்போது தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். அமைக்கப்பட்டிருப்பது தேசிய அரசாங்கம் என்று கூறப்படுகின்றபோதிலும் அது உண்மையில் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையிலான ஒரு கூட்டரசாங்கமேயாகும்.

இரண்டாவதாக, முதலாவது மகிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜபக்ஷ ஆட்சியின் தன்மையையும் அதன் ஆட்சி முறையின் நுட்பங்களையும் வழிமுறைகளையும் விளங்கிக் கொள்ளவேண்டியது அவசியமானதாகும். முக்கியமான குணாதிசயங் கள் மீது மாத்திரம் கவனம் செலுத்துவோம். இருதுருவ அல்லது பல்துருவ மயமானதாகத் தோன்றுகின்ற ஒரு அரசியல் சூழமைவில் தனித்துருவ ஆட்சிமுறையொன்றையே மகிந்த ராஜபக்ஷ விரும்பினார். அவர் எதிரணியை நசுக்க விரும்பவில்லை. பலம்வாய்ந்த எதிரணியொன்றேதேவை என்று அவர் கூறியதையும் காணக்கூடியதாக இருந்தது. அதேவேளை, எதிரணி விடயத்தில் அவர் வெகுமதியையும் தண்டனையையும் வழங்குகின்ற ஒரு வகை அணுகுமுறையைக் கடைப்பிடித்தார். அதாவது, எதிரணியைப் பலவீனப்படுத்துவதற்காக அதன் உறுப்பினர்களை அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டார். இடைக்கிடை அவர் எதிர்க் கட்சித்தலைவருடன் ஒன்றாக அமர்ந்திருந்து காப்பி அருந்தவும் தவறுவதில்லை. சம்பிரதாயபூர்வமான இருமுனைத்தன்மையின் பிரசன்னம் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை. இந்த ஆட்சிமுறை நுட்பம் அவருக்கு நன்கு பயனளித்தது. ஜனநாயகத் தேர்தல்கள் பெரும் முக்கியத்துவமிக்க அம்சமாக விளங்குகின்ற ஒருநாட்டில் நவதாராளவாத பொருளாதாரக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

மைத்திரிபால சிறிசேனவின் மூன்று வாக்குறுதிகள் சமூகத்தின் பரந்தளவு பிரிவினரைக் கவர்ந்தன. பொருளாதாரத் துன்பத்திலிருந்து விடுபட நிவாரணம், ஜனநாயகமும் ஜனநாயக மயமாக்கலும், நல்லாட்சி ஆகியவையே அந்த வாக்குறுதிகளாகும். ஆனால், மூன்று வாக்குறுதிகளும் சமூகத்தின் வெவ்வேறு பிரிவினரால் வேறுபட்ட முறையிலேயே விளங்கிக் கொள்ளப்பட்டன என்பதை மனதிற்கொள்ளவேண்டியது அவசியமானதாகும். ஜனநாயகத்தையும் ஜனநாயக மயமாக்கத்தையும் வடக்கில் இடம்பெயர்ந்த மக்கள் விளங்கிக் கொண்டமுறை அவற்றை கொழும்பு சிவில் சமூகம் வியாக்கியானப்படுத்தி விளங்கிக்கொண்ட முறையிலிருந்து குறிப்பிடத்தக்க வகையில் வேறுபட்டதாக இருந்தது. 100 நாள் அல்லது 180 நாள் காலண்டர்கள் தயாரிக்கப்பட்டிருந்தபோதிலும், நவதாராளவாத பொருளாதார கட்டமைப்புக்குள் மூன்று வாக்குறுதிகளையும் முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது. எவ்வாறெனினும், முதலாவது மகிந்த ராஜபக்ஷ ஆட்சியைப் போன்றே இரண்டாவது மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கும் மாற்றுவழி இருக்கவில்லை. இரண்டாவது மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் வர்க்கக்கோளத்தினால் (class Configuration) மாற்று பொருளாதாரக் கட்டமைப்பொன்றை விருத்திசெய்ய இயலாமல் போயிருக்கலாம். மீண்டும் அது தனியார்துறையிடமிருந்தும் சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்தும் கடன்களைப் பெறுவதில் நாட்டம் காட்டியது. நிதித்துறை ஒழுங்குமுறையையும் கட்டுப்பாட்டையும் (Fiscal discipline) வெளிக்காட்டாத பட்சத்தில் இந்த அரசாங்கத்துக்கு கடனை வழங்கப்போவதில்லை என்று சர்வதேச நாணய நிதியம் (IMF) ஏற்கனவே எச்சரிக்கை செய்திருந்தது.

**மகிந்தராஜபக்ஷஎதிரணியை பலவீனப்படுத்துவதற்காக அதன் உறுப்பினர்களை அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டார். ஆனால் மைத்திரிபாலவும் ரணிலும் அரசாங்கத்தையும் எதிர்க் கட்சியையும் ஒரு தலைப்பின் கீழ் கொண்டு வந்திருக்கிறார்கள்.**

தேசிய அரசாங்கமென்று சொல்லப்படுகின்ற இந்த அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்கின்றமை இரண்டாவது மகிந்த ராஜபக்ஷ ஆட்சி எவ்வாறு, என்ன வழியில் அதன் ஆட்சிமுறைத் தந்திரோபாயத்தை வகுத்திருக்கிறது என்பதை வெளிக்காட்டுகிறது. முதலாவது மகிந்த ராஜபக்ஷ ஆட்சி எதிர்க் கட்சியைப் பலவீனப்படுத்திய அதேவேளை, இரண்டாவது மகிந்த ராஜபக்ஷ ஆட்சி அரசாங்கத்தையும் எதிர்க்கட்சியையும் ஒரு தலைப்பின் கீழ் கொண்டுவந்திருக்கிறது. எனவே, பிரதமரையும் எதிர்க்கட்சித் தலைவரையும் ஜனாதிபதியே நியமிக்க வகை செய்யக்கூடியதாக அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தச் சட்ட வரைபில் ஏற்பாடொன்றைப் புகுத்துவது தர்க்கத்துக்கு பொருத்தமானதாக இருக்கும். அமைச்சரவைப் பேச்சாளரான சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அறிவித்ததைப் போன்று அடுத்த பொதுத் தேர்தலில் இரு பிரதான கட்சிகளும் தனித்தனியாகவே போட்டியிடும். ஆனால், மீண்டும் 'ஐக்கிய' அரசாங்கமொன்றை அமைத்து பாராளு மன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தரப்பாகவும் எதிர்த்தரப்பாகவும் புதிதாக ஒழுங்கமைத்துக் கொள்ளப்படுவார்கள். இதன்மூலமாக, இரண்டாவது மகிந்த ராஜபக்ஷ ஆட்சி (முதலாவது மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் அம்சங்களில் ஒன்றாக விளங்கிய) ஒரு துருவத் தன்மையை (Unipoiarity) வலுப்படுத்தவே திட்டமிடுகிறது.

தேசிய அரசாங்கம் என்று சொல்லப்படுகின்ற இந்த அரசாங்கத்தினால் ஜனநாயகத்தையும் நல்லாட்சியையும் வறிய வர்க்கங்களுக்கு நிவாரணத்தையும் உறுதிசெய்ய முடியுமா? முன்னைய அரசாங்கத்தின் அரசியல்வாதிகளின் முறைகேடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் ஊழல் நடவடிக்கைகளில் சில வற்றை மூடிமறைப்பதற்கும் அதே முறைகேடுகளிலும் ஊழல்களிலும் ஐ.தே.க.வினர் ஈடுபடுவதற்கான சூழ் நிலையை தயார் செய்வதற்குமான ஒரு முயற்சியே இது என்று ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி)யின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி கூறியிருந்தார். எனது அபிப் பிராயத்தின்படி அவரின் கூற்று மிக மிக கச்சிதமானதாகும். அமைச்சரவை முறையிலான அரசாங்கம் ஆட்சி முறைக்குள் பல்துருவத்தன்மையை (Multi polarity) கொண்டு வரு மென்ற காரணத்தினாலேயே ஜனாதி பதியின் கீழான அரசாங்கமுறையை விட அது சிறப்பானது என்று விரும் பப்படுகிறது. குழு அரசியலைச் சாராத (Group Politics) சுதந்திர மான எம்.பி.க்களும் ஜனநாயகத்துக் குத் தேவை. இவ்விரு கூறுகளும் 1978ஆம் ஆண்டில் இரண்டாவது குடியரசு அரசியல மைப்பு கொண்டு வரப்பட்டபோது அழிக்கப்பட்டுவிட் டன. ஜே.ஆர்.ஜெயவர்த்தனா பாரா ளுமன்றத்தில் முழுமையான பெரும் பான்மைப் பலத்தைக் கொண்டிருந்தார். அதேவேளை, அவ ருக்குப் பிறகு ஜனாதிபதியாக அதிகா ரத்துக்கு வந்தவர்கள் எம்.பி.க்களுக்கு அமைச்சுப் பதவி ஆசை காட்டியே பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைப் பேணக்கூடியதாக இருந் தது. இந்தப் போக்கு ஜனாதிபதி ரண சிங்க பிரேமதாசவின் காலத்திலிருந்து ஆரம்பித்தது. இப்போது ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன நாட்டின் அரசி யலமைப்பை மாத்திரமல்ல, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அரசியல் யாப் பையும் பயன்படுத்தி அரசாங்கத் தையும் எதிர்க்கட்சியையும் தனக்குக் கீழ் கொண்டுவருகின்ற வித்தியாசமா னதொரு வழிமுறையைக் கடைப் பிடிக்கின்றார். எனவே, தேசிய அர சாங்கமென்பது நவதாராளவாத (Neo-Liberalist rule) ஆட்சியை மீளவடிவமைக்கும் ஒரு அப்பட்ட மான முயற்சியேயாகும்.

தேசிய அரசாங்கம் என்று சொல்லப் படுகின்ற இந்த அரசாங்கம் அறிவிக் கப்பட்ட பிறகு உடனடியாக வர்த்தக சமூகம் சாதகமான முறையில் பிரதி பலிப்பை வெளிக்காட்டியிருக்கிறது போலத் தோன்றுகிறது.

நாட்டுக்கு அவசியமாக பெருமள வில் தேவையாயிருக்கின்ற நேரடி வெளிநாட்டு முதலீட்டைக் கவருவ தற்கு அவசியமான அரசியல் உறுதிப் பாட்டை தேசிய அரசாங்கம் கொண்டு வருமென்றும் பல்வேறு காரணங்க ளின் நிமித்தம் முற்றுகைக்குள்ளாகியி ருக்கும் இலங்கை நாணயத்தின் பெறு மதி ஒரு உறுதியான நிலைக்கு வரக் கூடியதாக இருக்கும் என்றும் வர்த்த கத்துறை வட்டாரங்கள் கூறியிருப்ப தாக ஊடகங்களின் மூலம் அறியக் கூடியதாக இருக்கிறது. ■

---

***(57ஆம் பக்கத்தொடர்ச்சி...)***

வாகனங்கள் பயன்படுத்தப்படுவதை நிறுத்துவது முதலான நடவடிக்கை களை மட்டுமே மேற்கொண்டது.

கடந்த 30 ஆண்டு சிங்கப்பூரின் பொருளாதார வளர்ச்சியில் கூலி குறைக்கப்பட்ட இந்தப் புலம்பெயர் தொழிலாளிகளின் உழைப்பு (subsidised labour) முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை நாம் மறந்து விடக் கூடாது. பெரிய அளவில் கட் டுமானப்பணி கள் பெருகிக் கொண் டுள்ள நிலையில் புலம்பெயர் தொழி லாளிகளின் வர த்து குறைவதற்கு வாய்ப்பே இல்லை.

4. லீ குவான் யூ வைப் பொருத்த மட்டில் ஜனநாயகம் என்பது பொருளாதார வளர்ச்சிக்கான தடைக் கல். இரண்டில் ஏதேனும் ஒன்றுதான் ஒரே நேரத்தில் சாத்தியம். சுதந்திரத் திற்குப் பிந்திய இந்திய வரலாற்றின் ஆகக் கறை படிந்த காலமாகிய இந் திரா காந்தியின் நெருக்கடி நிலைக் காலத்தை (1975- 77), இந்தியாவில் ஒழுங்கை நிலைநாட்ட இந்திரா செய்த சரியான காரியம் எனப் பாராட்டியவர் லீ. நெருக்கடி நிலை யில் குடிமக்களுக்கு உயிர் வாழ்வ தற்கு உரிமை இல்லை. அது அரசின் கருணை என இந்திரா அரசு அன்று சொல்லியது நினைவிருக்கலாம். அதேபோல அருகிலுள்ள மியான்ம ரின் இராணுவ சர்வாதிகார ஆட் சியையும் ஆதரித்து வந்தவர்தான் லீ.

பி.பி.சி நேர்காணல் ஒன்றில் ஹாங் காங் ஜனநாயகக் கட்சியின் (Democratic Party) நிறுவனர் மார் டின் லீ சொன்னது போல, லீ குவான் யூ சொந்த மக்களை என்றும் நம்பிய தில்லை. அவரால் அம் மக்களுக்கு உண்மையான ஜனநாயகத்தைத் தரவே இயலாது. அங்கு ஜனநாயகம் இருப்பது போலத் தோன்றும். ஆனால் எப்போதும் அங்கு மக்கள் இழப்புகளை மட்டுமே சந்திக்க இய லும் (Quoted by Muhammed Cohen, Forbes India, April 30,2015). நீதி மன்றங்களும் அவர் களது இழப்புகளை ஈடு செய்த தில்லை.

நீங்கள் ஜனநாயக உரிமைகளை விட்டுக்கொடுங்கள். நான் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறேன். என்பதுதான் லீ குவான் யூ, அவரது மக்களிடம் மேற்கொண்ட பேரம் (bargain). மாற்று விருப்பிற்கு இட மில்லாமல் திணிக்கப்பட்ட கட்டாய மான பேரம் அது. மக்கள் அதை விருப்புடன் ஏற்றுக் கொண்டதாகச் சொல்ல இயலாது. சராசரித் தனிநபர் வருமானம் மிக அதிகமாக இருந்த போதும் மக்கள் அங்கு திருப்தியுடன் வாழ்வதாகச் சொல்ல முடியாது. வெளிநாட்டில் அகதிகளாக வாழும் சிங்கப்பூரியர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.


ஒரு வேளை மனிதர்கள் வாய், வயிறு, பிறப்புறுப்பு ஆகிய மூன்று டன் மட்டும் பிறந்திருந்தால், லீ குவான் யூவின் பேரத்தை அவர்கள் விருப்புடன் ஏற்று வாழலாம். ஆனால் மனிதர்கள் அரசியல் மிருக மாயிற்றே.

இது ரொம்ப நாள் தாங்காது. தாங்கக் கூடாது. சிறைப்பட்டுள்ள அமோஸ் லீயின் எதிர்க்குரல் இதற் கொரு நிரூபணம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# புதிய 'தேசியத் தலைவர்'?



இனப்பிரச்சினையின் பல்வேறு அலகுகள் குறித்த தமிழ் மக்களின் கவலைகளை வட மாகாண முதல்வர், நீதியரசர் விக்னேஸ்வரன் வெளிப்படையாகவே பேசத் தொடங்கியதைத் தொடர்ந்து அவரை 'தமிழ்த் தேசியத்தின் புதிய தலைவர்' என்று பச்சை குத்துவதற்கு ஒரு-சில குழுக்கள் தயாராகி வருகின்றன என்று தற்போது எண்ணத்தோன்றுகிறது. இது குறித்து, விக்னேஸ்வரனை குறைகூற முடியாது. ஆனால், இவ்வாறெல்லாம் சொல்லி, அடிப்படைப் பிரச்சினைகளையும் அவை குறித்த முடிவுகளிலும் தமிழ்ச் சமூகம் மீண்டும் கோட்டைவிட்டுவிடக்கூடாது.




என்.சத்தியமூர்த்தி

கடந்த 2013ஆம் ஆண்டு வட மாகாண சபைத் தேர்தல் மூலம் நேரடி அரசியலுக்கு வருவதற்கு முன்னரே, விக்னேஸ்வரன், இனப்பிரச்சினை குறித்து 'அடிப்படைவாத' கருத்துக்களை ஆணித்தரமாகத் தெரிவித்து வந்திருக்கிறார். தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக பிரசாரம் செய்த வேளையிலும், அத்தகைய கருத்துகளை உதிர்த்து வந்திருக்கிறார். அதனால், தென்னிலங்கை சிங்கள அரசியல் தலைவர்கள் மற்றும் அறிவுஜீவிகள் சிலரின் விமர்சனத்திற்கும் தெரிந்தே ஆளாகி உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியரசர் விக்னேஸ்வரன் இனப் பிரச்சினையை, அலகுகள் அடிப்படையிலான தீர்வுகளை ஒட்டி அணுகவில்லை. ஆனால், பிரச்சினை நீதியான அணுகுமுறையே தமிழர் அரசியல் தலைமைகளின் வழிமுறையாக கடந்த சில-பல தசாப்தங்களாக இருந்து வந்துள்ளது. விக்னேஸ்வரன் இதற்கு மாறாக, 'கோட்பாடு' ரீதியாகவே இனப்பிரச்சினையை அணுகி வந்துள்ளார்.







## அறிவுஜீவிகளின் அணுகுமுறை

விக்னேஸ்வரனின் அணுகுமுறை, 'தமிழ்த் தேசியம்' என்ற கொள்கை அடிப்படையின் மேல் கட்டப்பட்ட கட்டிடம். இதுவே, தமிழ்ச் சமூகத் தலைமைகள் மற்றும் 'யாழ்ப்பாண அறிவுஜீவிகளின்' அணுகுமுறையாகவும் கடந்த பல தசாப்தங்களாக இருந்து வந்துள்ளது. இது அவர்களது அறிவுப் பசிக்கு உணவளித்தது. அதே சமயம், அவர்களுக்கு, தமிழ்ச் சமுதாயத்தில் பல நூற்றாண்டுகளாக இருந்துவந்துள்ள தலைமைத்துவத்தையும் உறுதிப்படுத்தியது என்று கருதுவோரும் உள்ளனர்.

இதில், அடிப்படைப்பிரச்சினையே, 'தமிழ்த் தேசியம்' பேசும் பல அறிவுஜீவிகளும் இன்று உள்நாட்டில் இல்லை. 'சிங்களம் மட்டும்' சட்டம் மற்றும் அதனை ஒட்டிய 1957ஆம் ஆண்டு அமைதிப் போராட்டத்திற்கு எதிராக அன்றைய சிங்கள ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்துவிட்ட அராஜகங்களுக்கு முகம் கொடுக்க விரும்பாமல் அல்லது முடியாமல், அப்போதே மேலை நாடுகளுக்குச் சென்று விட்டனர். அங்கு, தங்களது அறிவு மற்றும் ஆற்றல்களுக்கு ஏற்ற மேல் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளைப் பெற்று, வாழ்க்கையில், பலரும் மெச்சும் நிலைமையை அடைந்தனர்.

அவர்களைத் தொடர்ந்து அடுத்த தலைமுறையினர், 1983ஆம் ஆண்டு இனப்படுகொலை காரணமாகவே நாட்டைவிட்டு ஓட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவர்களில் அறிவுஜீவிகள் என்று மட்டுமல்ல, 'தமிழன்' என்ற அடையாளத்தைப் பெற்ற அனைவருமே அடங்கியிருந்தனர். உயிர்ப்பயத்திற்கு அப்பாலும் சென்று, தனிநபர் மரியாதை, 'இன மானம்' ஆகியவை, அரசு மற்றும் ஆட்சியாளர்களின் ஆதரவுடன் கூறுபோடப்பட்ட போது அவர்களால் செய்வதற்கு ஒன்றுமே இல்லை என்ற நிலைமை உருவாயிற்று.

இந்த இரு சாராருக்குள்ளும் அடங்காமல் வேலை வாய்ப்புத் தேடி, குறிப்பாக அரபு நாடுகளுக்குச் சென்ற தமிழர்கள் உள்ளனர். அவர்கள் உள்நாட்டில் தமிழர் இனத்திற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் நெருக்கடிகளை ஏற்றுக் கொண்டவர்கள் என்றல்ல பொருள். மாறாக, தங்கள் உறவுகளையும் உடமைகளையும் விட்டுவிட்டுப் போக மனமில்லாமல், இலங்கையிலேயே தங்கிவிட விரும்பி முடிவெடுத்தவர்கள். வெளி நாடுகளில் வேலை செய்து, குடும்பத்திற்கு வருமானம் ஈட்டுவது அவர்களைப் பொறுத்தவரையில், உள்நாட்டிலேயே வெளியூர்களில் வேலை செய்வதற்கு சமம்.

அண்மைக்காலங்களில், இந்த இரு தரப்பினரையும் தவிர்த்து, 'பொருளாதார மேம்பாடு' காரணமாக, வெளிநாடுகளில் வேலை வாய்ப்பைத் தேட விளையும் சில தமிழ் இளைஞர்கள், 'இனப்பிரச்சினையை' காரணப் படுத்தி, அதன் காரணமாக மேலை நாடுகளில் 'அரசியல் அகதிகளாக' தஞ்சம்புகுவதற்கு, 'கள்ளத் தோணி' மூலமாக முயற்சி செய்து வருகிறார்கள். இனப்போர் முடிவதற்கு முந்தைய காலகட்டத்தில், அவர்கள் கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்து வந்தனர். தற்போது, அவுஸ்திரேலியாவே அவர்களுடைய இலக்கு.

## கொச்சைப்படுத்துதல்?

இவர்கள் இனப்பிரச்சினையையே கொச்சைப் படுத்துகிறார்கள் எனலாம். ஆனால், இனப்போரைக் காரணம் காட்டி, வேலை வாய்ப்பு இன்மையைப் பெரிதுபடுத்துகிறார்கள். உண்மையில், இனப்போர் நடைபெற்றிருக்கவில்லை என்றாலும், இலங்கை போன்ற சிறிய நாட்டில், எந்த இனத்த வருக்கும் வேலைவாய்ப்பு ஏற்பட்டு விடும் என்று கருதிவிடக்கூடாது. பெரும்பான்மைச் சிங்கள இனத்தவர்களில் பெரும்பாலானோரும் இன்றளவும், உலக நாடுகளில் பலவற்றிலும் அடிப்படை வேலைகளைச் செய்து தங்களது பசியையும், வீடுகளில் விட்டுச்செல்லும் தங்களது குடும்பத்தாரின் பசியையும் போக்கி வருகிறார்கள் என்பதே உண்மை.

ஆனால், இவர்களில் யாருமே 'தமிழ்த் தேசியம்' பேசுவது இல்லை. அவ்வாறு பேசும் போதும், தங்களது அன்றாடப் பிரச்சினைகளையும், வாழ்வாதார நிலையின்மையையும் குறித்தே அவர்களது கவலைகள் இருக்கின்றன. 'இனப்பிரச்சினையை' அவர்கள் வாழ்வு மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினையாகவே பார்த்து வந்துள்ளார்கள். அவர்களை பொறுத்தவரையில், இதில் 'தமிழ்த் தேசியம்' மற்றும் 'கோட்பாடு அரசியல்' போன்ற அறிவுஜீவித்தனமான மனநிலைகளுக்கும் வழிமுறைகளுக்கும் இடமில்லை.

இந்த மக்களைப் பொறுத்தவரையில், 'காணி உரிமை' மற்றும் தமிழர் குடியிருப்புப் பகுதிகளில் இருந்து இராணுவத்தைப் பின்வாங்குவது போன்ற பிரச்சினைகள், அன்றாட வாழ்வு குறித்த பிரச்சினைகள். இன்னும் சொல்லப்போனால், காணி பிரச்சினையை அக்கக்கா பிரித்துப் போட்டுப் பார்த்தால், அதில் உரிமைக்கும் கடமைக்கும் உள்ள வேறுபாடுகள் வெளிப்பட்டுவிடும் என்பதனை அந்த மக்களும் உணர்ந்தே உள்ளனர். இதனால் தான், தமிழ் அரசியல் தலைமைகளும் அதனை அரசியல் பிரச்சினையாக்கி, மக்களை தங்களது பக்கம் தக்கவைத்துக் கொள்ளவும் இதனை ஒரு ஆயுதமாகவும் பயன்படுத்தி வந்துள்ளனர் என்று கூட இலை மறைவு-காய் மறைவு கருத்து இரண்டாம் கட்ட அரசியல் மற்றும் சமூகத் தலைமைகளிடம் உள்ளது எனலாம்.



## 'தெளிவான' குறிக்கோள்

ஆனால், 'தமிழ்த் தேசியம்' பேசும் உலகளாவிய யாழ்ப்பாண அறிவுஜீவிகள், தங்களது குறிக்கோளில் தெளிவாகவே உள்ளனர். 'தந்தை செல்வா' ஆகட்டும், 'அமிர் அண்ணன்' (அமிர்தலிங்கம்) ஆகட்டும், விடுதலைப் புலிகள் இயக்கமும் பிரபாகரனும் ஆகட்டும், அல்லது தற்போது நீதியரசர் விக்னேஸ்வரன் ஆகட்டும், அவர்களது கோட்பாடு அரசியல் மற்றும் மிதவாதம் அல்லது தீவிரவாத வழிமுறைகள் அனைத்தையுமே தங்களது 'தனி நாடு' குறிக்கோளின் அடுத்தகட்டம் என்றே அவர்கள் கருதி வந்துள்ளனர்.

அதுபோன்றே, அமெரிக்காவின் மீது மேற்கொள்ளப்பட்ட 9-11 தீவிரவாதத் தாக்குதல்கள் ஆகட்டும், இந்தியாவின் ராஜீவ் காந்தி படுகொலை ஆகட்டும், அவற்றின் தாக்கத்தைச் சரியாக வரையறுத்து, தங்களது பாதையை மாற்றிக்கொண்டு வந்துள்ளனர். ஆனால், அவர்களது குறிக்கோள் என்றுமே மாறியதில்லை. அவர்களில் சிலர், 9-11 தாக்குதல்கள் மற்றும் ராஜீவ் காந்தி படுகொலை ஆகிய நிகழ்வுகளின் சர்வதேச தாக்கத்தை 'வன்னிக் காடுகளில்' நெடுங் காலமாக முடங்கிவிட்ட பிரபாகரன் தலைமையால் முழுமையாகப் புரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள முடியவில்லை என்றும் கரு தினார்கள் என்பதே உண்மை.

'தமிழ்த் தேசியம்' என்ற பெயரில், 'இரு தேசம், ஒரு நாடு' என்ற அடிப்ப டையில் அரசியல் செய்யும் தமிழ் அர சியல் மற்றும் சமூகத் தலைமைகள் கூட, 'தனி நாடு' அறிவுஜீவிகளால் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறார் கள் என்பதும் உண்மை. ஒன்று, இவ் வாறு 'இரு தேசம்' பேசும் தமிழ்த் தலைவர்கள், ஒன்று தங்களைத் தாங் களே ஏமாற்றிக் கொள்கிறார்கள் அல் லது, தமிழ் மக்கள் நினைக்கும் அளவிற்கு அவர்கள் அறிவாளிகள் அல்ல. 'தனி நாடு' அறிவுஜீவிகளால் தாங்கள் பயன்படுத்திக் கொள்ளப்ப டுகிறோம் என்பதை அறிந்து கொள்ளாதவர்கள் அல்லது அறிந்து கொள்ளாதது போல் நடிக்கிறார்கள்.

இந்த 'தனி நாடு' அறிவுஜீவிகளின் வாழ்க்கை முறையே அலாதியானது. ஐம்பதுகளிலும், எழுபது-எண்பது களிலும் தங்களது நாட்டில் தொலைத் தவற்றை, தற்போது வாழும் வெளி நாடுகளில் இருந்து கொண்டே பெற் றுக்கொள்ளத் துடிப்பவர்கள். இலங் கையில் எதிர்காலம் இல்லாத இவர் கள், தங்களது கடந்த காலத்தை, தாய் நாட்டில் தங்கிவிட்ட அல்லது தங்கவி டப்பட்ட தங்களது எதிர்கால தலை முறையினர் மீது திணிக்க முயல்கிறார் கள். பல்வேறு முயற்சிகளில் தொடர் ந்து வெற்றி பெற்றும் வந்துள்ளார்கள்.

தங்களது கடந்த காலத்தை தங்களது எதிர்காலத் தலைமுறையினர் மீது திணிக்கும் இந்த பெருமக்கள் என் றுமே அதனை தங்களது எதிர்காலச் சந்ததியினர் மீது திணிக்க முயன்றதா கத் தெரியவில்லை. அவர்களது, மகன் -மகள்கள் மற்றும் பேரன்-பேத்தியர் ஆகியோர் இன்றளவும் வெளிநாடுக ளில் தங்களது வாழ்வை அமைதியாக முடித்துக்கொள்ள விரும்புபவர்கள்.



அவர்களது மனதையும் மூளையை யும் சலவை செய்ய, நம்மிடையே உள்ள 'தனி நாடு' மற்றும் 'தமிழ்த் தேசியம்' பேசும் அறிவுஜீவிகள் முயன்றுள்ளதாகத் தகவல்கள் இல் லை.

## 'இடம்பெயர்தல்' வாழ்க்கை

இந்த அறிவுஜீவிகளின் வேடிக்கை யான ஆனால் வருத்தப்பட வேண் டிய ஒரு வழிமுறை உள்ளது. தங் களது 'இடம் பெயர்தல்' வாழ்க்கைக்கு, இனப்பிரச்சினை மீது மட்டுமே பழிபோடும் அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கம் தங்களது பிள்ளை களை கடந்திச் சென்றது என்றோ, கடத்திச் செல்ல முயன்றது என்றோ இன்றளவும் சொன்னதில்லை. அதற்கு அவர்களில் பலருக்கு அவசியம் வந்த தில்லை என்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

எது எப்படியோ, வெளிநாட்டில் தங்கி, அந்தந்த நாட்டுப் பிரஜையா கவே மாறிவிட்ட நமது அறிவுஜீவிக ளுக்கு, ஏன் தங்களது கொள்கைகளில் நம்பிக்கை இருந்ததில்லை என்ற கேள் விக்கும் பதில் இன்றளவும் இருந்த தில்லை. உண்மையிலேயே தங்களது 'இரு தேசம், ஒரு நாடு' என்ற கொள் கையில் நம்பிக்கை இருந்திருந்தால் அல்லது 'தனி நாடு' கிடைக்கும் என்று அவர்கள் உறுதியாக இருந்தால், ஏன் மற்றொரு வெளிநாட்டுப் பிரஜையாக அவர்கள் மாற வேண்டும்?

கொச்சையாக சொல்ல வேண்டுமா னால், தற்போது கிடைக்கும் வெளி நாட்டு சொகுசுகளை விட்டுவிட அவர்கள் தயாரில்லை. அதே சமயம், யாராவது அப்பாவித் தமிழர்கள் போராடி, உயிரிழந்து தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்டுவார்களே யானால், அன்று அவர்களை அரசோச் சுவதற்கு, இவர்கள் என்றுமே தயா ராக, பெட்டி-படுக்கை, பெண்டு- பிள்ளைகளுடன் வந்து இறங்கி விடு வார்கள். இதுதானே கடந்த காலங்க ளிலும் நிகழ்ந்து வந்துள்ளது?

## காடு ஆறு மாதம்

இன்று மட்டும் என்னவாம், இந்த அறிவுஜீவிகள் இன்றளவும் 'இரட்டை வாழ்க்கை' தானே வாழ்ந்து வருகிறார் கள்? வயதுபட்ட அவர்களில் பலரும், தாங்கள் வாழும் நாடுகளில் 'பனிக் காலம்' துவங்கிவிட்டால், இலங் கைக்கு வருவது, இங்கு விடுபட்டுப் போன, அறிவுஜீவிகள், அரசியல் தலைவர்கள் மற்றும் அப்பாவித் தமிழ் மக்களுக்கு கொம்பு சீவி விடுவது. பின்னர், ஐரோப்பா, கனடா நாடுக ளில் பனிக்காலம் போய், வசந்த காலம் வந்துவிட்டால், இவர்களது வாழ்விலும் வசந்தம் மீண்டும் துளிர் விடும். இலங்கையில் இருந்தும், தமி ழர் பகுதிகளில் இருந்தும் இவர்கள் காணாமல் போய்விடுவார்கள்.

இவர்களது 'காடு ஆறு மாதம்- நாடு ஆறு மாதம்' கொள்கைப் பிடிப்பிற்கு இன்னும் எத்தனை நாட்கள் தான் தமிழ் மக்களும் அரசியல் தலைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் தங்களைத் தொடர்ந்து பலிக்கடா ஆக்க வேண்டும்? ஏன், இந்த அரசியல் தலைவர்களில் கூட எத்தனை பேர், போர் முடிந்த ஐந்து ஆண்டு காலத்தில், தங்களது மக்களுடன் அன்றாடம் வாழ்ந்து வந்துள்ளனர்? அல்லது, அவர்களது பெண்டு-பிள்ளைகளில் எத்தனை பேர், இன்றளவும் இலங்கையிலேயே வாழ்ந்து வந்துள்ளனர்? தனக்கு ஒரு நீதி, தமிழனுக்கு ஒரு நீதி என்பது தானே இவர்களது வாழ்க்கை முறையாகவும் இருந்து வந்துள்ளது?

முப்பது ஆண்டுகளாக நடந்த இனப் போரில் இரண்டாம் மற்றும் முடிவுக் கட்டம், கிளிநொச்சி மற்றும் வன்னிப் பகுதிகளோடு அடங்கிப் போனதால் மட்டுமே அந்த மக்களே அதிக அளவில் பாதிக்கப்பட்டனர். கடந்த 1995 ஆம் ஆண்டு அரசாங்க இராணுவத்தினரிடம் யாழ்ப்பாணத்தை இழந்த பின்னர், விடுதலைப் புலிகள் இயக்கம் அந்த நகரை மீண்டும் கைப்பற்ற முயலவே இல்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் முன்பு யாழ்ப்பாணத்தில் செய்த அதே பிழையை மீண்டும் விட்டு, கடைசிப் போர்க் காலத்தில், கிளிநொச்சி நகர மக்கள் அனைவரையும் 'மனிதக் கேடயமாக' முள்ளிவாய்க்கால் பகுதிக்கு கட்டாயமாக அழைத்துச்சென்று அங்கு அவர்களையும் பலிகடா ஆக்கினார்கள் என்பது தானே உண்மை? இதனால் தானோ என்னவோ, போர் முடிந்து ஐந்து ஆண்டுகள் ஒடிவிட்ட காலகட்டத்தில், இன்றளவும், உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் தமிழ் அறிவுஜீவிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் 'தமிழ்த் தேசியம்' மற்றும் 'தனி நாடு' குறித்தே அரசியல் செய்து வருகின்றனர் எனலாம்.

## 'துரோகி' ஆகும் 'தேசியவாதி'

இந்த அறிவுஜீவிகளின் அரசியலே அலாதியானது. 'பிரிவினைவாதம்' குறித்த எந்த முயற்சிக்கும் ஏதாவது விதத்தில் கருத்துத் தெரிவிக்கும் அனைவருமே தேசியவாதிகள். மாறாக, மிதவாத அரசியல் செய்து, இணைந்துபட்ட இலங்கையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று கருதிச் செயல்படும் தமிழ்ச் சமூக-அரசியல் தலைவர்களுக்கு, 'துரோகி'ப் பட்டம் கட்டி அவர்களை ஒரம் கட்டுவதை அவர்கள் வாடிக்கையாகவே கொண்டுவந்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் காலகட்டத்தில், அத்திரை முத்திரை குத்தப்பட்ட 'இனத் துரோகிகள்' மரணத்தை (மரண தண்டனை?) எதிர் கொண்டனர். நீலன் திருச்செல்வம் ஆகட்டும், அமிர்தலிங்கம் ஆகட்டும், இவ்வாறு முத்திரை குத்தப்பட்டோரின் வழிமுறைகளை கொச்சைப்படுத்தி, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் படுகொலையை நியாயப்படுத்துவதே இந்த அறிவுஜீவிகளின் அறிவிக்கப்படாத கடமைகளில் ஒன்றாகவே இருந்து வந்துள்ளது.

அண்மைக்காலங்களில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர் இரா.சம்பந்தனுக்கு 'துரோகி'ப் பட்டம் கட்டியதும், அவரை தொடர்ந்து, பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு எதிராக கொடும்பாவி கொளுத்தியதும் வேண்டுமென்றால் 'பிரிவினைவாதிகள்' செயலாக இருந்திருக்கலாம். ஆனால், இன்றளவும், அவர்களுடைய செயல்பாடுகளை, எந்தத் தமிழ் அறிவுஜீவியும், அவர்கள் சார்ந்திருக்கும் இனம், மதம், மொழி அல்லது சமூகம் சம்பந்தப்பட்ட அமைப்புகள் கண்டனம் செய்யவில்லை என்பதே உண்மை.

ஆனால், 'பிரிவினைவாதிகள்' மற்றும் 'தமிழ்த் தேசியம்' பேசும் அறிவுஜீவிகளின் சொல்லம்புகளுக்கு பயந்தோ என்னவோ, சம்பந்தன் மற்றும் சுமந்திரன் போன்ற தலைவர்களும் கூட தங்களுடைய முந்தைய நிலைப்பாடுகளில் இருந்து மாறிய கருத்துகளைக் கூறத் துவங்கிவிட்டனர். இது போன்ற, இரு சால் ஒட்டம் முந்தைய ராஜபக்ஷ தலைமையுடன் கூட்டமைப்பு நடத்திய பேச்சுவார்த்தைகள் முறிந்ததற்கான முக்கிய காரணங்களில் ஒன்று.

'தமிழ்த்தேசியம்' அரசியலை நன்கு அறிந்து உணர்ந்துள்ள சம்பந்தன் போன்ற தலைவர்கள், தாங்கள் முத்திரை குத்தப்பட்டுவிட்டவர்கள் என்பதை நன்றாகவே உணர்ந்து கொள்ளவேண்டும். அவர்களது மனமாற்றமே, எதிர்காலத்தில் தமிழர் மற்றும் இலங்கை அரசியலில் தங்களது இடத்தை உறுதிப்படுத்திவிடும் என்று யாராவது கருதினால், அவர்கள் அமிர்தலிங்கம் போன்றோரின் முடிவை நினைவில் கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் இல்லாமல் போன இந்தக் காலகட்டத்தில், தங்களது உயிரைப் பற்றி யாரும் கவலைப்பட வேண்டியது இல்லை. இந்தப் பின்னணியில், 'தந்தை' செல்வா இன்று உயிருடன் இருந்து, உடல் மற்றும் மனநலம் நிரம்பப் பெற்றிருந்தால், அவருடைய நிலைமை என்னவாகி இருக்கும்? எழுபதுகளில், தமிழ்ப் போராளிக் குழுக்கள் இனப்பிரச்சினைக்கு ஆயுதப்புரட்சி மூலம் தீர்வு காண முயன்றாலும் கூட 'தந்தை' செல்வா வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன்னெடுக்க வேண்டிய கட்டாயம் எழுந்தது என்று கூட கருதலாம்.

அன்றுதொட்டு, இன்றளவும், தமிழ் மிதவாதத் தலைமைகள், தீவிரவாதக் குழுக்களிடம் இருந்தே 'உத்தரவு' பெற்று செயல்படுத்தி வந்துள்ளனர். அந்த விதத்தில், தந்தை செல்வா இன்றும் உயிருடன் இருந்திருந்தால், விடுதலைப் புலிகள் இயக்கம் அவரை எவ்வாறு ஏற்றுக்கொண்டிருக்கும்? அல்லது, அவர் எவ்வாறான உத்தரவுகளை எல்லாம், விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் இருந்து எதிர்பார்த்து செயல்படுத்த கட்டாயப்படுத்தப்பட்டிருப்பார்? அத்தகைய சூழலில், தமிழ் அறிவுஜீவிகள் அவரை ஏற்றுக்கொண்டிருப்பார்களா?. அல்லது, விமர்சித்து 'துரோகி'ப் பட்டம் கட்டத் தயார்படுத்தியிருப்பார்களா? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



லத்தீப் பாரூக்

# தேசிய கீதத்தை தமிழில் பாடுதல்



இலங்கையின் தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாடுவதற்கு உத்தியோகபூர்வ அனுமதியை வழங்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட தீர்மானம் மிகவும் உற்சாகத்துடன் வரவேற்கப்பட வேண்டியதாகும். இரு பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசியக்கட்சியினதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் இனவாத அரசியலின் விளைவாக உருக்குலைந்து போன நாட்டைப் பொறுத்தவரை இது நல்லதோர் சகுனமெனலாம். தமிழில் தேசிய கீதத்தைப்பாடுவதற்கான உரிமையை மறுத்த சுதந்திரக்கட்சி இப்போது ஐக்கிய தேசியக்கட்சியுடன் சேர்ந்து ஜனாதிபதியின் தீர்மானத்துக்கு ஆதரவளித்திருக்கிறது. சட்டத்தின் சீர்குலைவை நோக்கிச் சென்று கொண்டிருந்த நாட்டில் சகல சமூகங்களுக்குமான ஒரே நம்பிக்கையாக அமைதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான அரசியல் புரட்சியொன்றைக் கொண்டுவந்த ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவினால் வெளிக்காட் டப்பட்டிருக்கும் ஒரு பெரிய நல்லி ணக்கச் சமிக்ஞையாக இதைக் கருதமுடியும். துணிச்சலானதும் தூர நோக்குடையதுமான இந்த முடிவுக் கான பெருமை அவரையே சாரும்.

இனவாத அரசியலின் விளைவாக மூண்ட இனப்போரினால் சின்னா பின்னப்பட்ட நாட்டில் சமூகங்கள் மத்தியிலான நல்லிணக்கம் என்பது உளச்சலிப்பை ஏற்படுத்துகின்ற ஒரு நீண்ட பயணமாகவே இருக்கிறது. தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து மறுக் கப்பட்டமையே சமூகங்களைப் பிளவுபடுத்தி, அமைதியான இந்த நாட்டை ஒரு கொலைக்களமாக மாற்றிய இனமோதலுக்கு பெருமள வுக்கு காரணமாயமைந்தது. அதன் விளைவாக அபிவிருத்திக்கும் மக்க ளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவ தற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடிய விலைமதிப்பற்ற வளங்கள் அநாவசியமான போருக்காக நாசகா ரத்தனமாக விரயம் செய்யப்பட்டன. அதேவேளை ஆயுதக் கொள்வனவு மூலமாக அரசியல்வாதிகள் பெரு மளவு பணத்தைச் சுருட்டிக் கொண் டார்கள்.

ஜனவரி 8 தேர்தலில் ஜனாதிபதி யாக மைத்திரிபால சிறிசேனவின் தெரிவு சிங்களவர்களும் தமிழர்க ளும் முஸ்லிம்களும் ஏனையவர்க ளும் இலங்கையில் ஒன்றுபட்டு வாழவிரும்புகிறார்கள் என்பதை வெளிக்காட்டியது. அதனால், கடந்த காலத் தவறுகளைத் தவிர்த்து, சிறு மைத்தனமான அரசியலுக்கு அப் பால் சமூகங்களை ஒன்றுபடுத்துவ தற்கு துணிச்சலான முன்முயற்சி களும் செயற்பாடுகளுமே இன்றைய தேவையாக இருக்கிறது.

ஆயிரம் மைல் பயணம் ஒரு அடி யெடுத்து வைப்பிலிருந்தே ஆரம்பிக் கிறது என்று சீனப் பழமொழி யொன்று உண்டு. அதேபோன்றே பிளவுபட்டிருக்கும் இலங்கைச் சமூ கங்களை ஒன்றிணைப்பதை நோக் கிய முதலாவது அடியெடுத்துவைப் பாக தேசிய கீதத்தை தமிழ்மொழியில் பாடுவதற்கு அனுமதிப்பதற்கு ஜனா திபதி எடுத்த தீர்மானம் அமைய முடியும்.

மார்ச் 17 ஆம் திகதி தேசிய நிறை வேற்றுச் சபை (National Executive Council) கூடியபோது ஜனநா யக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் இந்தப் பிரச்சினை யைக் கிளப்பினார். அதையடுத்து தேசிய கீதத்தைத் தமிழில் பாடுவ தற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை அகற்றும் தீர்மானத்தை ஜனாதிபதி சிறிசேன அறிவித்தார். தேசிய கீத த்தை தமிழிலும் பாடுவதற்கு உத்தி யோகபூர்வ அங்கீகாரம் வழங்கப்பட் டுவிட்டது குறித்து சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களுக்கும் பாட சாலை அதிபர்களுக்கும் அறிவிப்ப தற்கு சுற்று நிருபமொன்றை வெளியி டுவதற்கும் உடனடியாகவே ஜனாதி பதி இணங்கிக்கொண்டார்.

1948ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இனவாத அரசி யலில் தழைத்தோங்கிய அரசியல்வா திகளுக்கு இந்த ஞானம் உதித்திருந் தால், அடுத்துவந்த வருடங்களில் நாடு அனுபவிக்க வேண்டியிருந்த துரதிர்ஷ்டவசமான படுகொலைக ளைத் தவிர்க்கக்கூடியதாக இருந்தி ருக்கும்.

இலங்கை பிரிட்டிஷாரின் ஆட்சி யின் கீழ் இருந்த காலத்திலேயே அதாவது 1940 ஆம் ஆண்டு பாட லாசிரியர் ஆனந்த சமரக்கோன் அவர்களால் இயற்றப்பட்ட கீதமே பின்னர் சுதந்திர இலங்கையால் 1951 ஆம் ஆண்டு தேசிய கீதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. சமரக் கோன் இந்தியாவில் வங்கக்கவி ரவீந் திரநாத்தாகூரின் சாந்தி நிகேதனில் கல்வி பயின்றவர்.

சிங்கள மொழியிலான அவரின் 'ஸ்ரீலங்கா மாதா, அபே ஸ்ரீலங்கா' என்று தொடங்கும் பாடலை தமிழில் மொழி பெயர்த்தவர் ரி.பி. ஜயாவின் காலத்தில் கொழும்பு சாஹிரா கல்லூ ரியில் ஆசிரியராகப் பணியாற்றிய யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை யைச் சேர்ந்த தமிழறிஞர் எம்.நல் லதம்பி அவர்களே. தமிழில் 'ஸ்ரீ லங்கா தாயே, நம் ஸ்ரீலங்கா' என்று கீதம் தொடர்கிறது. அது தேசிய கீதத் தின் தமிழ் வடிவமாக ஏற்றுக்கொள் ளப்பட்டது. தேசிய கீதத்தின் சிங்கள வடிவத்து க்கே அரசியலமைப்பு ரீதி யான அனுமதி வழங்கப்பட்ட போதிலும், இந்தத் தமிழ் வடிவமும் பல தசாப்தங்களாக இசைக்கப்பட்டு வந்தது. வடக்கு, கிழக்கில் தனிநாடு ஒன்றை அமைப்பதற்காக விடுத லைப்புலிகள் நடாத்திய 30 வருட கால போரின் போது கூட இதே நிலையே தொடர்ந்தது.

ஆனால், 2009 மேயில் விடுத லைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதை யடுத்து ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி போன்ற சிங்கள தீவிரவாதக் கட்சிகள் தமிழ் மக்களுக்கு நேசக்கரத்தை நீட்டுவதற் குப் பதிலாக தேசிய கீதத்தை தமிழில் இசைப்பதை தடை செய்ய வேண்டு மென்ற இனவெறித்தனமான கோரிக்

ஒரு சமூகத்தின் நியாயபூர்வமான உரிமைகளை அரசியலமைப்பு ஒன்று மறுதலிக்கின்றது என்றால், சமூகங்களைப் பிளவுபடுத்தி நாட்டை நிர்மூலம் செய்கின்ற அந்த அரசியலமைப்பை கட்டிப்பிடித்துக் கொண்டிராமல் மாற்றியமைக்க வேண்டிய நேரமில்லையா இது. அரசியலமைப்பு என்பது எல்லோராலும் மதிக்கப்பட வேண்டியதாகவும் பின்பற்றப்பட வேண்டியதாகவும் இருக்கின்ற போதிலும் அது மனிதர்களால் உருவாக்கப்பட்டதேயன்றி ஒரு தெய்வீக ஆவணமல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையை முன்வைத்தன. நாடுகள் தேசிய கீதத்தை இசைப்பதற்கு ஒரே யொரு மொழியைப் பயன்படுத்துவ தையே அனுமதிக்கின்றன என்று இந் தக்கட்சிகள் அவற்றின் கோரிக்கைக்கு நியாயமும் கற்பித்தன. நாட்டைச் சின்னாபின்னப்படுத்திய இனப் போரில் இருந்து இந்த சிங்களத் தீவிர வாதிகள் எந்தப் படிப்பினையையும் பெற்றுக்கொள்ளவில்லை என்ப தையே இது வெளிக்காட்டியது. ஆனால் தமிழர்களோ கனடா, தென் னாபிரிக்கா உட்பட பெருவாரியான நாடுகளில் தேசிய கீதம் பல்வேறு மொழிகளில் இசைக்கப்படுகின்றது என்று வாதிட்டார்கள். ஆனால் அவர் களின் வாதமெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகின.

இத்தகையதொரு பின்புலத்தி லேயே, 2010 டிசம்பர் 12 ஆம் திகதி அன்றைய உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டி.ஜோன் சென விரத்ன தேசியகீதத்தை தமிழில் இசைப்பதை உத்தியோகபூர்வமாக தடை செய்வதற்கான அமைச்சர வைப் பத்தி ரம் ஒன்றைச் சமர்ப்பித் தார். அமைச்சரவைக் கூட்டத்துக்கு தலைமை தாங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செனவிரத்னவின் யோச னையை உத்தியோகபூர்வமாக ஆத ரிக்கவில்லையென்றபோதிலும், அவ ரது அரசாங் கம் தேசிய கீதத்தின் தமிழ் வடிவத்தின் பயன்பட்டை விரும்பவில்லை. அவ்வாறு செய்வ தன் மூலமாக நாடு போரின் விளை வான மனக்காயங்களைக் குணப் படுத்தி சமூகங்களை ஐக்கியப்படுத் துவதற்கு இருந்த பொன்னான வாய்ப்பை இழந்தது.

ராஜபக்ஷவின் பேரினவாதக் கொள்கையைப் பிரதிபலித்து பாது காப்புப் படைகளும் தமிழ்ப்பகுதிக ளில் கூட சிங்களத்திலேயே தேசிய கீதம் இசைக்கப்படவேண்டுமென்று வலியுறுத்தின. இதன் விளைவாக 2010 ஆம் ஆண்டிலிருந்து தேசிய கீதத்தின் தமிழ் வடிவத்தின் பயன் பாடு மீது உத்தியோகபூர்வமற்ற தடையொன்று நடைமுறைக்கு வந் தது. தேசிய கீதம் தமிழில் இசைக்கப் படுவதற்கு இலங்கை யின் அரசியல மைப்பில் விசேட ஏற்பாடு ஒன்று இருக்கின்ற போதிலும் இவ்வாறு தடை கொண்டுவரப்பட்டது.

ஆனால், இன்று கூட அதுவும் மாற்றம் கண்டிருக்கும் அரசியல் பருவ நிலைக்கு மத்தியிலும் சில சி ங்களப் பேரினவாதிகள் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படுவதைத் தொடர்ந்தும் எதிர்த்துக் கொண்டேயி ருக்கிறார்கள். தமிழில் இசைப்பதை



ஆனந்த சமரக்கோன்

அனுமதிக்கும் சுற்று நிருபமொன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவி னால் வெளியிடமுடியாது. ஏனென் றால் அது அரசியலமைப்புக்கு எதிரா னதாகும் என்று கூட அவர்கள் வாதிடுகிறார்கள்.

காலஞ்சென்ற பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தலை மையிலான பொதுஜன ஐக்கிய முன் னணி அரசாங்கத்தினால் 1972 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசிய லமைப்பும் இனவெறிக் கிறுக்குக் கொண்ட ஜே.ஆர்.ஜெயவர்தன 1978 ஆம் ஆண்டு கொண்டு வந்த அரசியலமைப்புமே தமிழர்களுக்கு அவர்களின் நியாயபூர்வமான உரி மைகளை மறுதலித்து நாட்டை கொலைக்களமாக்கியது என்பதை இந்தப் பேரினவாதிகள் இன்னமும் கூட விளங்கிக்கொள்ளத் தவறுகிறார் கள்.

இன்று 37 வருடங்களுக்கு பின்ன ரும் ஜெயவர்த்தனவின் சகல வல்ல மையும் பொருந்திய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை யின் அடிப்படையிலான அரசியல மைப்பின் விலங்கிலிருந்து இலங்கை விடுபட முடியாமல் திணறிக் கொண் டிருக்கிறது. இந்த அரசியலமைப்பே சகல சட்டங்களுக்கும் மேலானதாக வும் யாருக்கும் பொறுப்புக்கூறே வண்டிய கடப்பாட்டைக் கொண்டிரா ததுமான (ஜனநாயக ரீதியில் மக் களால் தெரிவு செய்யப்பட்ட) எதேச் சாதிகார சர்வாதிகாரத்துக்கு வழிவகுத்தது. உண்மையில் நாட்டில் இன்று ஏற்பட்டிருக்கின்ற குழப்பகர மான நிலைவரத்துக்கு ஜெயவர்த்தன வின் அரசியலமைப்பே மிகவும் பெருமளவுக்கு பொறுப்பாக இருந்து வருகிறது.

ஒரு சமூகத்தின் நியாயபூர்வமான உரிமைகளை அரசியலமைப் பொன்று மறுதலிக்கிறதென்றால், சமூ கங்களைப் பிளவுபடுத்தி நாட்டை நிர்மூலஞ் செய்கின்ற அந்த அரசியல மைப்பைக் கட்டிப்பிடித்துக் கொண்டி ராமல் அதை மாற்றியமைக்க வேண் டிய நேரமில்லையா இது. எல்லாவற்றுக்கும் மேலாக, எல்லோ ராலும் மதிக்கப்பட வேண்டியதா கவும் பின்பற்றப்படவேண்டியதா கவும் இருக்கின்ற போதிலும் அரசியலமைப்பு என்பது மனிதர்களி னால் உருவாக்கப்படுவதேயன்றி தெய்வீக ஆவணமல்ல.


ஒட்டுமொத்தத்தில் நாடு யதார்த்த நிலைமைகளைப் புரிந்து கொண்டு, சகலருக்கும் சிறப்பான எதிர்கால மொன்றை உத்தரவாதப்படுத்தக் கூடிய 'வாழு, வாழவிடு' என்ற கொள்கையைப் பின்பற்றத் தயாரா கிக் கொண்டிருக்கின்றபோதிலும் கூட, இந்தப் பேரினவாதிகள் வரலாற் றிலிருந்து எந்தப்பாடத்தையும் கற் றுக்கொள்ளவில்லையென்றே தோன் றுகிறது. ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்துதல்

## ஆபத்தான விளையாட்டும் பகிடியும்

உள்நாட்டு அரசியல்





குசல் பெரேரா

'சண்டே டைம்ஸ்' பத்திரிகையில் மார்ச் 29 ஆம் திகதி தேர்தல் முறையில் சீர்திருத்தம். பாராளுமன்றத்திற்கு 250 ஆசனங்கள் என்ற தலைப்புச் செய்தி வெளியாயிற்று.

இலங்கையின் தென்பகுதி அரசியல்வாதிகளிற்கு ஒரு பிறழ்வு மனநிலை உள்ளது. மிகப்பெரிய திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்துவதையே இந்தப் பிறழ்வு நடத்தை எனலாம். இதுவோர் பேராசை மனப்போக்கு. மகிந்த ராஜபக்ஷ பெரு எடுப்பில், பேராசையோடு ஆங்கிலத்தில் 'வெள்ளை யானைகள் (வைற் எலிபன்ட்) என்று கூறும் பணவிரயத்திட்டங்களைச் செயற்படுத்தினார்.

- ரணிமித்தென்ன என்ற இடத்தில் 235 ஏக்கர் நிலத்தில் ரூ 200 மில்லியன் செலவில் டெலி சினிமா பார்க் என்றொரு டெலி சினிமாப் பூங்காவை அமைத்தார்.
- ஹம்பாந்தோட்டையில் ஒருவிளையாட்டு ஸ்டேடியம்-இங்கு சகல வித விளையாட்டுக்களையும் விளையாடும் வசதிகள் இருக்கும். ஹோல்வ் விளையாட்டுத்திடல் 18 Hole golf link உடைய பிரமாண்டமான திடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை 2018 ஆம் ஆண்டின் பொதுநலவாய விளையாட்டுக்களை இலங்கையில் நடத்தும் எண்ணத்தோடு கட்டப்படுவது. இன்றும் முடிவடையாத இந்தத்திட்டத்தின் மதிப்பீடு சரியாக மதிப்பிடப்பட முடியாதது.

- சூரியவெவவில் ரூ 700 மில்லியன் செலவில் ஒரு கிரிக்கெட் ஸ்ரேடியத்தை அமைத்தார். 2011 இல் கட்டி முடிக்கப்பட்ட இந்த ஸ்ரேடியத்தில் 05 சர்வதேச கிரிக்கெட் விளையாட்டுகள் தாம் இன்றுவரை நடத்தப்பட்டன.



- மகிந்தவின் அரசியல் எதிரிகளான தலைவர்கள் கூட்டமாகப் போய்ப் பார்த்துப் பிரபலப்படுத்திய ஆடம்பரத் திட்டங்கள்
  - ★ மத்தல சர்வதேச விமான நிலையம்
  - ★ மஹம்புரத் துறைமுகம்
  - ★ கொழும்புத் துறைமுகத்திட்டம்
  - ★ லோட்டஸ் ரவர்

இப்படிப் பல விரயமான வெள்ளை யானைகள் உளப்பிறழ்வின் அடையாளங்களாக உள்ளன.

இந்தத் துஷ்பிரயோகத்தையும் விரயத்தையும் தனிநபர் ஒருவரின் பேராசை என்று குறுக்கக் கூறிவிடலாமா? இல்லை!

இது இலங்கையின் மத்தியப்படுத்தப்பட்ட அரசியல் அதிகாரம் என்ற சிங்கள அரசியலின் உளவியல் வெளிப்பாடுகள் ஆகும். தென்னிலங்கை அரசியலில் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்திலும் இன்றும் மேலோங்கி நிற்கும் கருத்தியலின் முக்கியமான அம்சம் சிங்கள அரசியல் தலைவர்களின் கையில் அரசியல் அதிகாரத்தைக் குவிக்க வேண்டும் என்பதுதான். இந்தச் சிந்தனை நிறைவேற்று ஜனாதிபதிமுறை ஏற்படுத்தப்பட்ட பின்னர் அல்ல அதற்கு முன்பே தொடங்கிவிட்டது. தென்னாசியாவின் மிகப் பெரிய கட்டிப்பால் உற்பத்தி நிலையமான 'பெரக்கும்' தொழிற்சாலையை பொலநறுவவில் அமைத்தார்கள். தம்புள்ளையில் சர்வதேச கிரிக்கட் ஸ்டேடியம் அமைத்தார்கள். இன்று அது ஏறக்குறைய மூடப்பட்டுக் கிடக்கிறது.

இவையெல்லாம் 'நான்' என்ற அகங்காரத்தின் வெளிப்பாடு மட்டுமல்ல, கொழும்பு என்ற மையத்தை நோக்கி அரசியல் அதிகாரம் குவிவதன் விளைவு தான். மாகாணங்களுக்கு அதிகாரம் பரவலாக்கப்பட்டிருந்தால் இவை நடந்திருக்க முடியாது. அவ்வாறு செய்திருந்தால் கொழும்பில் அதிகாரத்தில் இருந்தோர் தேசியக்கொள்கை, பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல்கள் ஆகியவற்றில் தங்கள் அதிகாரங்களை மட்டுப்படுத்திக் கொண்டிருப்பார்கள். எப்போதுமே 'மெகா' திட்டங்களையே செய்து பழக்கப்பட்டுப் போனவர்கள் இப்போது தேர்தல் முறைச் சீர்திருத்தம் என்ற மாபெரும் திட்டத்தை முன்வைத்திருக்கிறார்கள். 225 ஆக உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகையை 250 ஆகக் கூட்டப் போகிறார்கள்.

தேர்தல் சீர்திருத்தம் அவசியமானதே. இன்று நடைமுறையில் இருக்கும் விகிதாசாரத் தேர்தல் முறையில் தனிநபர்களுக்கு விருப்பு வாக்குகளை அளிக்கும் முறையும் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால் பிரதிநிதித்துவ ஜனநாயகக் கட்டமைப்பு எல்லா நிலைகளிலும் திரிபுபடுத்தப்பட்டு சிதைக்கப்பட்டுள்ளது. முன்னாள் பிரதம நீதியரசர் கட்சிவிட்டுக் கட்சி மாறுவதையும் அனுமதித்தார். அதனோடு பிரதிநிதித்துவ முறை முற்றாகவே திரிபுபடுத்தப்பட்டது. இவை யாவற்றையும் சீர்திருத்த வேண்டும்.

ஆகவே இன்று நாம் கேட்க வேண்டிய மிக முக்கியமான கேள்வி தேர்தல் முறையின் சீர்திருத்தத்தின் மூலம் நாம் எதிர்பார்ப்பது என்ன? என்பதே. 05% வாக்குகளை பெறக்கூடிய சிறு கட்சிகளை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற வழிவகுப்பதுதான் எமது நோக்கமா? பிரதான கட்சிகள் நிலையானதும் உறுதியானதுமான அரசாங்கத்தை அமைக்க வழிவகுப்பதா நோக்கம்? அல்லாவிட்டால் பாராளுமன்றத்தின் இணக்கமும் ஒருமைப்பாடும் ஏற்படுத்துவதா நோக்கம்? ஏன் நாம் தேர்தல் முறையைத் திருத்த வேண்டும்? இதற்குச் சுருக்கமான பதில் யாதெனில், தேர்தல் முறைச்சீர்திருத்தம் மூலம் தற்போது மக்கள் பிரதிநிதித்துவ முறையிலும் ஜனநாயக ஆளுகையிலும் ஏற்பட்டிருக்கும் திரிபடைதல்களையும் கோணல்களையும் திருத்திச் செப்பனிட்டே ஆக வேண்டும் என்பதே.

இப்பதிலின் பெறுபேறாக எமக்கு இன்னொரு கேள்வி பிறக்கிறது. தேர்தல்முறையை ஒரே ஒரு பாராளுமன்றம் என்ற நிறுவனத்திற்கு மட்டுப்படுத்துவதால் இலங்கையில் மக்கள் பிரதிநிதித்துவத்தையும், ஜனநாயக ஆளுகையையும் பலப்படுத்த முடியுமா? இக்கேள்விக்கு நான் 'இல்லை' 'இல்லை' என்றே பதில் கூறுகிறேன். ஆனால் இன்று தேர்தல் முறைச்சீர்திருத்தம் பற்றிய விவாதம் முழுமையாக பாராளுமன்றம் என்ற நிறுவனம் பற்றியதாகவே உள்ளது. சில வாரங்களுக்கு முன்னர் அரசு சார்பற்ற நிறுவனங்களின் நிபுணர்கள் நடத்திய கலந்துரையாடல் ஒன்றில் வெறும் பார்வையாளனாகக் கலந்து கொண்டேன். அங்கு வந்திருந்த நிபுணர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை, தனியங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தவர் தொகுதிமுறை என்ற இரண்டி னையும் பற்றிய முன்னைய கால தேர்தல் முடிவுகள், வாக்களிப்பு விப ரங்கள் பற்றிப் புள்ளி விபரங்களைப் பற்றிய பகுப்பாய்வுகளை ஒப்பிட்டுக் காட்டி பல கணக்கீடுகள், வாய்ப்பாடு களைத் தந்து விவாதித்தார்கள். அந் தக் கலந்துரையாடல் முழுமையாக இணக்கம், ஒற்றுமை என்பனவற் றோடு இயங்கக்கூடிய பாராளுமன் றத்தை அமைப்பது எப்படி என்பதைப் பற்றியதாகவே இருந்தது. இன்றைய பாராளுமன்றத்தில் இணக்கம் எப்படி எய்தப்படலாம் என்பதைப் பற்றியே பேசினர். அவர்களின் பேச்சு முழுமை யும் புள்ளிவிபரங்களையும் எத்தனை பேர் என்ற கணக்கிலும் தான் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது. தியவன்ன வனச்சரணாலயத்திற்கு (இன்றைய ஜயவர்த்தனபுர பராளுமன்றக் கட்டி டத்தொகுதிக்கு) எத்தனை பாராளு மன்ற உறுப்பினர்களை அனுப்பலாம் என்பதில் தான் இந்த நாட்டின் அரசி யல் அதிகாரம் (Political power) தீர்மானிக்கப்படப்போகிறது என்ற எண்ணமுடையவர்களாக இருப்பதை அங்கு உரையாற்றியவர்களின் பேச் சுக்கள் எடுத்துக்காட்டின. சீர்திருத்தம் மூலம் நாம் உண்மையான நல்லாட்சிக் கட்டமைப்புக்களை எப்படி உருவாக் கப்போகிறோம் என்பதில் உள்ள சிக்க லும் பிரச்சினையும் இங்கேதான் உள்ளது.

சுதந்திரம் அடைந்த காலம் முதல் எமது நாட்டின் இனப்பிரச்சினை என் னும் தேசியப் பிரச்சினை தீர்க்கப்படா மல் தொடருகிறது. இது ஒரு சோக வர லாறு. ஏமாற்றத்தையும் விரக்தியையும் தரும் வரலாறு. இப்பிரச்சினை இரத் தக் களரியை ஏற்படுத்தியது. இதனால் வேண்டத்தகாத யுத்தம் நடந்து இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியது. இன்று மக்கள் செயல்சாத்தியமான, நடைமு றைப்படுத்தக்கூடிய தீர்வு ஒன்றை வேண்டி நிற்கிறார்கள். கொழும்பு அர சாங்கத்துடன் அதிகாரப்பகிர்வு மூலமே இதற்கான தீர்வைக் காண லாம் என்று எதிர்பார்த்துள்ளார்கள். ஆகவே அதிகாரப்பகிர்வு என்பதைக் கருத்தில் எடுத்துக் கொள்ளாத தேர்தல் முறைச் சீர்திருத்தம் எதுவும் எமக்குத் தீர்வைத் தரப்போவதில்லை. மாகா ணங்களுக்கு அரசியல் யாப்பு ரீதியாக அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து, நல் லாட்சிக்கான சிறிய பிரதிநிதித்துவ அலகுகளை உருவாக்க வேண்டும். எமது ஆட்சி அமைப்பில் மூன்று படி நிலைகள் (உள்ளூராட்சி, மாகாண சபைகள், பாராளுமன்றம்) உள்ளன. ஆகையால் மேலே உச்சத்தில் உள்ள பாராளுமன்றப் பிரதிநிதித்துவ முறை யில் ஒட்டுவேலை செய்வதால் எந்தப் பயனும் விளையப் போவதில்லை.

பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் இன்று அதிகாரப் பரவலாக்கல் மூலம் கீழ் மட்டங்களுக்குப் பரவலாக்கப்பட் டுள்ளன. ஆகவே தேர்தல் முறைச் சீர்திருத்தத்தை அதிகாரப் பரவலாக் கத்தோடு இணைத்து நாம் சிந்திக்க வேண்டும். இலங்கையின் தென்பகு திச் சிங்கள மக்களின் நன்மைகளைப் பற்றியே சிந்திப்பவர்களாய் இந்த உண்மையை நாம் கவனிக்கத் தவறுகி றோம். 1989 ஆம் ஆண்டுக்கு முன் னர் எமது பாராளுமன்றம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட போது இருந்த நிலையைச் சிந்தித்துப் பாருங்கள். அப்போது இலங்கையின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் உள்ள குக்கிராமங் களினையும் உள்ளடக்கிய முழுநாட் டினதும் சமூக, பொருளாதார, பண் பாட்டு அரசியல் வாழ்வில் ஒவ் வொரு அம்சத்தையும் பாராளுமன் றமே திட்டமிடவேண்டியிருந்தது. ஆகவே ஒவ்வொரு பாடசாலையும் ஒவ்வொரு வைத்தியசாலையும் கொழும்பில் உள்ள பாராளுமன்றத் தின் கவனிப்புக்கு உரிய விடயமாக இருந்தது. மாகாண மட்ட பொருளா தாரத் திட்டமிடலும், கிராம அபிவி ருத்தியும் அன்று கொழும்பு நகரத்தில் உள்ள பாராளுமன்றத்திற்குரிய விடய மாக இருந்தது. மாகாணங்களின் வீட மைப்பு, வீதிகள், பாலங்கள் என்பன வற்றை திட்டமிடல், நிதியிடல் அவற்றின் கட்டுமான வேலைகளை நிறைவேற்றல் ஆகியன கொழும்பில் இருந்து கண்காணிக்கப்பட்டன. இது போன்று தான் சமூகசேவை, புனர் வாழ்வு, கால்நடை வளர்ப்பு, நீர்ப்பா சனம், விவசாயம், கமநலச் சேவைகள் மாகாணங்களுக்குட்பட்ட போக்குவ ரத்து, கூட்டுறவு என்பனவும் இன்னும் பல விடயங்களும் கொழும்பில் உள்ள பாராளுமன்றத்திற்கு உரிய விடயங்களாக இருந்தன. 13ஆவது அரசியல் யாப்புத்திருத்தம் மூலம் இவையாவும் இன்று மாகாணங்களுக் குரிய விடயங்களாகிவிட்டன. இவ் வாறு அதிகாரம் மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட நிலையில் 20 மில்லியன் மக்களுக்குப் பாராளுமன் றத்தில் 225 பிரதிநிதிகள் இருக்கிறார் கள். இதனை ஏனைய ஜனநாயகக் கட்டமைப்பைக் கொண்ட சிறிய நாடு களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

**தேர்தல் சீர்திருத்தம் மக்களை பொறுத்தவரை அவசியமானதே. அது மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். இப்போது தேர்தல் முறை சீர்திருத்தம் பற்றி திட் டமிடப்படுகின்றவை மக்களின் தேவைகளுக்கு அப்பாற்பட்டவை. இவை அரசியல் தலைவர் களுக்கும் பாராளுமன்றம் செல்லக்கூடியவர்க ளுக்கு தேவைப்படும் திருத்தங்களாகும்.**

இலங்கையின் பிரதிநிதித்துவ முறையில் ஏற்பட்ட கோணல்கள் 13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது தொடங்கிவிட்டன. அரைவாசிக்கும் மேற்பட்ட விடயங் கள் அதிகாரப் பரவலாக்கல் மூலம் மாகாணங்களுக்கு கொடுக்கப்பட்டுள் ளனவே. இந்தப் பாராளுமன்றத்தில் 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இனி என்ன தேவை? என்ற கேள் வியை நாம் கேட்க வேண்டும். அக் கேள்விக்குரிய விடையைக் கண்டிரு க்க வேண்டும். ஆனால் நாம் இக்கேள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியை ஒரு போதும் கேட்டது கிடையாது. ஆனால் நாம் முன்பு எப்படி இருந்ததோ அந்த நிலைமையையே தொடர்ந்தோம். இப்போது பொறுப்புக்கள் குறைந்து விட்ட நிலையில் இவ்வளவு பெரிய பாராளுமன்றம் எமக்குத் தேவையில்லை. 1970 ஆண்டில் பாராளுமன்றம் என்ன அளவில இருந்ததோ அந்த அளவிற்கு அதன் உறுப்பினர் எண்ணிக்கையை 151 பேராகக் குறைத்திருக்க வேண்டும். மந்திரிகளின் எண்ணிக்கை, பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை என்பனவும் குறைந்திருக்கும். வரியிறுப்போரின் கோடிக்கணக்கான பணம் மிச்சமாகியிருக்கும்.

1978 இன் பின்னர் புதியதொரு அரசியல் கலாசாரம் உருவாகியது. போட்டிச் சந்தைப் பொருளாதாரத்தின் பயனாக எழுந்த ஊழலும் அதிகாரப் போட்டியும், அதிகார ஆசையும் அரசியல் கலாசாரத்தின் முக்கிய அம்சங்கள் ஆயின. பாராளுமன்றத்தின் இன்றைய பொறுப்புக்கள் எவை? அதற்கேற்றபடி உறுப்பினர் தொகையைக் குறைக்க வேண்டாமா என்பதைப் பற்றி நாம் சிந்திக்கத் தவறினோம். அதிகாரப் பரவலாக்கலையும், மாகாணசபைகளையும் ஆதரித்தவர்களை ஜனதாவிமுக்தி பெரமுன சுட்டுத்தள்ளியது. இதனால் சமூகம் மௌனித்தது. 13ஆவது திருத்தம் பற்றிச் சமூகம் விவாதிக்க முடியாத நிலையில் அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட அரசியல்வாதிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் 13ஆவது திருத்தம் மூலம் உருவாக்கப்பட்ட புதிய நிறுவன அமைப்புக்களில் பாதிப்பை உண்டாக்கும் முறையில் செயற்பட்டனர். இதனால்தான் இன்று இருக்கும் தேர்தல் முறை பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் வால்பேத்தை போன்ற வடிவத்தில் உள்ளது. அளவில் பெருத்த பாராளுமன்றம் வரியிறுப்பாளர்களின் வரியின் மூலம் பெறப்படும் பொதுப்பணத்தை விரயமாக்குகிறது. பெருந்தொகை எண்ணிக்கையினரைக் கொண்ட பாராளுமன்றத்தைப் பராமரிக்க பில்லியன் கணக்கான பணம் செலவிடப்படுகின்றது.

இந்தியாவில் மாநிலங்களின் ஆட்சி அந்தந்த மாநில அரசுகளிடமே கையளிக்கப்பட்டுள்ளது. இலங்கையை இந்தியாவுடன் ஒப்பிடுவது பயன்தரக் கூடியது. இந்தியாவின் ஹரியானா மாநிலத்தை எடுத்துப் பார்ப்போம். அது 23 மில்லியன் மக்களைக் கொண்ட மாநிலம். அங்கு பத்து மாவட்டங்கள் உள்ளன. இப்பத்து மாவட்டங்களுக்கும் 90 உறுப்பினர்களே மாநில சட்டசபைக்குத் தெரிவு செய்யப்படுகிறார்கள். 90 சட்டசபை உறுப்பினர்களும் தமது மாநிலத்தின் சமூக பொருளாதாரவிருத்தி உட்பட ஏனைய பொறுப்புக்களைக் கவனிக்கப்போதுமானவர்கள் என்று ஹரியானா மக்கள் கருதுகிறார்கள். 23 மில்லியன் மக்களைக் கொண்ட ஹரியானா மாநிலம் மத்தியில் உள்ள டில்லிப் பாராளுமன்றத்திற்கு 10 பாராளுமன்ற உறுபினர்களை மட்டுமே தெரிவு செய்கிறது. ஆம் 23 மில்லியன் மக்களைக் கொண்ட ஹரியானா 10 பாராளுமன்ற உறுப்பினர்களையே லோக்சபாவுக்குத் தெரிவு செய்கிறது. மாநிலமட்ட அலுவல்களைச் சட்டசபை பொறுப்பேற்றுக் கொண்டுள்ள நிலையில், அவர்கள் தேசியக் கொள்கை வகுத்தல், தேசியப் பாதுகாப்பு போன்றவற்றையும் ஏனைய தேசியப் பிரச்சினைகளையும் கவனிப்பதற்காக 10 பாராளுமன்ற உறுப்பினர்களையே தெரிந்து எடுத்துப் பாராளுமன்றத்திற்கு அனுப்புகின்றனர்.

ஹரியானாவுடன் எமது நாட்டின் மாகாணசபைகளையும், பாராளுமன்றத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள். 2.3 மில்லியன் மக்கள் மட்டுமே உள்ள கொழும்பு மாவட்டம், மேல் மாகாண சபைக்கு 40 உறுப்பினர்களையும் பாராளுமன்றத்திற்கு 19உறுப்பினர்களையும் தெரிவு செய்கிறது. இதனை விடப் பத்துமடங்கான 23 மில்லியன் மக்களையுடைய ஹரியானா சட்டசபைக்கு 90 உறுப்பினர்களையும் பாராளுமன்றத்திற்கு 10 உறுப்பினர்களையும் தெரிவு செய்கிறது. விரலுக்குத் தக்க வீக்கம் வேண்டும். நாம் அளவுக்கு மீறி எம்பிம்பத்தை உயர்த்திக்காட்ட முனைகிறோம். இது ஆசியாவின் மிகப்பெரிய அதிசயம் என்ற மனப்பான்மையின் விளைவு. 23 மில்லியன் மக்களைக் கொண்ட ஹரியானா 10 உறுப்பினர்களைப் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்கிறது. நாம் 225 உறுப்பினர் கொண்ட பாராளுமன்றத்தை வைத்திருக்கிறோம். கொழும்பு நகரின் நிபுணர்களும், கொள்கை வகுப்பாளர்களும், அரசியல்வாதிகளும் கூடி தேர்தல் முறைச் சீர்திருத்தத்தின் மூலம் இத்தொகையை அதிகரிப்பது பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தேர்தல்முறைச் சீர்திருத்தம் மக்களைப் பொறுத்தவரை அவசியமானதே. இச்சீர்திருத்தம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும். இப்போது தேர்தல் முறை சீர்திருத்தம் பற்றி திட்டமிடப்பட்டுள்ளவை மக்களின் தேவைகளுக்கு அப்பாற்பட்டவை. இச்சீர்திருத்தங்கள் அரசியல் தலைவர்களுக்கும் பாராளுமன்றம் செல்லக்கூடியவர்களுக்கும் தேவைப்படும் திருத்தங்களாகும். இலங்கையின் அரச நிறுவனங்கள், தொண்டர் அமைப்புக்கள் போன்றே அரசியல் கட்சிகளும் ஊழல் நிறைந்தவை. அவை ஜனநாயக நிறுவனங்களும் அன்று. பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை அவர்கள் கூட்டுவதற்கு முயற்சிக்கும் போது அதிகாரப் பரவலாக்கலை மாகாண மட்டத்தில் செய்துள்ளோம் என்பதைக் கவனத்தில் கொள்ள மறுக்கிறார்கள். அத்தோடு தமிழ் மக்களோடு உள்ள முரண்பாடும் மோதலும் செயல்சாத்தியமான ஆட்சி மாதிரியொன்றை அதிகாரப்பகிர்வு முறையில் ஏற்படுத்திக்கொண்டால் அல்லாமல் தீர்க்க முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ள இவர்கள் மறுக்கின்றனர். நாம் மேலும் மேலும் முரண்பாடுகளையும் குழப்பங்களையும் உருவாக்கப் போகிறோம். இதனால் தான் தேர்தல் முறைச்சீர்திருத்தம் பற்றிய இன்றைய யோசனைகள் மிக ஆபத்தானவை. இவை பாராளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்டால் நாம் அதற்காக மிகப்பெரிய விலையைக் கொடுத்தேயாக வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லீ குவான் யூவின் பொருளாதார விந்தை

**லீயை பொறுத்தவரை அரசியல் சுதந்திரம் என்பது அவசரப்பட்டு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டிய ஒரு விடயமல்ல. இதுவே அவரின் மரபில் கவலை தருகின்ற பகுதி. பிராந்தியத்தின் பிரமிக்கத்தக்க பொருளாதார திருப்பத்திற்கு அடியாதாரமாக அமைந்த 'ஆசியப்பண்புகள்' தனது அரசியல் நம்பிக்கைகளுடன் சம்பந்தப்பட்டவை என்பதே லீயின் வாதம்**

ஆசியாவின் நவீன எழுச்சியை வரலாற்றாசிரியர்கள் பதிவு செய்யும் போது சீனா, ஜப்பான், இந்தியா போன்ற எமது பிராந்தியத்தின் மிகப் பெரிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மீதே கவனத்தைச் செலுத்துவார்கள். ஆனால், 'ஆசிய முதலாளித்துவம்' என்று ஏதாவது இருக்குமானால், அதன் சுடர்ப் பொறியாகவும் கருத்தூன்றிய சார்பாளராகவும் மிகவும் சர்ச்சைக்குரிய சின்னமாகவும் விளங்குபவர் பிராந்தியத்திக் மிகச்சிறிய நாடான சிங்கப்பூரின் ஸ்தாபகர் லீகுவான் யூவேயாவார். நீண்டகால சுகவீனத்துக்குப் பிறகு அவர் தனது 91ஆவது வயதில் மார்ச் 23 திங்கட்கிழமை மரணமடைந்தார்.

லீ தனது நகர அரசில் சாதித்துக்காட்டியது ஒரு பொருளாதார விந்தை என்பதை எவருமே மறுதலிக்க மாட்டார்கள். இந்த வெற்றி லீயின் செயல் நோக்கத்துடனும் பிரமாண்டமான ஆளுமையுடனும் சேர்ந்து ஆசியாவின் பெரிய நாடுகளின் செல்வழியில் செல்வாக்குச் செலுத்தின.

1960 ஆம் ஆண்டுக்கும் 2011 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட கால கட்டத்தில் சிங்கப்பூரின் ஆள்வீத நிகர உள்நாட்டு உற்பத்தி 100க்கும் கூடுதலான மடங்குகளால் அதிகரித்திருந்தது. இப்போது அது 55,000 டொலர்களாக உச்ச நிலையில் இருக்கிறது. அந்த நகரம் உலகில் மிகவும் முன்னேறிய பொருளாதாரங்களில் ஒன்றாக மிளிர்கிறது. இயல்பு கடந்த நிலையில் துப்புரவானதாகவும் பசுமை நிறைந்ததாகவும் திகழ்கிறது. ஊழல் மோசடிகளினாலும் நண்பர்களுக்கும் நெருங்கிய உறவினர்களுக்கும் சலுகை அளிக்கும் போக்கினாலும் செருக்குத்தனமான உயரதிகாரிகள் குழாத்தினாலும் இன்னமும் தொல்லைகளுக்குள்ளாகின்ற ஒரு பிராந்தியத்தில் பலம்பொருந்திய நிறுவன ஒழுங்கமைப்பு முறையையும் அகலத் திறந்த சந்தைகளையும் கொண்டதாக சிங்கப்பூர் விளங்குகிறது.

1965 ஆம் ஆண்டு மலேசிய சம்மேளனத்திலிருந்து வெளியேற்றப்பட்ட பிறகு சிங்கப்பூருக்கு தேவையானது என்ன என்பதை தனக்கிருந்த உள்நோக்கையும் நுண்ணறிவுத் திறத்தையும் கொண்டு லீ தீர்மானித்துக் கொண்டார். குரோத உணர்வுடன் அன்று இருந்த அயலகத்துக்கு அப்பால் நோக்க வேண்டிய அவசியத்தையும் மேற்கு நாடுகளினதும் ஜப்பானினதும் முன்னேறிய பொருளாதாரங்களுக்கு ஆடம்பரப் பொருட்களை ஏற்றுமதி செய்யக்கூடிய ஒரு நாடாக சிங்கப்பூரை மாற்றத்தக்க பொருளாதாரக் கொள்கையை முன்னெடுக்க வேண்டிய தேவையையும் அவர் புரிந்துகொண்டார். ஆசியப் புலிகள் (Asian Tigers) என்று அழைக்கப்பட்ட பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சி கண்ட ஏனைய நாடுகளுடன் சேர்ந்து பொருளாதார அடிப்படைக் கூறுகளை (Economic Fundamentals) சரியாக வகுத்துக்கொள்வதில் சிங்கப்பூர் கவனத்தைக் குவித்தது. சேமிப்பையும் முதலீட்டையும் ஊக்குவித்தல், பணவீக்கத்தையும் வரிகளையும் மிகவும் கீழ் மட்டத்தில் வைத்திருந்து நாணயங்களை உறுதியானதாக வைத்திருத்தல், தரத்தில் உயர்ந்த கல்வி மீதான கவனம் ஆகியவையே அந்த அடிப்படைக் கூறுகளாகும். இவை பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட மெய்யறிவாகிவிட்டன.

ஆசியா பூராகவும் கம்யூனிஸ்ட் இயக்கங்கள் மக்கள் மத்தியில் வலிமையான செல்வாக்கைச் செலுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த நேரத்தில் லீ இந்தப் பாதையைத் தெரிந்தெடுத்தார் என்பது முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய ஒரு விடயமாகும். (முன்பொருதடவை லீ தன்னுடன் அணிசேர்த்துக் கொண்டு செயற்பட்ட சிங்கப்பூரின் இடதுசாரிகளை மிகவும் கடுமையாக ஒடுக்கியமை அவர் செய்த முதற் காரியங்களில் ஒன்று). மா ஓ சேதுங்கின் சோசலிச பரீட்சார்த்தத்தின் விளைவான வேதனைத்துடிப்பை சீனா அனுபவித்துக்கொண்டிருந்த அதேவேளை, ஜவஹர்லால் நேருவின் தலைமையிலான இந்தியா தனியார் துறைவர்த்தக முயற்சிகளை ஊக்குவிக்காமல் கட்டுப்பாடுகளுடன் கூடிய பொருளாதாரத்தை வளர்ப்பதில் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்த காலகட்டம் அது. லீ தனது தெரிவை கோட்பாட்டுடன் சம்பந்தப்பட்டதாக அல்ல, வெறுமனே நடைமுறைச் சாத்தியத்தன்மையுடன் சம்பந்தப்பட்டதாக மாத்திரமே பார்த்தார். ஒரு சிந்தனையின் அல்லது கருத்தின் பிரயோகப்பயனுடைத் தன்மையே அதற்கான ஒரு பரீட்சை என்று அவர் அடிக்கடி கூறுவார்.

காலஞ்சென்ற சீனத் தலைவர் டெங் சீயாவோ பிங், லீயின் மகப்பெரிய அபிமானி. சீனாவில் தனது சந்தைப் பொருளாதாரச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்திய போது அவர் லீயின் அதே மனப்பான்மையையே கடைப்பிடித்தார். வேறு எதுக்காகவும் இல்லாவிட்டாலும் (கோடிக்கணக்கான மக்களை வறுமையின் பிடியிலிருந்து விடுவித்ததுடன், மனிதகுல வரலாற்றில் பொருளாதார சுதந்திரத்தின் மிகப்பிரமாண்டமான விரிவாக்கங்களில் ஒன்றை உருவகப்படுத்தி நின்ற) டெங்சியாவோ பிங்கின் புரட்சிக்கு உத்வேகமளிக்க உதவியமைக்காக லீ கொண்டாடப்படவேண்டும்.

லீயைப் பொறுத்தவரை அரசியல் சுதந்திரம் என்பது அவசரப்பட்டு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டிய ஒரு விடயமல்ல என்பதே அவரது நிலைப்பாடு. அதைத் தாமதிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே அவரின் மரபில் கவலை தருகின்ற பகுதியாகும். பிராந்தியத்தின் பிரமிக்கத்தக்க பொருளாதாரத் திருப்பத்துக்கு அடியாதாரமாக அமைந்த 'ஆசியப் பண்புகள்' தனது அரசியல் நம்பிக்கைகளுடன் சம்பந்தப்பட்டவை என்பதே லீயின் வாதமாகும். திட்டமிட்ட முறையிலான சமுதாயமொன்றில் (Well-ordered Society) உயர்ந்தோர் குழாமே (elites) ஆட்சிசெய்ய வேண்டும், மக்கள் பணிவடக்கமானவர்களாக இருக்க வேண்டும் என்பதே அவரின் நம்பிக்கையாக இருந்தது.

மேற்கத்தைய பாணியிலான ஜனநாயகம்(western style democracy) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு பொருத்தமானதல்ல என்ற கருத்தைப் பரப்புவதில் வேறு எந்தத் தலைவரையும் விட லீ கூடுதலானளவுக்கு பங்காற்றியிருக்கிறார். ஏனைய நாடுகள் சிங்கப்பூரின் பொருளாதார வெற்றியை பின்பற்ற வேண்டுமானால், அதை விவேகமானதும் அவ்வப்போது அடக்குமுறையைக் கடைப்பிடிக்கின்றதுமான அரசொன்றின் பொறுப்பின் கீழேயே சாதிக்கக்கூடியதாக இருக்கும் என்பதே லீ யின் நிலைப்பாடு. இந்த வாதம் சீனாவில் இருந்து மியன்மார் வரை தாராளபோக்கைக் கடைப்பிடிக்காத ஆட்சிகளுக்கு உற்சாகத்தைக் கொடுத்ததுடன், இந்தியா போன்ற குழப்பகரமான ஜனநாயக நாடுகளுக்கு அவற்றின் சொந்த சுதந்திரங்கள் குறித்து கேள்வியெழுப்புவதற்கு காரணத்தையும் வழங்கியது.



லீ செயல்நோக்கமுடையவர் என்பதிற் சந்தேகமில்லை. ஆனால், முடிவில் அவரது கோட்பாடுகள் நம்பிக்கை வைக்கக்கூடியவையாக இருக்கவில்லை. மேற்கத்தைய காலனித்துவத்துடனான போராட்டத்தினால் கிழக்காசியப் பிராந்தியம் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருந்த போதிலும் அதன் எழுச்சிக்கு காரண

# லீயும் இலங்கையும்


லீ குவான் யூவை நினைவு கூரும் போது இலங்கையைப் பற்றி எத்தகைய அபிப்பிராயத்தை அவர் கொண்டிருந்தார் என்பதை நினைவு மீட்டிப்பார்ப்பது அவசியமானதாகும்.

சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்னரேயே இலங்கையை 'தோல்வி கண்ட அரசு' என்று அவர் விமர்சித்திருந்தார். இனவாத அரசியல் இலங்கையைப் பாழ்படுத்தியிருப்பதை 5 தசாப்தங்களுக்கு முன்னரேயே தெளிவாக உணர்ந்து கொண்ட லீ குவான் யூவின் தலைமையிலான சிங்கப்பூர் தான் தென்கிழக்காசிய நாடுகள் 1967 ஆம் ஆண்டில் 'ஆசியான்' அமைப்பைத் தோற்றுவித்தபோது அதில் இலங்கை இணைவதை எதிர்த்தது என்பது முக்கிய மாகக் கவனிக்கப்படவேண்டிய ஒரு விடயமாகும். இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லை என்பதே அந்த எதிர்ப்புக்கு சிங்கப்பூர் முன்வைத்த காரணமாகும்.

இலங்கை உட்பட தோல்விகண்ட அரசுகளின் தவறுகளில் இருந்து கற்றுக்கொண்ட பாடமே சிங்கப்பூரை இன, மொழி, மதப்பூசல்கள் இல்லாத நாடாக வழிநடத்துவதற்கு தனக்கு உதவியது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

கல்விமானும் ஊடகவியலாளருமான பேராசிரியர் ரொம் பிளேற் ஆசிய விவகாரங்கள் தொடர்பில் சிறந்ததொரு அரசியல் விமர்சகர் என்று பரவலாக மதிக்கப்படுபவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாக கன்பியூசியன் நெறிமுறைகளே கருதப்படுகின்றன. கடும் உழைப்பு, சிக்கனமானவாழ்வு, பிள்ளைப்பாசம் போன்ற அந்த பண்புகள் மேற்குல கில் கைத்தொழில் மயமாக்கத்துக்கு முன்னதாக போற்றப்பட்டன.

பொருளாதார வெற்றியினால் தோற்றுவிக்கப்பட்ட கேள்விகளுக்கு பாரம்பரியப் பண்புகள் விடைக ளைத் தராமல் போகலாம் என்பதை முன் கூட்டியே லீ விளங்கி ஏற்றுக் கொண்டார். இதற்காக அவரைப் பாராட்ட வேண்டும். ‘அடுத்து எங்கே போகிறோம்? எங்கே போகிறோம் என்பது தெரியாத போது அவசரப் பட்டு எவ்வாறு அங்கே செல்வது?’ இவ்வாறு 20 வருடங்களுக்கும் அதி கமான காலத்துக்கு முன்னர் தன் னைப் பேட்டி கண்ட செய்தியாளர் ஒருவரிடம் லீ கேள்வியெழுப்பினார்.

லீ உருவாக்கிய சிங்கப்பூர் (கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைத் தொடர்ந்து கட்டுப்படுத்துகின்றது. அரசியல் எதிராளிகளுக்கு அனுகூல மற்றதுமான ஒரு அரசாக, மக்களின் தனிப்பட்ட தெரிவுகளில் அளவுக் கும் அதிகமான தலையீடு செய்கின்ற ஒரு அரசாக விளங்குகிறது) அந்தச் சவாலுடன் மல்லுக்கட்டத் தொடங்கி யிருக்கிறது என்று கூறுவது கஷ்டம். பாடசாலைகளிலும் சமூகத்திலும் படைப்பாக்கத்திறனை ஊக்குவிப்ப தற்கான முயற்சிகள் பகட்டு ஆரவா ரத்தன்மை கொண்டவையாகவும் பயனுறுதியற்றவையாகவும் இருந்து வருகின்றன. ஏற்றத்தாழ்வு நிலை அதிகரித்துவருகின்றது. ஆளும் மக் கள் செயல் கட்சி (Peoples Action party) மீது மக்களுக்கு அதிருப்தியும் அதிகரித்து வருகின்றது. இறுதியாக நடைபெற்ற பொதுத்தேர்தலில் அக் கட்சி மக்களின் வாக்குகளில் 60 சத வீதத்தையே பெறக்கூடியதாக இருந் தது. முன்னைய தேர்தல்களில் கட்சி க்கு கிடைத்த ஆதரவுடன் ஒப்பிடும் போது இந்த 60 வீத வாக்குகள் மிக வும் குறைந்ததொரு ஆதரவு நிலை யேயாகும்.

சிங்கப்பூரைப் போன்று தனியொரு கட்சியின் அல்லது இராணுவத்தின் ஆதிக்கத்தில் உள்ள ஏனைய ஆசிய நாடுகள் (சீனா, வியட்நாம், மலேசி யா, தாய்லாந்து) புத்தாக்கத்துடன் கூடியதும் அரசியல் ரீதியில் கூடுதலா னளவுக்கு விவேகமுடையதுமான வளர்ச்சி வகை மாதிரியான (Models Of growth) முன்னெடுப்பதற்கு துடிதுடித்துக் கொண்டிருக்கின்றன. லீ உண்மையில் விந்தையைச் செய்து காட்டினார். அத்துடன் பிராந்தியத் தின் பிரமாண்டமான பொருளாதார வாய்ப்பு வளத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்கும் கருவியாக இருந்தார். ஆனால், ஆசியாவின் அடுத்த கட் டப் பயணம் புதிய தூண்டுதலை ே வண்டி நிற்கிறது என்று கூறுவது லீயின் சாதனையைத் தாழ்த்துவதாக இருக்காது. ■

(Bloomberg view Editorial)

**‘விடுதலைப்புலிகளை தோற்கடித்துவிட்டதுடன் எல்லாமே சரியாகி விட்டது என்பதே மகிந்த ராஜபக்ஷவின் எண்ணம். அவரின் உரைகளை வாசித்திருக்கிறேன். அவர் ஒரு சிங்களத் தீவிரவாதி என்பதை அறிவேன். அவரது மனதை என்னால் மாற்ற முடியாது’ என்று கூறியவர் லீ குவான் யூ**



‘லொஸ் ஏஞ்சலீஸ் ரைம்ஸ்’ பத்திரி கையில் அவர் எழுதிவந்த பத் தியே ஆசிய - அமெரிக்க விவகா ரங்கள் தொடர்பில் அமெரிக்கப் பத்திரிகையொன்றில் மிகவும் நீண்ட காலமாக தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்பட்டு வந்த ஆய்வுக் கட்டுரையாகவும் கருதப்பட்டது. ஹவாய் தீவில் அமைந்திருக்கும் அமெரிக்காவின் பசுபிக் படைத் தலைமையகத்தில் ஒரு விரிவுரை யாளராகவும் பணியாற்றிய பேரா சிரியர் ரொம் பிளேற் இலங்கை விவகாரங்களைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகளை கடுமையா கச் சாடிவந்தவர் என்பதும் குறிப்பி டத்தக்கது.

ஆசியாவின் பெருந்தலைவர் கள் (Giants of Asia) என்ற தலைப்பில் அவர் வெளியிட்ட பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லீ குவான் யூ Vs செய்தி




நவீன சிங்கப்பூரின் ஸ்தாபகர் என்று போற்றப்படும் லீகுவான் யூ 1959 ஆம் ஆண்டு தொடக்கம் 1990 வரை பிரதமராக இருந்து சதுப்பு நிலம் நிறைந்த தீவு என்ற நிலையில் இருந்து உலகின் முதலாவது சுபிட்சமிகு நகர அரசு என்ற நிலைக்கு தனது நாட்டை மாற்றிய சாதனைச் செயற்பாடுகளுக்கு தலைமை வகித்தவர். சிங்கப்பூர் மக்கள் தங்களின் முழுமையான ஆற்றல்களையும் வாய்ப்பு வளத்தையும் பயன்படுத்த சந்தர்ப்பத்தைக் கொடுத்து பொருளாதார சுதந்திரம் செழிக்க அனுமதித்ததன் மூலமே அவரால் அந்தச் சாதனையை நிகழ்த்திக் காட்டக்கூடியதாக இருந்தது.

ஆனால், அவரின் நாடு சிந்தனைகளின் சந்தையாக இருக்கவில்லை. அரசியல் மற்றும் தனிநபர் சுதந்திரங்கள் என்று

தொகுதி நூல்களில் முதலாவது நூல் லீகுவான் யூவுடனான பேட்டிகளின் தொகுப்பேயாகும். ஐந்து வருடங்களுக்கு முன்னர் வெளிவந்த அந்த நூலில் உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பின்னரான இலங்கையின் நிலைவரம் பற்றியும் லீ குறிப்பிட்டிருந்தார். அதுவே இலங்கை நிலைவரம் தொடர்பில் லீயினால் இறுதியாக வெளியிடப்பட்டிருக்கக்கூடிய விமர்சனமாக இருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

இலங்கை ஒரு மகிழ்ச்சியான ஐக்கியப்பட்ட நாடாக இல்லை என்று கூறிய லீ, போரின் முடிவுக்குப் பின்னரான இலங்கையின் அரசியல் நிகழ்வுப் போக்குகள் குறித்து அவநம்பிக்கையுடனும் அதிருப்தியுடனுமே கருத்துத் தெரிவித்திருந்தார்.

'இலங்கையின் ஜனாதிபதி (மகிந்த ராஜபக்ஷ) பிரச்சினையைத் தீர்த்து வைத்து விட்டதாக நம்புகிறார். விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து விட்டதுடன் எல்லாமே சரியாகிவிட்டது என்பதே அவரது எண்ணம். இலங்கை ஜனாதிபதியின் உரைகளை நான் வாசித்திருக்கிறேன். அவர் ஒரு சிங்களத் தீவிரவாதி என்பதை நான் அறிவேன். அவரது மனதை என்னால் மாற்றமுடியாது' என்று லீ அதில் கூறியிருந்தார்.

போரின் முடிவுக்குப் பின்னரான காலகட்டத்தில் தமிழ் மக்களின் மனதை வென்றெடுக்கக்கூடியதாக தேசிய நல்லிணக்கத்தை நோக்கிய உருப்படியான அரசியல் செயன்முறைகள் இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுவதாக இல்லை என்று நம்பியதாலேயே அத்தகைய கருத்தை தெரிவிக்க லீ நிர்ப்பந்திக்கப்பட்டார் என்பதில் சந்தேகமில்லை. விடுதலைப் புலிகளைக் கொன்றொழித்த பிறகு தமிழர் பிரச்சினை என்று ஒன்று இருப்பதாக அரசாங்கம் கருதவில்லை என்பதே லீயின் நிலைப்பாடு என்பது வெளிப்படையானது.

இலங்கையில் இறுதிக்கட்டப் போர் தீவிரமடைந்து கொண்டிருந்த வேளையில் 'இன்ரர் நாஷனல் ஹெரால்ட் ரிபியூன்' சஞ்சிகைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்போது (பேச்சுச் சுதந்திரம், தகவல்களை பெறுவதற்கான சுதந்திரம் ஆகியவையும் அவற்றுள் அடங்கும்) சிங்கப்பூரியர்கள் அதிர்ஷ்டம் குறைந்தவர்களே.

லீ மேற்கத்தைய பத்திரிகைகளின் ஒரு முதன்மையான எதிரி. (சிங்கப்பூரைப் பற்றி தங்களது நாட்டவருக்கு தெரியப்படுத்துமுகமாகவே அமெரிக்கப் பத்திரிகையாளர்களை நாம் நாட்டுக்குள் அனுமதிக்கிறோம். ஆனால், அமெரிக்காவில் அமெரிக்க ஊடகங்கள் வகிக்கின்ற பாத்திரத்தை (அதாவது நிருவாகத்தைக் கண்காணிப்பவர், கடுங்கேள்விகள் கேட்கும் ஒரு விசாரணையாளர் என்றவகையிலான பாத்திரத்தை) ஏற்பதற்கு எம்மால் அனுமதிக்க முடியாது' என்று 1988ஆம் ஆண்டு அமெரிக்க செய்திப் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றிய போது லீ குறிப்பிட்டார்.

1980களின் பிற்பகுதியிலும் 1990களின் பிற்பகுதியிலும் அனேகமாக சிங்கப்பூரில் விநியோகத்தில் இருந்த சகல சர்வதேச வெளியீடுகளுமே அந்த நகர அரசைப் பற்றிய அவற்றின் செய்திப் பிரசுரத்துக்காக சிக்கலுக்குள்ளாகியிருந்தன. அரசினால் தொடுக்கப்பட்ட வழக்குகளை அவை எதிர்கொண்டன அல்லது வழக்குத் தொடரப்படும் என்ற அச்சுறுத்தலை எதிர்கொண்டன. இத்தகைய சர்வதேச வெளியீடுகளில் எக்கனோமிஸ்ற் சஞ்சிகை, இன்ரர் நாஷனல் ஹெரால்ட் ரிபியூன், நியூஸ்வீக், ராய்ட்டர்ஸ் செய்திச் சேவை மற்றும் ரைம்ஸ் சஞ்சிகை ஆகியவையும் அடங்கும். சிங்கப்பூர் நீதிமன்றமொன்றில் எதிர்நோக்கிய வழக்கில் இருந்து எந்தவொரு செய்தி நிறுவனமுமே வெற்றிகரமாக விடுபட்டு வந்ததாக நான் அறியவில்லை.



மெலனி கிர்க்பட்ரிக்

தவோல்ஸ்ரீட் ஜேர்ணலினதும் தற்போது செயலிழந்து போன ஃபார் ஈஸ்டேர்ண் எக்கனோமிக் றிவியூவினதும் பிரசுரகர்த்தாக்களாக டவ் ஜோன்ஸ் நிறுவனமே மிகப்பெரிய தாக்கத்துக்குள்ளானது. பாராளுமன்றத்தில் இருந்த இரு எதிர்க்கட்சி உறுப்பினர்களில் ஒருவரை அரசாங்கம் துன்பப்படுத்தியதை கண்டனம் செய்து எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கம் ஒன்றுக்காக ஏசியன் வோல்ஸ்ரீட் ஜேர்ணலுக்கு எதிராக 1985 ஆம் ஆண்டு சிங்கப்பூர் வழக்குத் தொடுத்தது. டவ்ஜோன்ஸ் பிறகு மேலதிகமாகவும் வழக்குகளைச் சந்திக்க நேர்ந்தது. அதன் விநியோகம் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அதன்

**பத்திரிகைச் சுதந்திரமும் செய்தி ஊடகங்களின் சுதந்திரமும் மிகவும் முக்கியம் வாய்ந்ததாக நாம் கருதுகிற சிங்கப்பூரின் ஒருமைப்பாட்டிற்கும் ஒழுங்குமுறைக்கும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தின் முதன்மையான நோக்கங்களுக்கும் கீழ்ப்படிவானவையாகவே இருக்க வேண்டும் என்பதே லீ குவான் யூவின் நிலைப்பாடு**

அளித்த பேட்டியொன்றிலும் லீ இலங்கை பற்றி கருத்துத் தெரிவித்திருந்தார்.

சிங்கப்பூரை விடவும் முன்கூட்டியே பிரிட்டனிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்ற இலங்கை உட்பட சில நாடுகளின் தவறுகளில் இருந்து படிப்பினைகளைக் கற்றுக்கொண்டதன் விளைவாகத் தான் தனது நாட்டைச் சரியான கொள்கையின் கீழ் வழிநடத்தி பொருளாதார சுபிட்சமிகு வெற்றிகரமான ஒரு அரசாக மிளிர வைக்க முடிந்தது என்று அவர் அதில் குறிப்பிட்டிருந்தார்.

'மலாயா சம்மேளனத்திலிருந்து 1965ஆம் ஆண்டு சிங்கப்பூர் வெளியேறியபோது எமக்கு அயலில் குரோத உணர்வு கொண்ட ஒரு நாடு தான் இருந்தது. எமது சனத்தொகை சீனர்களையும் மலாயர்களையும் இந்திய உபகண்டத்திலிருந்து வந்த குடியேற்றவாசிகளையும் கொண்டதாக இருந்தது. ஒரு தேச அரசுக்கான (Nation) அடிப்படை அங்கு இருக்கவில்லை. ஆனால், காலந்தாழ்த்தி நாம் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டமை எமக்கு ஒரு அனுகூலமாக இருந்தது. 20 வருடகால தோல்வி கண்ட அரசுகளின் (Failed States) உதாரணங்கள் எம்முன்னால் இருந்தன. எனவே எவற்றைத் தவிர்க்க வேண்டும் என்பதை நாம் தெரிந்து கொண்டோம். இனமோதல்கள், மொழிச் சர்ச்சை, மதரீதியான பிணக்குகளைத் தவிர்த்தோம். இலங்கையில் நடந்தவற்றை நாம் கண்டோம். இலங்கையினதும் புதிதாக சுதந்திரமடைந்த தோல்வி கண்ட அரசுகளினதும் தவறுகள் சிங்கப்பூரை வித்தியாசமான மார்க்கத்தில் பயணம் செய்ய வைத்தன. சிங்கப்பூரில் வாழ்கின்றவர்களில் பெரும்பான்மையானவர்கள் சீனர்களாக இருக்கின்ற போதிலும் எமது செயற்பாட்டு மொழியாக (working language) நாம் ஆங்கிலத்தையே தெரிவுசெய்தோம். மொழிவிடயத்தில் மிகவும் ஆழமாக ஆராய்ந்து தீர்மானத்தை மேற்கொண்டோம்' என்று லீ அந்தப் பேட்டியில் கூறியிருந்தார்.

– பாலன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிருபர்களுக்கு விசாவும் பணி அனுமதியும் நிராகரிக்கப்பட்டது.

'உள்நாட்டு அரசியலில் ஈடுபடுவதாக' கண்டுபிடிக்கப்படும் எந்தவொரு வெளிநாட்டுப் பத்திரிகையினதும் சஞ்சிகையினதும் விற்பனையையும் விநியோகத்தையும் மட்டுப்படுத்துவதற்கான சட்டமொன்றை 1986 ஆம் ஆண்டு சிங்கப்பூர் பாராளுமன்றம் நிறைவேற்றியது. 'உள்நாட்டு அரசியலில் ஈடுபடுதல் என்பதை வியாக்கியானப்படுத்தும் பொறுப்பு தகவல், தொடர்பாடல் அமைச்சரிடமே விடப்பட்டது. எந்தெந்தச் செயற்பாடுகள் உள்நாட்டு அரசியலில் ஈடுபடுவதாக கருதப்படுமென்பதை அவரே தீர்மானிப்பார். 'தனது கண்டுபிடிப்பை' அமைச்சர் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ வர்த்தமானியில் வெளியிட்ட உடனடியாக, 'குற்றமிழைத்த' பத்திரிகையின் அல்லது சஞ்சிகையின் விற்பனையையும் விநியோகத்தையும் குறைப்புச் செய்யும் உத்தரவை அவரால் பிறப்பிக்க முடியும். இந்த நடைமுறை 'gazetting' என்று கூறப்படும்.

எதற்கு லீகுவான் யூ பயந்தார்? 'வாசகர்கள்' என்ற ஒரு வார்த்தையே அந்தக் கேள்விக்கான பதில். வேறுபட்ட கருத்துக்களைக் கிரகித்து அவற்றை மதிப்பீடு செய்து சரியான ஒரு எண்ணத்தை உருவாக்கிக் கொள்வதில் சிங்கப்பூரியர்களுக்கு இருக்கின்ற ஆற்றலில் அவருக்கு நம்பிக்கை மிக மிகக் குறைவு. சரியான எண்ணம் என்பது லீயைப் பொறுத்தவரை அவரின் எண்ணமே.

பலபேர் தகவல்களைச் சீராக ஆராயாமல் பின்பற்றுகிறார்கள். ஒரு விமானக்கடத்தலைப் பற்றிய செய்தி வேறு எதிர்பாராத இடங்களில் கண்மூடித்தனமான கடத்தல்களுக்கு வழிவகுக்கிறது. வெளிநாட்டு இராஜதந்திரியொருவர் கிளர்ச்சிக்குழுக்களினால் கடத்திச் செல்லப்பட்டு பணயம் வைக்கப்படுவது தொடர்பான செய்தி வேறு நாடுகளிலும் அத்தகைய கடத்தல், பணயம் வைப்புகளுக்கு விரைவாகவே வழிவகுக்கிறது' என்று 1971 ஆம் ஆண்டு ஹெல்சிங்கி நகரில் சர்வதேச பத்திரிகை நிறுவனத்தில் உரையாற்றியபோது லீ குறிப்பிட்டார். சிங்கப்பூரில் பத்திரிகைச் செய்திகள் கலவரங்களை மூளவைத்து



மரணங்களுக்கு வழிவகுத்த உதாரணங்கள் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

'பத்திரிகைச் சுதந்திரமும் செய்தி ஊடகங்களின் சுதந்திரமும் மிகவும் முக்கியம் வாய்ந்ததாக நாம் கருதுகிற சிங்கப்பூரின் ஒருமைப்பாட்டுக்கும் ஒழுங்கு முறைக்கும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தின் முதன்மையான நோக்கங்களுக்கும் கீழ்ப்படிவானவையாகவே இருக்க வேண்டும்' என்று ஹெல்சிங்கி உரையின் இறுதியில் அவர் குறிப்பிட்டார். இதை அவர் தனது சுயசரிதையிலும் மீண்டும் கூறி வைக்கத் தவறவில்லை.

பத்திரிகைகளுடனான லீகுவான் யூவின் போர்கள் தொடர்பில் பல மறக்கமுடியாத சம்பவங்கள் உண்டு. அவற்றில் எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்றை இங்கு கூறவிரும்புகிறேன். 1980களின் பிற்பகுதியில் ஏசியன் வோல் ஸ்ரீட் ஜேர்ணலை சிங்கப்பூர் அரசாங்க வர்த்தமானியில் அறிவிப்புச் செய்து அதன் விற்பனையை சுமார் 5000 பிரதிகளிலிருந்து 400 பிரதிகளாகக் குறைத்தது. சிங்கப்பூரின் நாணய அதிகார சபையிடமிருந்து வந்த இரு கடிதங்களை ஒரு குறைப்பும் செய்யாமல் முழுமையாக பிரசுரம் செய்வதற்கு அந்தப் பத்திரிகை மறுத்ததற்கு பதிலடியாகவே இந்த நடவடிக்கை. அங்கீகரிக்கப்பட்ட பிரதிகளில் பெருமளவானவை அரசாங்க நூலகங்களுக்கு அல்லது ஓரளவு அரச கட்டுப்பாட்டில் உள்ள நூலகங்களுக்கு அனுப்பப்பட வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிட்டது.

ஏசியன் வோல் ஸ்ரீட் ஜேர்ணலின் சிங்கப்பூர் பிரிவு அலுவலகத்துக்கு ஒரு நாள் தொலைபேசி அழைப்பொன்று வந்தது. லீ சந்தா செலுத்திப் பெற்றுவந்த பிரதி எங்கே என்று பிரதமரின் அலுவலகம் அறிய விரும்புவதாக தொலைபேசியில் பேசிய அதிகாரி கேட்டார்.

ஆம். உங்களது பத்திரிகையின் விற்பனை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பது எமக்குத் தெரியும். ஆனால், அந்த மட்டுப்படுத்தலை பிரதமருக்கு வருகின்ற பிரதிக்கு பிரயோகிக்க முடியாது என்றும் அந்த அதிகாரி கூறினார்.

அதற்கு பத்திரிகை அலுவலகத்திலிருந்து அதன் பிரதிநிதி பின்வருமாறு பதிலளித்தார்.

'லீ குவான் யூவை இதுவிடயத்தில் பிரத்தியேகமாகக் கவனிக்கவோ நடத்தவோ முடியாது. எமது பத்திரிகையின் செய்திகளையும் கருத்துக்களையும் பிரதமர் பெரிதாக மதிக்கிறாரென்றால் சகல சிங்கப்பூரியர்களுக்கும் இருக்கக்கூடிய தெரிவையே அவரும் நாடவேண்டும். நூலகத்துக்குப் போய் வாசிக்கச் சொல்லுங்கள்'.

கிர்க்பட்ரிக் ஏசியன் வோல் ஸ்ரீட் ஜேர்ணலின் ஆசிரிய தலையங்கப் பக்கத்தின் முன்னாள் பிரதி ஆசிரியர் அப்பத்திரிகையில் வெளியான ஆசிரியத் தலையங்கங்களுக்காக அவர் சிங்கப்பூரில் இரு தடவைகள் குற்றவியல்ப்பிரிவில் அவமதிப்பு குற்றச்சாட்டுகளுக்கு முகங்கொடுத்தவர். அவருக்கும் வேறு ஆசிரியர்களுக்கும் அபராதம் விதிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(17ஆம் பக்கத்தொடர்ச்சி...)

இப்போது மறந்துவிட்டார்கள் போலத் தோன்றுகிறது.

பழைய கூட்டணி அதன் மூலமுதல் வடிவத்தை இழக்க வேண்டிய கதி ஏற்பட்டுவிட்டது போலத் தெரிகிறது. ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்திலிருந்து வெளியேறக்கூடிய சாத்தியம் இருக்கிறது. அரசாங்கத்தில் தொடர்ந் தும் இருப்பதற்கு அக்கட்சி தீர்மானிப்பதாக இருந்தாலும் கூட, நச்சரித்துக்கொண்டிருக்கின்ற ஒரு அரை குறை மனத்துடனான பங்காளியாகவே இருக்கும். அண்மைய நிகழ்வுப் போக்குகளினால் சிவில் சமூகக் குழுக்கள் முற்றிலும் அசௌகரியத்துக்குள்ளாகியிருக்கின்றன. இந்த அரசாங்கம்தோற்கடிக்கப்படுவதை அல்லது பதிலீடு செய்யப்படுவதை சிவில் சமூகக் குழுக்கள் விரும்பாமல் இருக்கக்கூடுமென்றாலும், அவை அரசாங்கத்திலிருந்து சற்று தூரவிலகியிருக்கக்கூடியது சாத்தியம். பழைய ஆட்சி திரும்பி வருவதென்பது இலங்கை அரசையும் ஆட்சி முறையையும் மீள் எதேச்சாதிகாரமயமாக்கும் புதிய செயன்முறையொன்றின் தொடக்கமாகவே அமையும் என்பதை சிவில் சமூக குழுக்கள் நன்கு தெரிந்தே வைத்திருக்கின்றன. அதேவேளை, தேசிய ஜனநாயக முன்னணி அரசாங்கத்தின் நல்ல நடவடிக்கைகளை வரவேற்கி ன்ற அதே வேளை, தவறான நடவடிக்கைகளைக் கண்டனம் செய்கின்ற விமர்சன அடிப்படையிலான ஆதரவை ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி) வழங்கி வந்தது.

ஆனால், அத்தகைய ஆதரவு இப்போது விமர்சன ரீதியான எதிர்ப்பாகவே மாறியிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இந்த நிகழ்வுகள் எல்லாமே இலங்கையின் சமகால அரசியலின் புதிய போக்குகளையும் சிக்கல்களையும் திசைமார்க்கங்களையும் பற்றி எமக்குப் பலவற்றைக் கூறுகின்றன. அவற்றில் முக்கியமானவை என்று பின்வரும் இரு அம்சங்களைக் குறிப்பிட முடியும்.

★ எதேச்சாதிகார ஆட்சியின் திசையிலான அரசியல் சீர்திருத்தங்கள் ஜனநாயக சீர்திருத்தங்களை விடவும் நிறைவேற்றுவதற்கு எளிதானவை யாகும். ஏனென்றால் ஜனநாயக சீர்திருத்தச் செயன்முறைகள் குளறுபடியானதாகும். அது பன்முகத்தன்மை கொண்ட நோக்குகளை வரவழைக்கும். சிந்தனைகளுக்கும் செயற்திட்டங்களுக்கும் இடையேயான வெளிப்படையான மோதல்களுக்கு வசதி செய்து கொடுக்கிறது. பகிரங்கத்தில் இடம்பெறும் அதிகாரப்போராட்டங்களில் இருந்து பயனடைவதாக இருக்கிறது. அரசியல் மாற்றத்துக்கான பல திசைமார்க்கங்களைக் குறித்து நிற்கிறது.

★ நியதிகளை அடிப்படையாகக் கொண்ட அரசியலுக்கும் நடைமுறைச்சாத்திய அரசியலுக்கும் இடையேயான மோதலும் இடைவெளியும் தவிர்க்க முடியாதவை. நியதிகளை அடிப்படையாகக் கொண்ட அரசியலுக்கு பாதகமாக அமையக்கூடியதாக நடைமுறைச் சாத்திய அரசியலுக்கு சிறப்புரிமை கொடுப்பதைத் தவிர்க்க வேண்டியதே அவசியமான தாகும். ■

---

(13ஆம் பக்கத்தொடர்ச்சி...)

இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று 19 ஆவது திருத்தம் தொடர்பிலான கலந்துரையாடல், திட்டமிடல், வர்த்தமானி அறிவிப்பு போன்றவற்றில் ஒரு வித அவசரத்தன்மை காணப்படுகின்றது. இது முற்றிலும் அவசியமற்றது ஆகும். அரசியல் யாப்பு மாற்றம் என்பது பாரதூரமான, மிக நீண்ட கால தாக்கமுடைய ஒரு விடயம் ஆகும். எனவே, அதனை அவசரமாகச் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. உடனடியாக தேவைப்படுவது என்னவெனில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் சிலவற்றைக் குறைப்பது ஆகும். அதில் மட்டும் இப்போது கவனம் செலுத்திவிட்டு, அடிப்படையான மாற்றங்கள் தொடர்பில் பாராளுமன்றத் தேர்தலின் பின் கவனம் செலுத்துவது பயனுடைய செயற்திட்டமாக அமையும்.

## தமிழ்க் கோரிக்கை


இரண்டாவது, அரசியல் கட்டமைப்பில் பாரதூரமான மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய அரசியலமைப்பு சீர்திருத்தம் பற்றிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்ற போது தமிழ்த் தரப்பின் குரல் முழுமையாக இல்லாமற் போயுள்ளமை ஆகும். இச்செயன்முறையில் தமிழ்க் கட்சிகளின் தேவை என்ன, அவை எவ்விதம் கையாளப்பட வேண்டும் என்ற ஒரு கலந்துரையாடலும் கோரிக்கையும் இருந்திருக்க வேண்டும். இவ்விடயத்தில் இன்றைய அமைதியும், செயற்பாடின்மையும் அசாதாரணமானவை அல்ல. இச்செயன்முறையில் எமது தேவை என்ன என்பது பற்றி கதைக்காமலே வாக்கெடுப்பில் கையைத் தூக்கினால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எவ்வாறாயினும் இன்றைய தேசிய அரசாங்கம் பிரச்சினைக்குரிய சில அடிப்படைகளை ஏற்படுத்தியுள்ளது என்பதில் சந்தேகமில்லை. இப்பிரச்சினைகளையும், சிறுபான்மை அரசாங்கம் ஒன்று ஆட்சியில் இருந்தத னாலும் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைக் கையாளக்கூடியதாக இருந்த ஒரு மார்க்கம் இவ்வருட இடைப்பகுதியில் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவது ஆகும். அது புதிய ஜனாதிபதியை தெரிவு செய்த மக்களுக்கு புதிய அரசாங்கத்தையும் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பதை வழங்கியிருக்கும். அத்துடன் தேர்தலின் பின் ஆட்சி அமைக்கும் கட்சிக்கு அங்கீகாரப் பிரச்சினை ஒன்றும் இருக்காது. இப்போது சுதந்திரக்கட்சி பின்வாசல் வழியாக அரசாங்கத்தினுள் வந்தது போல் ஆகிவிட்டது. சுருக்கமாகக் கூறுவதாயின் இன்றைய நிலை தொடர்வது ஜனவரி 8 ஆம் திகதி எதிர்பார்க்கப்பட்ட மாற்றத்திற்கு எதிரானது. எனவே, அது தொடர்ந்து இருப்பது நியாயமானது அல்ல.

கலாநிதி எஸ்.ஐ.கீதபொன்கலன் அமெரிக்காவின் மேரிலாந்து மாநிலத்தில் உள்ள சாலிஸ்பரி பல்கலைக்கழக மோதல் தீர்வுத் துறை தலைவர் ஆவார். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லீ குவான் யூ நாட்டை முன்னேற்றினார் ஆனால் அதை நம்பவில்லை



அ.மார்க்ஸ்

**உலகத்தரமான பொருளாதார வளர்ச்சி, தூய்மையான நகரம், ஊழலற்ற ஆட்சி, அடிப்படைத் தேவைகள் நிறைவு பெற்ற வாழ்க்கை. இவை தவிர வேறு என்ன வேண்டும் குடிமக்களுக்கு என்பதுதான் ஆளுகை குறித்து லீ குவான் யூ கொண்டிருந்த கருத்து**

நவீன சிங்கப்பூரை உருவாக்கியவர் எனக் கருத்து வேறுபாடின்றி அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் அதன் முன்னாள் பிரதமர் லீ குவான் யூ வின் (செப் 16, 1923 – மார்ச் 23, 2015) மரணம் உலக அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது. யாசிர் அராஃபத், நெல்சன் மண்டேலா ஆகியோருக்குப் பிறகு அதிக உளவில் உலகத் தலைவர்கள் கலந்து கொண்டதாக அவரது இறுதி அஞ்சலி அமைந்தது. தமிழகத்திலும் கூட ஆங்காங்கு தன்னிச்சையாக மக்கள் ஃப்லெக்ஸ் போர்டுகள் வைத்து அஞ்சலி செலுத்தினர். தீவிரத் தமிழ்த் தேசியவாதியாகிய வைகோ கண்ணீர் ததும்ப அவருக்கு அஞ்சலி செலுத்தியிருந்தார். நல் ஆளுகைக்கான விளம்பர மாதிரியாக (poster boy of good governance) ஃபைனா ன்சியல் டைம்ஸ், வால் ஸ்ட்ரீர் ஜர்னல் ஆகியவை லீயைப் புகழ்ந்தன.

அமெரிக்கா போன்ற வளர்ச்சிபெற்ற நாடுகளுடனும், பிலிப்பைன்ஸ், சிம்பாப்வே போன்ற குறை வளர்ச்சி நாடுகளுடனும் லீயின் சிங்கப்பூர் அடைந்த வளர்ச்சியை ஒப்பாய்வு செய்தது ஒரு இதழ். சிங்கப்பூரின் வளர்ச்சி அமெரிக்காவுடையதைக் காட்டிலும் விரைவானது, அதிகமானது எனத் தரவுகளுடன் நிறுவியது அந்த இதழ் (கிரகாம் ஆலிசன், தி அட்லாண்டிக், மார்ச் 30, 2015). கடந்த பத்தாண்டுகளில் அமெரிக்காவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அதிகரிப்பு வீதம் 2 சதம் என்றால் சிங்கப்பூரின் வீதம் 6 சதம். உலகத் தொழிற் போட்டிக்கான குறியீட்டில் (Economic Forums Global Competitiveness Index) இரண்டாவதாகவும், உலக அளவில் வணிகம் செய்வதற்கான சிறந்த நாடுகளின் வரிசையில் (Economist Intelligence Units ranking) முதலாவதாகவும் லீயின் சிங்கப்பூர் இன்று மதிப்பிடப்படுகிறது. எல்லா Credit Rating நிறுவனங்களும் இன்று சிங்கப்பூருக்கு AAA அந்தஸ்து வழங்குகின்றன என்பவற்றை எல்லாம் இதழ்கள் எழுதி மாய்ந்தன.

பொருளாதாரத்தில் மட்டுமா இந்த முன்னேற்றம். இல்லை மக்கள் நலம், ஊழலற்ற ஆளுகை, குற்றச் செயல்கள் இன்மை ஆகிய அம்சங்களிலும் இன்று உலக அளவில் முன்னணியில் உள்ள நாடு சிங்கப்பூர்.

1965இல் ஆயிரத்திற்கு 27.3 ஆக இருந்த குழந்தை இறப்பு வீதம் (infant&mortality rate) 2003 இல் வெறும் 2.2 ஆகக் குறைந்தது. இது அமெரிக்காவைக் காட்டிலும் 3 மடங்கு குறைவு. உலகிலேயே மக்கள் நலத்தில் முதலாவது நாடாக சிங்கப்பூரை புளூம்பெர்க் தரவரிசை (worlds healthiest country) முதன்மைப் படுத்துகிறது. குற்றச் செயல்கள் குறைக்கப்பட்டுள்ள வகையிலும் லீயின் சிங்கப்பூர் முன்னிற்கிறது. சிங்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரில் ஒருவர் கொலை செய்யப்படுவதற்கான சாத்தியம் அமெரிக்காவைக் காட்டிலும் 24 மடங்கு குறைவு. லீயின் மரணத்தை ஒட்டி இப்படி நிறையத் தரவுகள் விரிவான ஆதாரங்களோடு ஊடகங்களில் மிதந்தன. சுருக்கம் கருதி இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

2. இந்தப் பெருமைகள் அனைத்தும் லீ குவான் யூவையே சாரும் என்பதிலும் யாருக்கும் கருத்துமாறு பாடில்லை. 1950 - 60 களில், இரண்டாம் உலகப் போர் மற்றும் இனக் கலவரங்களால் நசிந்து கிடந்த இந்த பிரிட்டிஷ் காலனியை, வெறும் 718.3 சதுர கி.மீ பரப்பளவே உள்ள இந்தச் சின்னத் தீவை, வளர்ச்சியற்றிருந்த ஒரு துறைமுகக்கிராமத்தை, இப்படிப் பல அம்சங்களில் உலகத் தரத்தில் முதலான நகர அரசாகவும் (city state), உலகின் மிகச் சுறுசுறுப்பான துறைமுகங்களில் ஒன்றாகவும் ஆக்கியவர் லீ என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.


**1959 தொடக்கம் பி.ஏ.பி. கட்சிதான் சிங்கப்பூரை ஆட்சி செய்து வருகிறது. சாகும்வரை அதன் தனிப்பெரும் தலைவராக இருந்த லீ 30 ஆண்டு காலம் பிரதமர், 56 ஆண்டு காலம் சகல அதிகாரங்களுடன் கூடிய அமைச்சர், 60 ஆண்டு காலம் ஒரே தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் எனத்தொடர்ந்து சிங்கப்பூரை தனது சுண்டு விரல் இயக்கத்தில் வைத்திருந்தவர் அவர்**

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்று வந்து வழக்குரைஞராகப் பணி புரிந்துகொண்டிருந்த ஹாரி லீ குவான் யூ1959 இல் தொடங்கிய பி.ஏ.பி (Peoples Action Party PAP) கட்சிதான் இன்று வரை தனிப்பெரும்பான்மையுடன் சிங்கப்பூரை ஆண்டு வருகிறது. சாகும்வரை அதன் தனிப்பெரும் தலைவராக இருந்தவர் லீ. 30 ஆண்டு காலம் பிரதமர், 56 ஆண்டு காலம் சகல அதிகாரங்களுடனும் கூடிய அமைச்சர், 60 ஆண்டு காலம் ஒரே தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் எனத் தொடர்ந்து சிங்கப்பூரைத் தன் சுண்டு விரல் இயக்கத்தில் வைத்திருந்தவர் அவர்.

1963இல் சரவாக், வட போர்னியோ ஆகிய முன்னாள் பிரிட்டிஷ் காலனிகள் மலேசியத் தீபகற்பத்துடன் இணைந்து கூட்டாட்சி அமைத்த போது நீர், நிலம் முதலான மிக அடிப்படையான இயற்கை வளங்கள் எதுவும் இல்லாத சிங்கப்பூரை மலேசியக் கூட்டாட்சியில் இணைப்பது என்கிற முடிவை லீ எடுக்க வேண்டியதாயிற்று.

எனினும் சிங்கப்பூர் மாநில அரசுக்கும், மலேசிய மத்திய அரசுக்கும் பல பிரச்சினைகளில் உடன்பாடு ஏற்படவில்லை. 1964 இல் பெரும் இனக் கலவரம் ஒன்றும் உருப்பெற்றதை ஒட்டி மலேசிய நாடாளுமன்றம் சிங்கப்பூரை கூட்டமைப்பிலிருந்து விலக்குவது என முடிவெடுத்தது. அனைத்து உறுப்பினர்களின் ஆதரவுடனும் (120 எதிர் 0) இம் முடிவு எடுக்கப்பட்டது. உலக வரலாற்றில் இப்படி கட்டாயமாக விடுதலை அளிக்கப்பட்ட நாடாக சிங்கப்பூர் அமைந்தது. லீ இதைத் தேசிய ஊடகங்களில் அறிவித்த போது அழுதார் எனச் சொல்லப்படுகிறது.

இயற்கை வளங்கள் அற்ற இந்தச் சின்னஞ் சிறு நாட்டை தொழில் உற்பத்தியையும், வணிகத்தையும் மையமாகக் கொண்ட உலகத்தரமான நாடாக ஆக்குவதற்கு லீ தேர்ந்த அணுகல் முறையை விளக்க அரசியல் ஆய்வாளர்கள் பயன்படுத்தும் சொற்களில் முக்கியமானது Meritocracy. அதாவது திறமையை மையப்படுத்திய ஆளுகை. ஒரு கார்பொரேட் நிறுவனம் போல அது ஒவ்வொரு துறையிலும் சாதித்தாக வேண்டும். சாதனை, சாதனை ஒன்றுதான் எல்லாவற்றிலும் அளவு கோல்.



எதுவும் இதற்குத் தடையாக அமைந்து விடக் கூடாது. மொழி, இனம் எந்தப் பிரச்சினையும் குறுக்கே வந்துவிடக்கூடாது. 5.5 மில்லியன் மக்கள் தொகையில் 75 சதம் பேர் சீனர்களாக இருந்த போதும் சீன மொழிதான் (மான்டரின்) ஆட்சி மொழி என அவர் அறிவிக்கவில்லை. தமிழ், மலாய், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளையும் ஆட்சி மொழியாக்கினார். ஆங்கிலம் பொதுமொழி. சீனம் அல்ல. பள்ளிகளில் தாய் மொழியுடன் ஆங்கிலத்தையும் கற்கும் வாய்ப்பு ஒவ்வொரு மொழியினருக்கும் அளிக்கப்பட்டது. இதற்கென லீ தனது சொந்த நிதியிலிருந்து 12 மில்லியன் டொலரை அளித்தார்.

30 ஆண்டுகளுக்குப் பின் 1990 இல் பிரதமர் பதவியிலிருந்து விலகிய லீ அந்தப் பொறுப்பை அவரது மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் நம்பிக்கைக்குரிய கோ சோ டோங் கிடம் ஒப்படைத்தார். எனினும் அமைச்சரவையில் மூத்த அமைச்சர் (Senior Minister) எனும் பதவி ஒன்றை உருவாக்கி அதைத் தன் கைவசம் வைத்துக் கொண்டார்.

உரியநேரம் வந்த போது (2004) மகன் லீ சைன் லூங் கிடம் பிரதமர் பொறுப்பை அளித்தார். மகன் தந்தைக்கு ஆற்றும் உதவியாக லூங் தந்தையை அமைச்சர்களின் ஆசான் (Minister Mentor) என்கிற பதவியை உருவாக்கி அதில் அமர்த்தினார். அதிகார நுணுக்கங்களில் மகன் முழுமையாகத் தேறியவுடன் 2011இல் லீ ஆசான் பதவியிலிருந்து இறங்கினார். எனினும் சாகும் வரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் தொடர்ந்தார்.

உலகத்தரமான பொருளாதார வளர்ச்சி, தூய்மையான நகரம், ஊழலற்ற ஆட்சி, அடிப்படைத் தேவைகள் நிறைவு பெற்ற வாழ்க்கை, வேறென்ன வேண்டும் குடி மக்களுக்கு என்பதுதான் ஆளுகை குறித்து லீ கொண்டிருந்த கருத்தாக இருந்தது.

லீயின் உடல் வைக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற இல்லத்திலும், பிற பொது மையங்களிலும் 1.25 மில்லியன் மக்கள் தங்களின் முதல் பிரதமர் லீ குவான் யூ விற்கு அஞ்சலி செலுத்தியதாகத் தெரிவிக்கிறார் லீயின் மூத்த மகனும் இன்றைய பிரதமருமான லீ செய்ன் சூங் (ராய்டெர்ஸ், மார்ச் 29).

3. அமோஸ் யீ ஒரு 17 வயதுச் சிறுவன். அவனைச் சிங்கப்பூர் அரசு இரண்டு நாட்களுக்கு முன் (மார்ச் 29) கைது செய்துள்ளது. அவன் செய்த குற்றம் வேறொன்றும் இல்லை. லீ, ஒரு சகிக்க முடியாத ஆள் (Lee, A horrible Person) எனச் சொன்னதுதான்.

சென்ற மார்ச் 27 அன்று, கடைசியாக லீ செத்துத் தொலைந்தார் (Lee Kuan Yew Is Finally Dead!) என்கிற தலைப்பில் ஒரு காணொளியை யூ ட்யூபில் அமோஸ் லீ பதிவேற்றினான். அடுத்த இரண்டே நாட்களில் 6,86,000 பேர் அதைக் கண்டனர்.

லீ எல்லோர் மனத்திலும் அச்சத்தை விதைத்திருந்தார். ஏதாவது சொன்னால் பிரச்சினை வந்து விடுமோ என எல்லோரும் அஞ்சினர். அதன் விளைவுதான் லீக்குக் கிடைத்துள்ள பெருமைகள் என அவன் கூறியது ஒரு இதழில் (The Independent) வெளிவந்தது. ஆனால் நான் இதற்கெல்லாம் பயப்படவில்லை எனவும் சொன்னான்.

லீ செய்ன் லூங் அரசு சென்ற 29ஆம் திகதி அன்று அமோஸைக் கைது செய்தது. யூ ட்யூப் பதிவும் முடக்கப்பட்டது. கருத்துச் சுதந்திரத்தில் சிங்கப்பூர் அரசின் அணுகல் முறையைப் புரிந்து கொள்ள இந்தச் சம்பவம் ஒரு எடுத்துக்காட்டு என லீயை விமர்சிப்பவர்கள் கூறுகின்றனர்.

பொருளாதார வளர்ச்சியில் லீ குவான் யூவைப் பாராட்டுகின்றவர்களுங் கூட கடைசியில் இப்படிச் சொல்லி முடிப்பது வழக்கம்:

**55 இலட்சம் மக்கள் தொகையில் 75% பேர் சீனர்களாக இருந்த போதிலும் சீன மொழிதான் ஆட்சி மொழி என அவர் அறிவிக்கவில்லை. சீன மொழி, தமிழ், மலாய், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளையும் ஆட்சி மொழியாக்கினார். ஆங்கிலம் பொது மொழி. பள்ளிகளில் தாய் மொழியுடன் ஆங்கிலத்தையும் கற்கும் வாய்ப்பு ஒவ்வொரு மொழியினருக்கும் அளிக்கப்பட்டது.**

அரசை எதிர்த்த ஆர்ப்பாட்டங்கள், பத்திரிகைச் சுதந்திரம் முதலான சிவில் உரிமைகளை முடக்கும் அரசு எனவும், அரசியல் எதிரிகள் மீது வழக்குகளைத் (libel suits) தொடரும் அரசு எனவும் லீயின் ஆளுகை விமர்சிக்கப்பட்டது. ஆனால், அரசியல் ஸ்திரத்தன்மைக்கு இத்தகைய எதேச்சாதிகார நடவடிக்கைகள் அவசியம் எனவும், இத்தகைய நடவடிக்கைகளுடன் சட்டத்தின் ஆட்சியும் சேரும்போதுதான் பொருளாதார வளர்ச்சி சாத்தியப்படும் என்றும் அவர் வாதிட்டார். இப்படி முடிகிறது லீ குறித்த விக்கிபீடியா கட்டுரை.

சிங்கப்பூர் குறித்த விக்கி கட்டுரையில், பத்திரிகைச் சுதந்திரம் உலகத்திலேயே மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளதாலும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் அதிகபட்சமாக ஒடுக்கப்படுவதாலும் ஜனநாயக அளவுகோலைப் (Democratic index) பொருத்தமட்டில் ஆகக் கீழான நாடாக அது உள்ளது என்கிற சொற்களைக் காணலாம்.

கலைஞர்களுக்கும் கூட அங்கு கருத்துரிமை இருந்ததில்லை. தமிழ் பேசும் உலகின் ஆகச்சிறந்த அரங்க இயக்குனரும் கலைஞருமான சிங்கை இளங்கோவன், அவர் மனைவியும் அக்னிக் கூத்து அமைப்பின் தலைவருமான தேன்மொழியும் அடக்குமுறைகளுக்கு ஆளாக்கப்பட்டது ஒரு எடுத்துக்காட்டு (Laredo Morning Times, Oct 29, 2000).

'எனது எல்லா நடவடிக்கைகளையும் சரி என நான் சொல்லவில்லை. முறையான விசாரணை இல்லாமல் நான் கைதுகளைச் செய்தது உண்மைதான்' என அமெரிக்கப் பத்திரிகையாளர்களிடம் லீ யே ஒரு முறை வாக்குமூலம் அளித்துள்ளார்.

தன்னுடையது சட்டத்தின் ஆட்சி, முற்றிலும் திறமையை அடிப்படையாகக் கொண்டது என அவர் சொல்லிக் கொண்டாலும் நடைமுறை அப்படி இல்லை. 30 ஆண்டு காலப் பிரதமர் பதவிக்குப் பின் தனக்கு மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் விசுவாசமான ஒருவரைப் பதவியில் அமர்த்திய போதிலும் அவரை முழுமையாக நம்பாமல் அமைச்சரவைப் பதவி ஒன்றை உருவாக்கி அமர்ந்து கொண்டவர் லீ. இராணுவத்தில் அவர் மகன் மிக வேகமாகப் பதவி உயர்வுகளைப் பெற்றார். அவர் பிரதமராகத் தகுதி பெறுவதற்கு அது தேவையாக இருந்தது. மருமகளின் கட்டுப்பாட்டில் ஒரு தேசிய முதலீட்டு நிதியம் செயல்படுகிறது. பல பில்லியன் டொலர்கள் அளவிலான மக்களின் பணம் எந்த வெளிப்படைத் தன்மையும் இன்றி அவரால் கையாளப்படுகிறது.

வெஸ்ட்மினிஸ்டர் முறையிலான பல கட்சி ஆட்சி முறை என்று சொல்லிக் கொண்ட போதிலும் கடந்த 60 ஆண்டுகளாக அங்கு லீயின் கட்சியே வெற்றி பெற்று வருகிறது. எதிர்க்கட்சித் தலைவர்கள் மீது வழக்குகளைத் தொடர்ந்து கடுமையான அபராதம் விதித்து ஓட்டாண்டி ஆக்குவதோடு மீண்டும் அவர்கள் தேர்தலில் போட்டியிட இயலாதவாறும் செய்யப்பட்டது. கடந்த தேர்தலில் எதிர்க் கட்சிகள் 40 சத வாக்குகளைப் பெற்றிருந்தபோதும் நாடாளுமன்றத்தில் 10 சத இடங்களைத்தான் பெற முடிந்தது.

ஊழல்கள் இல்லைதான். ஆனால் ஊழலை ஒழிப்பது என்கிற பெயரில் அரசியல் பொறுப்புகளில் உள்ளவர்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் அளிக்கப்படும் அபரிமிதமான ஊதியம் கடும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை ஏற்படுத்தியுள்ளன. தவிரவும் இங்கு முதலீடு செய்யப்படும் வெளிநாட்டுப் பணங்கள் பெரும்பாலும் தவறான வழிகளில் சம்பாதிக்கப்பட்டவை என்பதையும் மறந்துவிட இயலாது.

ஒன்றை இங்கு அழுத்தமாகக் குறிப்பிட்டாக வேண்டும். சிங்கப்பூரின் பொருளாதார வளர்ச்சியில் இந்தியா, வங்க தேசம் முதலான நாடுகளிலிருந்து சென்று அங்கு கட்டுமானத் தொழிலிலும், இதர கடுமையானதும் ஆபத்தானதுமான பணிகளிலும் உள்ள புலம் பெயர் தொழிலாளிகளின் பங்கு இன்றியமையாதது.

2013ஆம் ஆண்டுக் கணக்குப்படி அங்கு இன்று 1.3 மில்லியன் புலம்பெயர் தொழிலாளிகள் உள்ளனர். இவர்களில் 7,60,000 பேர் பயிற்சியற்ற (un skilled) ஆண் தொழிலாளிகள். 2,10,000 பேர் வீட்டு வேலைகளுக்காகக் கொண்டுவரப்பட்ட பெண் தொழிலாளிகள் (The Straits Times, Dec 22, 2013).

இவ்வளவு அதிக எண்ணிக்கையில் அங்கு புலம் பெயர்ந்த தொழிலாளிகள் பணி செய்து கொண்டிருந்த போதும் லீ இறுதிவரை புலம் பெயர்ந்த தொழிலாளிகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் பாதுகாப்பிற்கான ஐ.நா உடன்பாட்டில் கையெழுத்திடவில்லை. அதிக அளவில் புலம்பெயர்ந்த தொழிலாளிகளை அனுப்புகிற நாடுகளுடன் இரு நாட்டு ஒப்பந்தங்களையும் செய்து கொள்ளவில்லை.

வேலை அளிக்கும் நிறுவனங்கள் மூலமாகப் பெறும் விசாக்களுடன் (employer sponsored visas) வரும் தொழிலாளிகள் கடும் துன்பங்களுக்கு உள்ளாகின்றனர். முதலாளிகள் அளவற்ற அதிகாரத்துடன் சுரண்டிக் கொழுக்க இது வழி வகுக்கிறது. ஊதியம் வழங்க மறுப்பது, இடைவெளி இன்றி நீண்ட பணி நேரம், ஆபத்து விளைவிக்கக்கூடிய வேலைகளைச் செய்யக் கட்டாயப் படுத்துதல், விபத்துகள் ஏற்பட்டால் மருத்துவச் செலவுகளை ஏற்க மறுத்தல், ஊதிய பாக்கிகளைக் கணக்கிட்டுக் கொடுக்காமலே கட்டாயமாக நாட்டை விட்டு வெளியேற்றல் (forced repatriation), வசதிகளற்ற தங்குமிடங்களில் திணித்து அடைத்தல் என இத்தொழிலாளிகள் படும் துயரங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

> தன்னுடையது சட்டத்தின் ஆட்சி, முற்றிலும் திறமையை அடிப்படையாகக் கொண்டது என லீ சொல்லிக்கொண்டாலும் 30 ஆண்டு கால பிரதமர் பதவிக்கு பின்னர் தனக்கு மிகவும் விசுவாசமானவரை பதவியில் அமர்த்தினார். அவரையும்கூட முழுமையாக நம்பாமல் அமைச்சரவைப் பதவி ஒன்று உருவாக்கி அதில் அமர்ந்து கொண்டவர் அவர்

சென்ற 2013 டிசம்பர் 8 அன்று தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு தொழிலாளி விபத்தொன்றில் இறக்க நேர்ந்ததை ஒட்டி சுமார் இரண்டு மணி நேரம் 400 தொழிலாளிகள், பெரும்பாலும் தமிழர்கள் மற்றும் வங்க தேசத்தவர், காவலர்களையும், காவல் வாகனங்களையும் தாக்கிச் சேதம் விளைவித்தபோது சிங்கப்பூர் அரசு அதிர்ச்சி அடைந்தது. வரலாறு காணாத இந்த எதிர்ப்பைக் கண்டு துணுக்குற்றது.

தேங்கிக் கிடந்த வேதனை இப்படி வெடித்துச் சிதறியது. பின்னணியாக உள்ள நியாயமான காரணங்களைக் காண மறுத்த சிங்கப்பூர் அரசு அதை ஒரு குடிகாரர்களின் வெறியாட்டமாகக் கொச்சைப்படுத்தியது. சுமார் 22 பேர் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டன. 57 பேர் கட்டாயமாக அவர்களின் நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். இனி அவர்கள் சிங்கப்பூருக்குத் திரும்ப இயலாது. 200 பேருக்கும் மேற்பட்டோர் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர். தொழிலாளிகள் மீது இவ்வளவு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்ட சிங்கப்பூர் அரசு இந்தத் தொழிலாளிகள் வசிக்கும் லிட்டில் இந்தியா போன்ற பகுதிகளில் மது விற்பனையை நிறுத்துவது, தொழிலாளர்களை அழைத்துச் செல்ல தனியார்

(33ஆம் பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாகிஸ்தான் கொள்கையில் தடுமாறும் நரேந்திர மோடி

**பதவியேற்ற பிறகு வெளியுறவுக் கொள்கையை பொறுத்தவரை பிரகாசமான துவக்கத்தை கொண்டிருந்த போதிலும் மோடியின் பாகிஸ்தான் தொடர்பான கொள்கை குழப்பத்திற்குள்ளாகி இருக்கிறது. வெளியுறவுக்கொள்கை நிபுணர்கள், ஆய்வாளர்கள் மாத்திரமல்ல, மோடியின் சொந்த அமைச்சர்கள்கூட அவரது பாகிஸ்தான் கொள்கை என்ன என்பதை புரிந்துக்கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள்**

டில்லி டயரி

எம்.பி.வித்தியாதரன்



பிரதமர் நரேந்திர மோடி பதவியேற்று இன்னமும் இருமாதங்களுக்கும் குறைவான காலத்திற்குள் ஒருவருடம் பூர்த்தியாகப்போகிறது. 13 வருடங்களாக குஜராத் மாநிலத்தில் முதலமைச்சராக பதவி வகித்த மோடியின் செயல்திறனால் கவரப்பட்ட மக்கள், அதுவும் குறிப்பாக இந்திய வாக்காளர்களில் 50 சதவீதத்துக்கும் அதிகமானவர்களாக இருக்கும் இளைஞர் யுவதிகள் அவரை அமோகமாக ஆதரித்து நாட்டின் பிரதமராக்கினார்கள். அவரின் தலைமையின் கீழ் குஜராத் சகல துறைகளிலும் பிரமிக்கத்தக்க அபிவிருத்தியைக் கண்டது. அவரது அரசாங்கம் துரிதமாகத் தீர்மானங்களை எடுப்பதிலும் அதிகாரிகளின் கெடுபிடிகளை அகற்றுவதிலும் பெயர்பெற்று விளங்கியது. வர்த்தகத்துறையினர் தொடர்பில் மோடி கடைப்பிடித்த சினேகபூர்வமான அணுகுமுறை தொழிலதிபர்களை குஜராத்தை நோக்கி கவர்ந்தது. மோடி வர்ணித்ததைப் போன்று துடிப்புடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிய குஜராத் இளைஞர்களைக் கவர்ந்தது. விரைவான அபிவிருத்தியையும் அமைப்பு முறையில் மாற்றத்தையும் காண அவர்கள் விரும்பினார்கள். அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதாக மோடி வாக்குறுதியளித்தார். அதனால் இளைஞர் யுவதிகள் அலை அலையாகத் திரண்டு அவருக்கு வாக்களித்தார்கள். மோடிக்கு இருந்த மக்கள் ஆதரவு காரணமாக பாரதிய ஜனதாவுக்கு பாராளுமன்றத்தின் லோக்சபாவில் அறுதிப் பெரும்பான்மை ஆசனங்கள் கிடைத்தன. அதன் விளைவாக மூன்று தசாப்தகால கூட்டரசாங்க மற்றும் விட்டுக்கொடுப்பு அரசியல் யுகம் முடிவுக்கு வந்தது.

மோடிக்கான மக்களின் வாக்குகள் குஜராத்தில் அவரின் நல்லாட்சிக்காக அளிக்கப்பட்டவை என்று தான் சொல்லவேண்டும். டில்லியிலும் அவர் மாற்றத்தை ஏற்படுத்தி ஊழலற்ற நல்லாட்சியையும் துரிதமான பொருளாதார வளர்ச்சியையும் கொண்டுவருவார் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், சர்வதேச உறவுகளில் பெருமளவு அனுபவத்தைக் கொண்டிராத மோடி வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்தவரை சிறப்பான முறையில் செயற்பாட்டை வெளிக்காட்டுவார் என்று பலர் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

தனது பதவியேற்பு வைபவத்துக்கு பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கத்தின் (சார்க்) உறுப்பு நாடுகளின் தலைவர்களை அழைத்து மோடி பெரும் அமர்க்களப்படுத்தி விட்டார். பாகிஸ்தானிய பிரதமர் நவாஸ் ஷெரீப் போன்று அனுபவமிக்க தலைவர்களையே அவர் விஞ்சிவிட்டார். அதற்குப் பிறகு அவர் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், சீன ஜனாதிபதி சி ஜின்பிங், மற்றும் அவுஸ்திரேலிய, பிரிட்டிஷ் பிரதமர்கள் உட்பட அனேகமான சகல முக்கியமான நாடுகளின் தலைவர்களுடனும் உறவுகளை மேம்படுத்துவதில் பெரு வெற்றி கண்டார்.

ஆனால், வெளியுறவைப் பொறுத்தவரை இத்தகையதொரு பிரகாசமான ஆரம்பத்தைக் கொண்டிருந்த போதிலும், பாகிஸ்தான் தொடர்பான மோடியின் கொள்கை குழப்பத்துக்குள்ளாகியிருக்கிறது என்றே தோன்றுகிறது. இந்தப் பாதையில் அவர் இன்னமும் தனது சிந்தனையைத் தெளிவுபடுத்திக் கொள்ளவில்லை என்றே தெரிகிறது. அவர் குழப்பமடைந்தவராக இருக்கிறார். வெளியுறவுக் கொள்கை நிபுணர்கள், ஆய்வாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் மாத்திரம் அல்ல, மோடியின் சொந்த அமைச்சர்கள் கூட, அவரது பாகிஸ்தான் கொள்கை என்னவென்பதை புரிந்துகொள்ள முடியாதவர்களாக குழம்பிப் போயிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அண்மையில் டில்லியில் நடைபெற்ற பாகிஸ்தான் தேசிய தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளுமாறு இந்திய வெளியுறவு இணையமைச்சர் ஓய்வுபெற்ற ஜெனரல் வி.கே.சிங்கை கேட்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் அரசாங்கத் தலைவர்கள் மத்தியிலான குழப்பநிலையை அம்பலப்படுத்தியிருக்கிறது. பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் அப்துல் பாஸித்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய தினக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளுமாறு ஜெனரல் சிங்கைக் கேட்பதற்கான தீர்மானம் உயர்மட்டத்திலேயே எடுக்கப்பட்டது.

பணிக்கப்பட்டதற்கு இணங்க ஜெனரல் சிங் மார்ச் 27 ஆம் திகதி வைபவத்தில் கலந்துகொண்டார். பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரினால் அழைக்கப்பட்டிருந்தவர்களில் ஹூரியத் மகாநாட்டு இயக்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஜம்மு-காஷ்மீர் பிரிவினைவாதத் தலைவர்களும் உள்ளடங்கியிருந்தனர். அத்தகையவர்கள் பங்கேற்கும் வைபவத்தில் தானும் சமுகமளித்தது ஜெனரல் சிங்கிற்கு பெரும் அசௌகரியத்தைக் கொடுத்தது என்பது வெளிப்படையானது. இந்திய இராணுவத்தின் தலைவர்கள் எப்போதுமே பாகிஸ்தான் பற்றி கடுமையான அபிப்பிராயத்தைக் கொண்டிருப்பவர்கள். ஜம்மு-



இணையமைச்சர் ஜெனரல் வி.கே.சிங்

காஷ்மீரில் உள்ள தலைவர்களை பாகிஸ்தான் ஆதரிக்கிறது. தீவிரவாதிகளைப் பயன்படுத்தி ஜம்மு-காஷ்மீரில் பாகிஸ்தான் இந்தியாவுக்கு எதிராக மறைமுக யுத்தமொன்றை நடத்திக் கொண்டிருக்கிறது. இதற்கு எதிரான நடவடிக்கைகளுக்காக அந்த மாநிலத்தில் இந்திய இராணுவம் பெரும் எண்ணிக்கையில் நிலைவைக்கப்பட்டிருக்கிறது.

டில்லியில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஹூரியத் தலைவர்களைச் சந்தித்தார் என்பதற்காகவே இஸ்லாமாபாத்தில் கடந்த வருடம் நடைபெறவிருந்த இந்திய, பாகிஸ்தானிய வெளியுறவு செயலாளர்கள் மட்டப் பேச்சுவார்த்தைகளை மோடி அரசாங்கம் ரத்துச் செய்தது இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியதாகும். தடைப்பட்டுப் போயிருந்த வெளியுறவுச் செயலாளர்கள் மட்டத்திலான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் பதவியேற்பு வைபவத்திற்காக டில்லிவந்த நவாஷ் ஷெரீப்புக்கும் மோடிக்கும் இடையே இடம்பெற்ற சந்திப்பையடுத்து உறவுகளில் ஏற்பட்ட மேம்பாட்டின் விளைவானதே. அந்தத் தீர்மானம் அந்த நேரத்தில் பரவலாகப் பாராட்டப்பட்டது இயல்பானதே. ஜம்மு-காஷ்மீரில் எல்லைப் புறங்களில் இடம்பெறுகின்ற அத்துமீறல்களுக்காக பாகிஸ்தானுக்கு எதிராக கடுமையான நிலைப்பாடொன்றை எடுத்திருந்த மோடி பதவிக்குவந்த உடனே பாகிஸ்தானுடனான உறவுகளை மேம்படுத்துவதில் காட்டிய அக்கறை ஒரு மறுதலையான பேச்சாகவே பலருக்கும் தென்பட்டது.

உறவுகள் மேம்பட்டுக்கொண்டு வந்த போது, கடந்த ஆகஸ்டில் இஸ்லாமாபாத் பேச்சுவார்த்தைகளை (அதுவும் ஹூரியத் தலைவர்களுடனான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரின் சந்திப்பைக் காரணம் காட்டி) ரத்துச் செய்து மோடி இன்னொரு மறுதலையான நடவடிக்கையை எடுத்தார். இஸ்லாமாபாத் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாக ஹூரியத் தலைவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டு அறியத் தருமாறு தன்னிடம் இஸ்லாமாபாத்திலிருந்து கேட்கப்பட்டதனாலேயே பாகிஸ்தான் தூதரகத்தில் அவர்களுடனான சந்திப்புக்கு ஏற்பாட்டைச் செய்ததாக உயர்ஸ்தானிகர் அப்துல் பாஸித் அப்போது கூறியிருந்தார்.

சிறிது காலத்துக்கு மோடி தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார். நேபாளத்தலைநகர் காத்மாண்டுவில் நடைபெற்ற சார்க் உச்சிமகாநாட்டின் முதல் நாளன்று மேடையில் நவாஸ், ஷெரிபை மோடி அலட்சியம் செய்தார். ஆனால், பின்னர் 'சார்க்' தலைவர்கள் உல்லாசப் பயணம் மேற்கொண்ட இடத்தில் ஷெரீபுடன் அவர் கைகுலுக்கி மகிழ்ந்தார்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கு முன்னதாக பெப்ரவரியில் மோடி தொலைபேசி மூலம் ஷெரீபுடன் தொடர்பு கொண்டு அவரின் நாட்டு அணி சிறப்பாக விளையாட மோடி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான கிரிக்கெட் இராஜதந்திரம் நன்கு பிரபல்யம் வாய்ந்தது. முன்னர் ஸியா உல் ஹக், பெர்வெஸ் முஷாரப் போன்ற தலைவர்கள் கூட இந்த இராஜதந்திரத்தின் ஒரு அங்கமாக டில்லிக்கு விஜயம் மேற்கொண்டார்கள். அதேபோன்றே நவாஸ் ஷெரீபும் கூட வந்திருந்தார்.

நடத்திய ஜெய்சங்கர், நவாஸ் ஷெரீபையும் சந்தித்து மோடியின் கடிதத்தை கையளித்தார். சார்க் சந்திப்பின் ஒரு அக்கமாக இவ்வருட பிற்பகுதியில் இஸ்லாமாபாத்துக்கு விஜயம் செய்வதற்கு கொண்டிருக்கும் விருப்பத்தை அக்கடிதத்தில் இந்தியப் பிரதமர் வெளிப்படுத்தியிருந்தார்.

இத்தகையதொரு பின்புலத்திலே, ஹூரியத் தலைவர்கள் பங்கேற்ற வைபவத்தில் தானும் கலந்துகொள்ள வேண்டியேற்பட்டதால் ஜெனரல் சிங்கிற்கு அசௌகரியம் ஏற்பட்டது இயல்பானதே. மேலும், பாகிஸ்தானுக்கு பல சலுகைகள் காட்டப்படுவதையும் பிரிவினைவாதத் தலைவர்கள் பங்கேற்ற வைபவங்களில் கலந்துகொள்வது குறித்தும் இந்தியாவில் சமூக ஊடகங்கள் கடுமையான கண்டனங்களைத் தெரிவித்த வண்ணமிருக்கின்றன. பாகிஸ்தான் தொடர்பில் மன்மோகன்சிங் தலைமையிலான முன்னைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் கடைப்பிடித்த மென்மையான கொள்கையை நெஞ்சுரமற்ற அணுகுமுறை என்று கடுமையாகக் கண்டனம்



இன்று மோடியின் வெளியுறவுக்கொள்கை மன்மோகன் சிங்கின் கொள்கையிலிருந்து பெரிதாக வேறுபட்டதாக தெரியவில்லை. பராக் ஒபாமாவுடனான சந்திப்புக்களுக்கு பிறகே பாகிஸ்தானை நோக்கி நல்லிணக்க சமிக்ஞைகளை மோடி காட்ட ஆரம்பித்தார்.

கிரிக்கெட்டை மையமாகக் கொண்ட இந்த நயப்பண்பு வெளிக்காட்டலுக்குப் பிறகு மோடி தனது புதிய வெளியுறவுச் செயலாளர் எஸ். ஜெய்சங்கரை பாகிஸ்தானுக்கு அனுப்பினார். வெளியுறவுச் செயலாளரின் 'சார்க்' யாத்திரை என்ற பெயரிலேயே இவ்வாறு செய்யப்பட்டது. டாக்காவுக்கு விஜயம் மேற்கொண்ட பிறகு ஜெய்சங்கர் இஸ்லாமாபாத்துக்குச் சென்றார். அதற்கு முன்னதாக அவர் பூட்டானுக்குச் சென்றிருந்தார். இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளருடன் பேச்சுவார்த்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தவர் மோடி என்பது குறிப்பிடத் தக்கது.

பாகிஸ்தான் தேசியதின வைபவத் துக்கு பெருவாரியான ஊடகவிய லாளர்கள் வந்திருந்த நிலையில், அதில் கலந்துகொள்வதை நியாயப்ப டுத்துவதில் தனக்கு பெரும் சிக்கல் ஏற்படப்போகின்றது என்பது ஜென ரல் சிங்கிற்குத் தெரியும். இராப்போ சன விருந்தில் பங்கேற்காமல் அவர் 15 நிமிடங்களில் வைபவத்திலிருந்து வெளியே சென்றுவிட்டார். பிரிவினை வாதத் தலைவர்கள் பிரசன்னமாகியி ருந்த வைபவத்தில் ஜெனரல் சிங் கலந்துகொண்டதைக் காண்பிக்கும் படங்கள் ஊடகங்களிலும் இணையத் தளங்களிலும் வெளியிடப்பட்டன. அத்தகைய வைபவமொன்றுக்கு பிரதி நிதியை அனுப்பியதற்காக இந்திய அரசாங்கத்தை ஊடகங்கள் கடுமை யாகச்சாடின.

தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஜெனரல் சிங் முயற்சித்தார். கண்ட னங்கள் வலுவடையவே சிங் 'தனது கடமையைச் செய்வதற்காகவே' அந்த வைபவத்தில் கலந்துகொண்டதாக ருவிட்டரில் பதிவு செய்தார். அரசாங் கத்தின் பிரதிநிதியாக கலந்துகொள் ளுமாறே தன்னிடம் கேட்கப்பட்டதா கவும் வேறு தெரிவு ஏதாவது இருந்தி ருந்தால் அதில் கலந்து கொள்ளாமல் இருந்திருக்கலாம் என்று அவர் தெளிவுபடுத்தினார்.


குழப்ப நிலைக்குள்ளாகியிருக்கும் ஜெனரல் சிங் தனது பதவியை இராஜி னாமா செய்யக்கூடும் என்று வதந்தி கள் வேகமாகப் பரவின. ஆனால், அவ்வாறு எதுவுமே இடம்பெற வில்லை. ஜெனரல் சிங் பிரதமரின் அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டு, ருவிட்டர் பதிவுக்காக கண்டிக்கப்பட் டார். இதையடுத்து அவர் அடக்கவொ டுக்கமாக சரணடைந்துவிட்டார். மீண் டும் ருவிட்டருக்கு வந்து அரசாங்க த்தை நியாயப்படுத்தும் வகையிலான கருத்தைப் பதிவு செய்தார்.

செய்தியாளர் மகாநாடொன்றில் உரையாற்றிய ஜெனரல் சிங் 'கடமை' 'வெறுப்பு' என்ற பதங்களைப் பாவித்து ருவிட்டரில் தான் வெளி யிட்ட பதிவுகள் ஊடகங்களில் ஒரு பிரிவினரை இலக்காகக் கொண்ட வையே தவிர, பாகிஸ்தான் உயர்ஸ்தா னிகரின் இரவு விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளுமாறு அரசாங்கம் தன்னைக் கேட்டுக்கொண்டதற்கும் அப்பதிவுகளுக்கும் அந்தவகையில் சம்பந்தமில்லை என்றும் கூறினார். '2014 மேயில் ஒரு அமைச்சராக பதவியேற்றபோது எனது கடமைகள் எவை, பொறுப்புகள் எவை என்பதை நான் அறிந்தே இருந்தேன். நான் நாட் டுக்கு விசுவாசமான ஒரு படைவீர னாகவும் இருந்திருக்கிறேன். பாகிஸ் தான் தேசியதின வைபவத்தில் கலந்துகொள்வதென்பது ஒரு சம்பிர தாய பூர்வமானதும் இராஜதந்திர ரீதி யானதுமான நடைமுறையாகும். கடந்த காலத்திலும் ஒவ்வொரு வெளி யுறவு இணையமைச்சரும் இந்த நடை முறையைப் பின்பற்றியிருக்கிறார்கள். தற்போது நடந்திருப்பது முன்னைய வருடங்களில் நடந்தவற்றையும் விட எந்தவிதத்திலும் வித்தியாசமான தல்ல' என்று ஜெனரல் சிங் சொன் னார்.

முன்னாள் இராணுவத்தளபதியொ ருவர் பாகிஸ்தான் தேசிய தின இரவு விருந்துபசாரத்தில் பங்குபற்றினார் என்று பார்க்கிறார்களே தவிர, அவர் தற்போதைய அரசாங்கத்தில் இணை யமைச்சராக பதவி வகிக்கிறார் என் பதை மறந்துவிடுகிறார்கள். இதுவே ஒரேயொரு வித்தியாசம். எனது கட்சி யும் அரசாங்கமும் பிரச்சினையை விளங்கிக்கொண்டிருக்கின்ற போதி லும்கூட, ஊடகங்களில் குறிப்பிட்ட சிலபிரிவினர் பிரச்சினையை அளவுக்கு அதிகமாக மிகைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இராணுவம் உற்சாகத்தையிழந்துவிட்டது என்று சிலர் கூறினார்கள். ஆனால், அதே இராணுவத்தின் தளபதியாக இருந்த வன் என்ற முறையில் எமது படைவீ ரர்களைப் பற்றி நான் நன்கு அறி வேன். எனது பிரதமரையும் அரசாங் கத்தையும் ஊடகங்களில் குறிப்பிட்ட சில பிரிவினர் தாக்கிய விதம் எனக்கு அதிர்ச்சியைத் தந்தது. எனது கடமை பற்றியும் பொறுப்பு பற்றியும் நான் ருவிட்டரில் செய்த பதிவுகளும் திரிபு படுத்தப்பட்டே செய்திகளில் வெளி யிடப்பட்டுள்ளன என்று அவர் கூறி னார்.

நான் ருவிட்டரில் செய்த பதிவுகள் இரவு விருந்துபசாரத்தில் எனது பிரசன்னம் குறித்து கேள்வி கிளப்பிய ஊடகங்களை நோக்கியவையே. அதை தெளிவுபடுத்த வேண்டியது முக்கியம் என்று நான் உணருகிறேன். எனது அரசாங்கத்தின் மீது குறிப்பாக எனது பிரதமர் மீது நான் பற்றுறுதி கொண்டவனாக இருக்கிறேன். நான் எனது கட்சியின் விசுவாசமான ஒரு உறுப்பினர். இந்தியாவின் நலன்க ளுக்காகப் பாடுபடுவதில் எனது கட்சி யுடன் நான் ஒன்றித்தே நிற்கிறேன். தேசம் தான் முதன்மையானது என் றும் ஜெனரல் சிங் கூறினார்.

எவ்வாறெனினும் இந்த 'நாடகங் கள்' எல்லாம் பாகிஸ்தான் தொடர்பி லான மோடியின் கொள்கையை அம்


சிவ்சங்கர் மேனன்

**மோடியின் பாகிஸ்தான் கொள்கைக்கு மன்மோகன் சிங் ஆட்சிக்காலத்தில் வெளியுறவுச் செயலாளராகவும் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும் இருந்த சிவ்சங்கர் மேனனிடமிருந்து ஆதரவு கிடைத்திருக்கிறது. மன்மோகன் சிங்கின் கொள்கைகளே முன்னரை விடவும் கூடுதல் சுறுசுறுப்புடன் பின்பற்றப்படுகின்றன என்கிறார் மேனன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலப்படுத்திவிட்டன. இன்று மோடியின் வெளியுறவுக் கொள்கை கலாநிதி மன்மோகன்சிங்கின் கொள்கையிலிருந்து பெரிதாக வேறுபட்டதாகத் தெரியவில்லை. அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுடனான மோடியின் சந்திப்புகளுக்குப் பிறகே இந்த மாற்றம் ஏற்படத் தொடங்கியது. கடந்த வருடம் செப்டெம்பரில் மோடி வாஷிங்டனில் அருமையான சந்திப்பை நடத்தினார். அப்போது அமெரிக்காவில் இந்தியத் தூதுவராக ஜெய்சங்கர் தான் பதவி வகித்தார். இந்திய குடியரசு தின கொண்டாட்டங்களில் (ஜனவரி 26) பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வதற்கு ஒபாமாவை இணங்க வைத்ததில் ஜெய்சங்கர் ஒரு வித இராஜதந்திரச் 'சதிப்புரட்சி' யையே நிகழ்த்திக் காட்டிவிட்டார் என்று இராஜதந்திர வட்டாரங்களில் பேசப்பட்டது. அமெரிக்க ஜனாதிபதியொருவர் இந்திய குடியரசு தின கொண்டாட்டங்களில் பங்கேற்றது இதுவே முதற் தடவையாகும்.

மோடியுடனான பேச்சுவார்த்தைகளின் போது ஒபாமா, பாகிஸ்தானுடன் இந்தியா மீண்டும் ஊடாட்டங்களைச் செய்ய வேண்டும் என்று கடுமையாக வலியுறுத்தியதாகக் கூறப்படுகிறது. ஒபாமா முன்வைத்த காரணங்கள் மீண்டும் பாகிஸ்தானுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டிய தேவை தொடர்பில் மோடிக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியதாகத் தெரியவருகிறது. அதற்குப் பிறகு, மோடியின் நல்லிணக்க சமிக்ஞைகள் ஆரம்பமாகின. நவாஸ் ஷெரீபுடன் தொலைபேசியில் பேசியது மாத்திரமல்ல, ஜெய்சங்கர் ஊடாக அவருக்கு கடிதத்தையும் கையளித்தார். உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கவிருந்த வேளையைத் தவிர, மற்றும்படி எந்தச் சந்தர்ப்பத்திலும் டில்லியில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஹூரியத் பிரிவினைவாத தலைவர்களைச் சந்திக்கலாம் என்று கடந்த மாதம் பாகிஸ்தானுக்கு இந்தியா தெரியப்படுத்தியது. முதலில் ஹூரியத் தலைவர்களுடனான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரின் சந்திப்பைக் காரணம் காட்டியே கடந்த ஆகஸ்டில் பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தைகளை மோடி ரத்துச் செய்தார். இப்போது அவர் தனது நிலைப்பாட்டை முற்று முழுதாக மாற்றியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இந்தியாவின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற வெளியுறவுச் செயலாளர்கள் மட்டப் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு உடனடியாக பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஹூரியத்தின் சயீத் அலி ஷா கீலானியை சந்தித்தார். அடுத்து அவர் மார்ச் பிற்பகுதியில் மிர்வாயிஸ் உமர் பாரூக் தலைமையிலான ஹூரியத் தூதுக் குழுவைச் சந்தித்தார்.

இந்த மாற்றங்கள் எல்லாம் மக்களின் கண்களுக்கு மோடியின் பாகிஸ்தான் கொள்கையை ஒரு கேலிக்கூத்தாகவே தென்பட வைத்தன. ஏனைய நாடுகளுடனான உறவுகளை தெளிவான சிந்தனையுடன் கையாளுகின்ற மோடி, பாகிஸ்தான் விவகாரத்தில் செய்வதறியாது தடுமாறுகிறார் போலத் தெரிகிறது. கலாநிதி மன்மோகன்சிங் விட்டுச்சென்ற தடுமாற்றமான பாகிஸ்தான் கொள்கையை திருத்தி சரியான முறையில் மோடி கையாளுவார் என்ற எதிர்பார்ப்புகள் அவர் பிரதமராகப் பதவியேற்ற போது இருந்தன. ஆனால், மோடி அதுவிடயத்தில் தோல்விகண்டுவிட்டார் போன்றே தெரிகிறது. முன்னைய காங்கிரஸ் அரசாங்கத்தைப் போன்றே, தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கமும் பாகிஸ்தான் விடயத்தில் எந்தவொரு உருப்படியான தந்திரோபாயமுமின்றி, குறிக்கோளில்லாமல் சென்று கொண்டிருக்கின்றது போலவே தோன்றுகிறது.


பாகிஸ்தானுடன் விவகாரங்களைக் கையாளுவதென்பது சுலபமானதோ அல்லது ஏனைய நாடுகளுடன் ஒளிவு மறைவின்றிச் செயற்படுவதைப் போன்றதோ அல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். மக்களினால் தெரிவு செய்யப்பட்ட சிவிலியன் அரசாங்கத்தினால் அல்ல, இராணுவத்தினாலும் ஐ.எஸ்.ஐ.போன்ற அதன் புலனாய்வு அமைப்புகளினாலுமே பாகிஸ்தான் கட்டுப்படுத்தப்படுகிறது என்பது உலகறிந்த விடயம். மோடியின் பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொள்வதற்காக டில்லி வருவதற்கு முன்னதாக நவாஸ் ஷெரீப் இராணுவத்தின் சம்மதத்தைப் பெற வேண்டியிருந்தது. அதனால், ஒபாமா, புட்டின் மற்றும் சி ஜின் பிங் ஆகியோருடனான விவகாரங்களைப் போலன்றி, நவாஸ் ஷெரீபுடன் தனிப்பட்ட முறையிலான உறவை வளர்த்துக்கொள்வது எந்தவிதத்திலும் உதவப் போவதில்லை.

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் காஷ்மீர் பிரிவினைவாதத் தலைவர்களைச் சந்திக்க இந்தியா அனுமதிக்கிறது. ஆனால், அதேபோன்று இந்தியாவை பாகிஸ்தான் அனுமதிக்குமா? பலூசிஸ்தானில் உள்ள பிரிவினைவாதிகளையோ அல்லது ஷியா முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கில்கிற்- பால்ரிஸ்தான் பிராந்தியத்தின் ஆர்ப்பாட்டத் தலைவர்களையோ எந்தவொரு இந்திய அதிகாரியும் சந்திப்பதற்கு பாகிஸ்தான் அனுமதிக்குமா என்று இந்தியாவில் ஆய்வாளர்கள் கேட்கிறார்கள். ஆனால், மோடியின் பாகிஸ்தான் கொள்கைக்கு மன்மோகன் சிங் அரசாங்கக் காலத்தில் வெளியுறவுச் செயலாளராகவும் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும் கடமையாற்றிய சிவ்சங்கர் மேனனிடமிருந்து ஆதரவு கிடைத்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இந்தியாவின் நிலைப்பாட்டை கூடுதல் விசையாற்றலுடன் முனைப்புறுத்த மோடியினால் இயலுமாக இருந்திருக்கிறது என்று மேனன் கூறுகிறார். பாகிஸ்தானுடன் விவகாரங்களைக் கையாளுவதில் 'கூர்மதியையும் ஆக்கத்திறனையும் மோடியின் அரசாங்கம் காண்பித்திருக்கிறது' என்று கூறியிருக்கும் மேனன், அமெரிக்கா தொடர்பில் மோடி கடைப்பிடிக்கும் கொள்கைகளை வெகுவாகப் பாராட்டியிருக்கிறார். கலாநிதி மன்மோகன் சிங்கின் கொள்கைகளே முன்னரைக் காட்டிலும் கூடுதல் சுறுசுறுப்புடன் தொடரப்படுகின்றன என்கிறார் மேனன். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்ஜெட் வாசகமே விவாதமானது

## சென்னை மெயில்



முத்தையா காசிநாதன்

பட்ஜெட் என்றால் பகட்டான திட்டங்கள் இருக்கும். அது பற்றிய அலசல் அவையில் நடக்கும். இல்லையென்றால் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி பற்றி விரிவான விவாதங்கள் நடக்கும். பட்ஜெட் நாட்டிற்கு வளர்ச்சித் திட்டங்களுக்கு வழி காட்டியா, ஏழைகளுக்கு வரப்பிரசாதமா என்றெல்லாம் வாதப் பிரதிவாதங்கள் அனல் பறக்க அரங்கேறும். ஆனால் இந்தமுறை இவற்றில் எது பற்றியும் இல்லாமல் பட்ஜெட்டில் இடம்பெற்றிருந்த வாசகங்கள் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது. அதை முன்வைத்து ஏற்கனவே தி.மு.க. தலைவர் கருணாநிதி மார்ச் 29ஆம் திகதியன்று தமிழக அரசின் சார்பில் வைக்கப்படும் நிதி நிலை அறிக்கை குற்றம் புரிந்தவர் என்று நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்ட ஒருவருடைய வழிகாட்டுதலின் படி தயாரிக்கப்படலாமா?. ஜெயலலிதாவின் வக்கீலே உச்சநீதிமன்றத்தில் ஒப்புக்கொண்ட நிபந்தனைகளுக்கு முற்றிலும் மாறாக நடக்க அனுமதிக்கப்பட்டிருப்பது முறைதானா? என்று ஆவேசமாக கேள்வி எழுப்பியிருக்கிறார். பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸோ ஒரு படி மேலே போய் பட்ஜெட் ரகசியங்களை சிறைத் தண்டனை பெற்றவரிடம் பகிர்ந்து கொண்ட முதலமைச்சர் அவர் எடுத்த பதவிப்பிரமாணத்தை மீறி விட்டார். எனவே பன்னீர்செல்வம் முதலமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமா செய்ய வேண்டும் என்று தடாலடியாக கோரிக்கை வைத்திருக்கிறார்.

அப்படி என்னதான் முதலமைச்சர் பன்னீர்செல்வம் தாக்கல் செய்த பட்ஜெட்டில் சொல்லிவிட்டார்? தமிழக மக்களுக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்து தியாக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்த நிதிநிலை அறிக்கையின் ஒவ்வொரு சொல்லும் அதற்கு அடிப்படையாக ஒவ்வொரு சிந்தனையும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாசகம்தான் தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் சட்டமன்றத்தில் தாக்கல் செய்த 2015-16 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையினை அலங்கரித்த வாசகங்கள். இதற்குத்தான் இப்படி போர்க்குரல் கிளம்பியுள்ளது. போதாக்குறைக்கு தமிழக அரசின் செய்தித் துறையின் இணையத் தளத்தில் இன்னும் ஜெயலலிதாதான் தமிழக முதல்வர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது எதிர்க்கட்சிகளுக்கு மேலும் டென்ஷனை ஏற்படுத்தியிருக்கிறது.



ஆனால் அ.தி.மு.க. தரப்பில் இது பற்றி எந்தப் பதிலும் இல்லை. ஏன் மாநில ஆளுநரே இது பற்றியெல்லாம் இதுவரை வாய் திறக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால் அவர் பட்ஜெட்டிற்கு முன்பு வாசித்த ஆளுநர் உரையில் திருவரங்கம் சட்டமன்றத் தேர்தலில் பெற்ற வெற்றியைப் புகழ்ந்தும், ஜெயலலிதாவின் நிர்வாகத் திறமையைப் பாராட்டியும் பேசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அப்போதே இது பற்றி எதிர்க்கட்சிகள் கண்டனக் குரல் எழுப்பின. ஆனால் எதிர்க்கட்சி எம்பி. ஒருவரோ, ஜெயலலிதாவிற்கு பாராட்டு மழை தமிழகத்தில் மட்டும் நடக்கவில்லை. டில்லியிலும் நிலைமை அப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தான். பாராளுமன்றத்திலேயே மத்திய மந்திரிகள் அப்படித்தான் பேசுகிறார்கள். ரயில்வேதுறை அமைச்சர் சுரேஸ் பிரபு ஜெயலலிதாவை புகழுக்குரிய தலைவர் என்கிறார். இன்னொரு மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் மாண்புமிகு அம்மா என்கிறார். இவர்கள் எல்லாம் இதே மாதிரி ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனை பெற்ற ஹரியானா முன்னாள் முதல்வர் ஓம் பிரகாஷ் சவுதாலாவை இப்படி அழைப்பார்களா என்பதுதான் என் கேள்வி என்கிறார். இப்படி பட்ஜெட் வாசகங்கள் பற்றிய சர்ச்சையில் தொடங்கிய சட்டமன்றக் கூட்டத் தொடர் இந்த முறை குறுகிய நாட்களுக்கே நடந்தது. ஆனால் இதில் மானியக் கோரிக்கைகள் பற்றிய விவாதங்கள் இடம்பெறவில்லை. ஒருவேளை அந்த விவாதங்கள் இடம்பெறும் விதத்தில் சட்டமன்றக் கூட்டத்தொடர் நீடிக்கப்படுமா என்ற வினாவும் தலைமைச் செயலக வட்டாரத்தில் விடை கிடைக்காமல் சுற்றி வருகிறது. பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் நாளே தி.மு.க. வெளிநடப்புச் செய்தது. அது மட்டுமின்றி தங்களின் இடைநிறுத்தத்தை நீக்கி சட்டமன்றத்திற்குள் அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து பிரதான எதிர்க்கட்சியான தே.மு.தி.க.வின் எம்.எல்.ஏ.க்கள் தர்ணா செய்து கொண்டிருந்தார்கள். தலைமைச் செயலக வளாகத்தில் தர்ணாவில் ஈடுபட்ட அவர்களை தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் ஸ்டாலின் உள்ளிட்ட தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் சென்று சந்தித்து, அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

## அ.தி.மு.க.வுடன் கைகோர்த்த தி.மு.க.!

பட்ஜெட் தாக்கல் செய்யும் தார்மீக உரிமையை இந்த அரசு இழந்துவிட்டது என்று கூறி வெளிநடப்புடன் தி.மு.க. சட்டமன்றக்கூட்டத் தொடரை அணுகினாலும், காவேரிப் பிரச்சினையில் அ.தி.மு.க.வுடன் இணைந்தே அக்கட்சி செயல்பட்டது. இரு கட்சிகளும் இணைந்து ஒரு பிரச்சினையில் செயல்பட்ட காட்சி அத்திப் பூ பூத்தது போல் தமிழக அரசியலில் தோன்றியது. காவேரியின் குறுக்கே கர்நாடக அரசு மேகதாது அணை கட்டுகிறது. இதற்காக தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு முறையீடு செய்யப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்திலும் மனு போட்டு கர்நாடக அரசின் அணை கட்டும் முயற்சிக்குத் தடை விதிக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் கர்நாடக மாநில அரசு தாக்கல் செய்த நிதி நிலை அறிக்கையில் மேகதாது அணைகட்டுவது பற்றி ஆய்வு மேற்கொள்ள 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுதான் இப்போதைய தமிழக- கர்நாடக சர்ச்சைக்கு காரணம். உடனே தமிழகக் கட்சிகள், விவசாயச் சங்கங்கள் எல்லாம் ஆங்காங்கே போராட்டங்கள் நடத்தின. அனைத்து விவசாய சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் பி.ஆர். பாண்டியன் அனைத்துக் கட்சி பந்திற்கு அழைப்பு விடுத்தார். இது பற்றிய விவாதம் சட்டமன்றத்தில் எழுந்தது. அரசின் சார்பில் கர்நாடக அரசு அணைகட்டுவதை மத்திய அரசு தடுக்க வேண்டும் என்று தனியாக ஒரு தீர்மானம் கொண்டு வந்தது. இந்தத் தீர்மானத்தை தி.மு.க.வும் ஆதரித்தது. நீண்ட நாட்களுக்குப் பிறகு இரு கட்சிகளும் ஒரு தீர்மானத்தை சட்டமன்றத்தில் ஆதரித்த சம்பவம் அரங்கேறியது. இதைத் தொடர்ந்து காவேரி விவசாயிகள் கூட்டமைப்பு அறிவித்தபடி மார்ச் 28ஆம் திகதி தமிழகத்தில் கர்நாடகம் அணை கட்டுவதை எதிர்த்து அனைத்துக் கட்சி பந்த் நடைபெற்றது. அதில் அ.தி.மு.க. கலந்து கொள்ள வேண்டும் என்று சட்டமன்றத்தில் தி.மு.க. தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. அது மட்டுமின்றி அதற்கு வசதியாக 28 ஆம் திகதி சட்டமன்றக் கூட்டத் தொடரை தள்ளி வைக்க வேண்டும் என்றும் கேட்டார்கள். முதலில் மறுத்த அரசு பிறகு 28ஆம் திகதி நடைபெறவிருந்த சட்டமன்றக் கூட்டத்தை தள்ளி வைத்தது. அணைகட்டுவதற்கு எதிரான பந்த் வெற்றி பெற்றது என்றே சொல்ல வேண்டும். காவிரி டெல்டா பகுதிகளான தஞ்சை, திருவாரூர், நாகபட்டினம் போன்ற மாவட்டங்களில் பந்த் முழு வெற்றி என்றால் காவிரி நீர் பற்றியே கவலைப்படாத திருநெல்வேலி, மதுரை போன்ற மாவட்டங்களிலும் பந்த் அமோக வெற்றி பெற்றது. ஒட்டு மொத்த தமிழக மக்களும், அணைப் பிரச்சினையில் மத்திய அரசு தமிழகத்தை வஞ்சிக்கிறது என்ற எண்ணம் மேலோங்கி நிற்கிறது என்பதற்குச் சான்றாக அமைந்தது இந்த பந்த்.

## பிரதமரைச் சந்தித்த தமிழக எம்.பி.க்கள்!

எதிர்க்கட்சிகளின் இந்த பந்தால் கிடைத்த பலனை எப்படி நாம் அறுவடை செய்வது என்று பார்த்த ஆளும் அ.தி.மு.க. அனைத்துக் கட்சி எம்.பி.க்களும் பிரதமரைச் சந்தித்து முறையிடுவார்கள் என்று அறிவித்தது. அதன்படி அ.தி.மு.க.வின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் தம்பித்துரை அனைத்து எம்.பி.க்களிடமும் பேசினார். இதில் முக்கியமாக எலியும்- பூனையும் போல் இருக்கும் அ.தி.மு.க., தி.மு.க. எம்.பி.க்கள் பிரதமரை இணைந்து சந்தித்தார்கள். இலங்கைத் தமிழர் பகுதியில் போர் உச்சத்தில் இருந்த போது கூட இப்படி தி.மு.க. எம்.பி.க்களும், அ.தி.மு.க. எம்.பி.க்களும் இணைந்து பிரதமரைச் சந்தித்தது இல்லை. அதே போல் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற பல சந்திப்புகளில் அ.தி.மு.க. எம்.பி.க்கள் தி.மு.க. எம்.பி.க்களுடன் சென்று பிரதமரைச் சந்தித்தது இல்லை. ஆனால் இந்த முறை இரு கட்சி எம்.பி.க்களும் கைகோர்த்துச் சென்று பிரதமர் நரேந்திரமோடியை சந்தித்தது தமிழக அரசியலில் அரிய நிகழ்வு. பிரதமரும், இப்பிரச்சினை குறித்த விவரங்களை சேகரிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன் என்று கூறி வழியனுப்பி வைத்தார்.

பா.ஜ.க.வைப் பொறுத்தமட்டில் கர்நாடகம், தமிழகம் ஆகிய இரு மாநிலங்களில் வெற்றி பெறும் வாய்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புரட்சித்தலைவி அம்மா மீண்டும் முதலமைச்சராக பதவியேற்று தங்களையும் அரசையும் மிகுந்த ஆற்றலுடனும் அர்ப்பணிப்புடனும் வழிநடத்தி மாநிலத்தை புகழின் உச்சிக்கு கொண்டு செல்லும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று முதலமைச்சர் பன்னீர்செல்வம் நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார். பெங்களூர் வழக்கு பாதகமாகவே முடியும் என்று தி.மு.க.வும் சாதகமாகவே முடியும் என்று அ.தி.மு.க.வும் எதிரும் புதிருமான நம்பிக்கையில் இருக்கின்றன.**

உள்ள மாநிலம் கர்நாடகம்தான். அதனால் கர்நாடக மாநிலத்தின் கோரிக்கையைப் புறக்கணித்துவிட்டு தமிழகத்திற்கு உதவிக்கரம் நீட்டுமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. அதனால்தான் 19.2.2013 அன்றே காவிரி இறுதித் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டு விட்டாலும், இன்றுவரை காவிரி மேல்முறையீட்டு வாரியமும் அமைக்கவில்லை. காவிரி ஒழுங்குமுறைக் குழுவும் அமைக்கவில்லை. அ.தி.மு.க. அரசு பிரதமருக்கு கடிதம் மேல் கடிதம் எழுதி வருகிறது. உச்சநீதிமன்றத்திலும் இரு வழக்குகள் போட்டு விட்டது. சட்டமன்றத்திலும் தீர்மானம் போடப்பட்டுவிட்டது. ஆனாலும் இதுவரை இந்தக் குழுக்கள் அமைக்கப்படவில்லை. காவேரியின் இறுதித் தீர்ப்பை அமல்படுத்துவதில் இக்குழுக்கள் அமைக்கப்படவில்லை என்றால் பெரும் சிக்கல் தோரணம் கட்டி நிற்க வாய்ப்பு இருக்கிறது.

## தீர்ப்புக்காகக் காத்திருக்கும் தமிழக அரசியல்!

இந்த அரசியல் அனைத்துமே கர்நாட உயர்நீதிமன்றத்தில் உள்ள சொத்துக் குவிப்பு வழக்கின் மேல்முறையீட்டு தீர்ப்பைப் பொறுத்து அல்லது எதிர்பார்த்து நடந்து கொண்டிருக்கிறது. கர்நாடக நீதிபதி குமாரசாமி ஜெயலலிதாவின் மேல்முறையீட்டு மனுவினை விசாரித்து முடித்து விட்டு தீர்ப்பு எழுதக் காத்திருக்கிறார். இந் நேரம் தீர்ப்பு வெளிவந்திருக்கும். ஆனால் தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்குப் போட்டார். அதில் சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் ஆஜராக பவானி சிங்கை தமிழக அரசு நியமித்தது செல்லாது என்பது தான் அந்த வழக்கு. அது இன்னும் முடிவுக்கு வரவில்லை. அந்த வழக்கு விசாரணை ஒவ்வொரு நீதிபதிகள் அமர்வாக மாறி இப்போது உச்சநீதிமன்ற நீதிபதிகள் மதன்லோகுர், பானுமதி ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. சென்ற 26ஆம் திகதி நடைபெற்ற விசாரணையில் சில கேள்விகளை எழுப்பியுள்ள நீதிபதிகள் மீண்டும் வழக்கை ஏப்ரல் 1ஆம் திகதிக்கு தள்ளி வைத்துள்ளார்கள். உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் கர்நாடாவில் நீதிபதி குமாரசாமி தீர்ப்பு சொல்லாமல் இருக்கிறார். இத்தீர்ப்பு வெளிவந்தால் தமிழக அரசியலில் தெளிவு பிறக்கும். வைகோ, வாசன் ஏன் கம்யூனிஸ்ட் தலைவர்கள் கூட அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா அந்த வழக்கிலிருந்து விடுபட்டுவிட்டால், அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைப்பதே சிறந்த முயற்சியாகவும், தங்கள் கட்சிக்கு வெற்றி வியூகமாகவும் இருக்கும் என்று எண்ணுகிறார்கள். அதனால் தான் தி.மு.க. நேரடியாக அழைப்பு விடுக்கும் போராட்டங்கள் எதிலும் இந்தக் கட்சிகள் பங்கேற்பதில்லை. மாறாக அவர்கள் கூட்டும் கூட்டத்திற்கோ, ஆர்ப்பாட்டத்திற்கோ தி.மு.க. வந்தால் ஏற்றுக் கொள்கிறார்கள். ஒரு வேளை அந்தத் தீர்ப்பு முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவிற்கு பாதகமாக வந்தால், அதன் பிறகு தி.மு.க. ஒப்ஷன் பற்றி யோசித்துக் கொள்ளலாம் என்பதே இந்தக் கட்சிகளின் கணிப்பாக இருக்கிறது.

## நம்பிக்கையின் உச்சத்தில் அ.தி.மு.க.!

ஆனால் அ.தி.மு.க.வைப் பொறுத்தமட்டில் இது பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் எல்லாம் கோயில் பூஜை, தண்ணீர் பந்தல், இளநீர், மோர் என்று மக்களிடம் செல்கிறார்கள். ஜெயலலிதா வழக்கிலிருந்து விடுபட வேண்டும் என்று எண்ணற்ற யாகங்கள், பூஜைகள் நடத்துகிறார்கள். ஆன்மீக ரீதியான இந்த எழுச்சி, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவிற்கு மக்கள் மத்தியில் அனுதாபத்தை ஏற்படுத்தும் விதத்தில் அமைந்திருக்கிறது. அதனால் அ.தி.மு.க. வட்டாரங்களில், பெங்களூர் வழக்கில் எங்கள் அம்மா விடுதலை ஆவார். உடனே அவர் முதலமைச்சராவார். அதன் பிறகு ஆட்சியைக் கலைத்து விட்டு முன்கூட்டியே தேர்தலைச் சந்திப்பார் என்று நம்பிக்கையுடன் சொல்கிறார்கள். தமிழக முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தாக்கல் செய்த நிதி நிலை அறிக்கையிலும் இந்த நம்பிக்கை வெளிப்படுகிறது. அவர் தன் பட்ஜெட் உரையை முடிக்கும் முன்பு, மீண்டும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்று, இந்தப் பேரவைக்கு வந்து நம்மையும் இந்த அரசையும் மிகுந்த ஆற்றலுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் நடத்தி மாநிலத்தை புகழின் உச்சிக்குக் கொண்டு செல்லும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று பறைசாற்றியிருக்கிறார். பெங்களூர் வழக்கு பாதகமாகவே முடியும் என்று தி.மு.க.வும், சாதகமாகவே முடியும் என்று அ.தி.மு.க.வும் நம்பிக்கையில் இருக்கிறார்கள்- நம்பிக்கைதானே வாழ்க்கை என்பது அவர்களின் தாரக மந்திரம்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிப் பக்கம்



கோ.கைலாசநாதன்

# நிழற்பரிணமிப்புகளின் யதார்த்த நிலை

பாணன் யாழை இசைத்து பரிசாகப் பெற்ற 'திடலே' யாழ்ப்பாணம் ஆகும். யாழ்ப்பாண சரித்திரமே இசையுடனேயே ஆரம்பிக்கிறது எனவும் கூறலாம். ஊனக்கண் இல்லாத போதும் ஞானக்கண் பாணனுக்கு இருந்தமையினாலேயே மன்னன் அளவிலா மகிழ்வுற்று உணவுபூர்வமாக அப்பரிசை பாணனுக்கு வழங்கினான்.

கலைகள் தொடர்பாக இன்றைய யாழ்ப்பாணத்தின் நிலை என்ன? கர்நாடக சங்கீத மேதையொருவர் குத்துப்பாடல் பாடவில்லை என்பதற்காக அவரின் இசைக் கச்சேரியை புறக்கணித்த இளைஞர் குழுவொன்று எம்மத்தியிலேயே இன்றும் உலாவருகின்றது. இலத்திரனியல் சாதனங்கள் பல்கிப்பெருகி மூலை முடுக்கெல்லாவற்றையும் நிரப்பியுள்ளன. இதன்வழி வயிற் றைக் குமட்டும் நிறங்களுடன் 'பனர்'கள் வீதிக்கு குறுக்கே யும் மேடையிலும் கோலோச்சு கின்றன. 'இரசனை' என்பது 'மனநோய்' பிடித்ததொன்றாகவே கொள்ளத்தக்க வகையில் யாவும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. ஆசிரியர்களிலிருந்து மாணவர்கள் வரை எழுத்துப்பிழைகள் தாராளமாகவே மலிந்துவிட்டன. எழுதுவதற்கு எல்லோருக்குமே சோம்பலாக இருப்பதால் நிழற்பிரதிகள் தாராளமாகின்றன. இதனால் யாவுமே யதார்த்தத்தை விட்டு நிழலாக பரிணமித்துமுள்ளன. ஒரு காதிற் தோடும் இடுப்பைவிட்டு அடிக்கடி இறங்கும் நீளக்காற்சட்டையுடன் இளைஞனும் காலுக்கு காலுறையைப் போட்டால் எப்படியிருக்குமோ அவ்வாறே தனது உடலுக்கு உடல் உறையை போட்டு யுவதியும் நகர உலாவருகின்றனர். இவர்களின் இரசனை 'கொலை வெறியை' விட வேறு எதுவாக இருக்க முடியும். Pliopithecus இல் தொடங்கி 13 படிநிலைகளின் பின்பே நவீன மனிதன் (Modern Man) விருத்தியடைந்திருக்கிறான் என ஆய்வு கூறுகின்றது. உண்மையில் Pliopithecus நிலையில்தான் ஒரு சிறுவித்தியாசத்துடன் இப்போதும் இருக்கிறோம். அந்த வித்தியாசம் என்னவென நீங்கள் கேட்கலாம். அந்த வித்தியாசம் எமது கைத்தொலைபேசியை எப்பொழுதும் வழுவாது வைத்திருப்பதேயாகும்.

இடப்பெயர்வுகள், யுத்தம் இவற்றுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் கலைவளர்ச்சி ஒன்று இருந்தது. யாழ்.திரைப்படவட்டம், அவைக்காற்று கலைக்கழகம் ஆகியவற்றின் பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கன. அன்றைய யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் இத்துறைகள் வளர ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் ஊக்குவிப்புகளையும் வழங்கினார்கள். அந்தக் காலகட்டத்திலேயே 'அலை', 'சமர்' போன்ற இலக்கியத்தரமான சஞ்சிகைகளும் பெரும் முயற்சியில் வெளிவந்தன. யாழ். இந்துக்கல்லூரி, யாழ்.பல்கலைக்கழகம் இவற்றில் ஓவியக்காட்சிகளும் இடம்பெற்றன. யாழ்.வீரசிங்க மண்டபத்தில் சங்கீத கச்சேரிகளும் நடனங்களும் நிகழ்ச்சி நிரலில் இருந்தன.

இந்த நீட்சி இன்றில்லை. பெரும் வெறுமையுடன் கலை வெறுமையும் ஐக்கியப்பட்டுள்ளன. ஒவ்வொரு கலைஞனும் தனக்கான இருப்பை தக்கவைத்துக் கொள்ள மிகவும் கீழ்நிலைக்கு இறங்கியுள்ளான். பத்திரிகைக்கு கலைஞர்கள் சிலர் கொடுக்கும் பேட்டிக்கும் தனிப்பட்ட அவர்களின் வாழ்வுக்கும் எந்தவிதமான தொடர்பையும் காண முடியாமலேயிருக்கிறது. தங்களைச் சுற்றி 'பெரும் விம்பம்' ஒன்றை ஊதி பெருப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்த கலைஞர்கள் அரச விருதை ஆசையுடன் சென்று பெற்றுமுள்ளனர். அழகியற் கலைகளைப் பொறுத்தவரை யாழ். பல்கலைக்கழகத்தின் தரம் மீது சந்தேகம் ஏற்படுகிறது. ஏனெனில் அங்கிருந்து உற்பத்தியாகுபவர்கள் இங்கு வகுப்பறைகளில் வாண்மையற்றவர்களாகவே மிளிர்கின்றனர். மிகவும் கெட்டிக்காரர்களை இனங்கண்டு அவர்களை உள்நுழையவிடாது வேறுக்கும் கைங்கரியங்களும் நாள்தோறும் நடந்தவாறே இருக்கின்றன. ஏனெனில் 'கெட்டிக்காரன்' தனக்கு அச்சம் தருபவனாக மாறியும் விடுவானோ என்ற அச்சவுணர்வை எப்போதுமே மனதில் பாதுகாத்து மிகவும் இரகசியமாக அதனை வெளிக்காட்டாது அதற்கு வேறும் பல காரணங்களைக் கற்பித்து தமது பதவிகளைத் தக்கவைத்துக் கொள்வதில் முனைப்புடன் செயற்படுபவர்களால் எப்படி ஒரு துறையை வளர்த்தெடுக்க முடியும். வடிவமைப்புகள் பலவற்றை இருட்டடிப்புக்குள் அமிழ்த்துவதன் மூலம் வெற்றிவாகையை சூடினாலும் அவைகள் யாவும் வெளிச்சத்துக்கு வந்து ஓலமிடவே காத்திருக்கின்றன. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE BEST SOURCE FOR ALL YOUR NEWS




**Subscribe Today**

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPERS SINCE 1878

Call : 0712 269 442, 0117 322 783, 0117 322 781
ENCL 185, Grandpass Road, Colombo - 14, Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய செய்திகள்

அன்றைய தினமே!

மாலை EXPRESS

வார நாட்களில் தினமும் மாலையில்

கைக்கடக்கமான நாளிதழ்


Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd. at No.185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org